T 5142

# தமிழில் வசைப் பாடல்கள்

(ஆண்டான் கவிராயன் தனிப் பாடல்கள்)



டாக்டர் ஆ. தசரதன்

Acc: 24953

# தமிழில் வசைப் பாடல்கள்

(ஆண்டான் கவிராயன் தனிப் பாடல்கள்)

டாக்டர் ஆ. தசரதன்

**தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம்**
3/342 குப்பம் சாலை
கொட்டிவாக்கம்
சென்னை 600 041.

1994

Title : Tamiliḻ Vacaip Pāṭalkaḷ (The occasional song of Āṇṭāṉ Kavirāyaṉ

Author : Dr. A. Thasarathan, M.A., Ph.d., Dip. in Ling.
Centre for Preservation of Tamil Palm-leaf Manuscripts
3/342, Kuppam Salai, Kottivakkam, Madras - 600 041.

First edition : December 1994

Price : Rs.35.00 பக்கம் 136

Publication No. : 7

© Centre for Preservation of Tamil Palm-leaf Manuscripts

Typesetted by : **Vasantha Printers,** Adyar, Madras - 20

Printed by : **Pavai Printers (P) Ltd.,** 142 J.J. Khan Road, Royapettah, Madras 600 014. Phone : 832441

Copies can be had from : **CENTRE FOR PRESERVATION OF TAMIL PALM-LEAF MANUSCRIPTS**
3/342, KUPPAM SALAI, KOTTIVAKKAM, MADRAS- 41.

# பொருளடக்கம்

1. அணிந்துரை

2. முன்னுரை

3. தமிழில் வசைப்பாடல்கள்: ஆய்வு

4. ஆண்டான் கவிராயன் பாடல்கள்

5. இணைப்புகள்

6. ஊர்ப்பெயரகராதி

டாக்டர் ஜி. ஜான் சாமுவேல் எம்.ஏ. (தமிழ்),
எம்.ஏ. (ஆங்கிலம்), பிஎச்.டி.டிப். மொழியியல்
ஆய்வுத்திட்ட இயக்குநர்
முதன்மைப் பதிப்பாசிரியர்
(தமிழ் இலக்கியக் கலைக்களஞ்சியம்)

ஆசியவியல் ஆய்வு நிறுவனம்,
சென்னை - 600 041.

28, திருமலைநகர் இணைப்பு
பெருங்குடி,
சென்னை-600 096

# அணிந்துரை

தனியுடைமை தோன்றி வளர்ச்சி பெறாத இனக்குழு சமுதாய அமைப்பில் கவிஞன் என்பவன் சமுதாயத்தின் ஒரு தனித்த அங்கமாகப் பிரித்தறியும் நிலையை எய்தவில்லை. இக்காலக் கட்டத்தில் கவிதையும், மந்திர உச்சாடணங்களும் (primitive magic), தீர்க்கத்தரிசன உரைகளும் (prophecy), இசையும் இணைந்தே இருந்தன. கவிஞனே, தீர்க்கத்தரிசியாகவும், தெய்வ வ்ழிபாடுகளை முன்னின்று செய்பவனாகவும், மருத்துவனாகவும் இச்சமுதாய அமைப்பில் செயல் பட்டான்.

தனியுடைமை தோன்றிய காலத்தில் மேற்கூறிய கவிஞர்களின் ஒரு பகுதியினர் சமுதாயத்தின் ஒரு தனிப்பிரிவாக வளர்ச்சிபெற்று கவிதையைத் தொழிலாக ஏற்று ஆளும் வர்க்கத்தைச் சார்ந்து வாழத்தொடங்கிய தைக் காண்கிறோம். இந்நிலையில் அரசவைக் கவிஞர்களும் (court poets) அரசவைக் கவிதைகளும் (court poems) வளர்ச்சிபெற்று செவ்வியல் இலக்கியம் (classical literature) என்ற தனி இலக்கிய மரபு படிப்படியாக மலரத்தொடங்கியது. இந்த இலக்கியங்கள் அரசு அல்லது கோயில் போன்ற பராமரிப்பு அமைப்புக்களைச் (patronage system of art and literature) சார்ந்து வளர்ந்ததால் சமுதாய அமைப்புக்களோடு இணைந்துபோகும் இயல்பு (conformism) அவற்றின்

தலைமைப் பண்பாகத் திகழ்ந்தது. இந்நிலையில் செவ்வியல் கவிதை ஓரளவிற்குப் புராதன மந்திர உச்சாடணங்களிலிருந்தும், தீர்க்கத்தரிசன உரைகளிலிருந்தும் தன்னை விடுவித்துக்கொண்டு நிர்வாகம் சார்ந்த ஓர் அங்கமாகப் பிறப்பெடுக்கத்தொடங்கியது.

இதற்கு முற்றிலும் மாறுபட்ட நிலையை, புராதனச் சடங்குகளோடும் தீர்க்கத்தரிசன உரைகளோடும், சிறுதெய்வ வழிபாட்டு மரபுகளோடும் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டு பராமரிப்பு அமைப்புக்களை அதிகமாகச் சாராது, சமுதாய மறுப்புப் போக்கினை (confrontism) அடித்தளமாகக்கொண்டு வளர்ந்த நாட்டுப்புற இலக்கியங்களில் காணலாம்.

தொன்மைச் சமுதாயக் கவிதைகளின் இயல்பினைத் தொடக்கக்காலச் செவ்வியல் இலக்கியமான சங்க இலக்கியத்திலும் நாம் ஓரளவிற்குக் காணமுடிகிறது. முழுக்க முழுக்க அரசவையினைச் சார்ந்து நின்ற இக்கவிஞர்கள் சில நிலைகளில் அரசவை மரபுகளை ஏற்க மறுப்பதையும் அரசர்களோடு முரண்பாடு கொள்வதையும் நாம் காண்கிறோம் இவ்வாறு முரண்படும் போதெல்லாம் தங்களிடம் தெய்வீகத்தன்மை இருப்பதாகப் புராதன சமுதாயம் நம்பியதை வலியுறுத்தி மன்னர்களை இவர்கள் எச்சரிக்கைசெய்ய முயல்கின்றனர். இத்தகைய இடங்களில் எல்லாம் இவர்கள் தீர்க்கத்தரிசிகளாகவும், சாபமிடும் ஆற்றல் மிக்கவர்களாகவும், தங்கள் சொற்களால் அழிவை ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டவர்களாகவும் தங்களைக் காட்டிக்கொள்ள முயல்வதுண்டு.

சங்கப்பாடல்கள் பாணர்களை ''முதுவாய்ப் பாண, முதுவாய் இரவல'' போன்ற தொடர்களால் சுட்டுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. இந்த முதுவாய் என்னும் தொடர் தீர்க்கத்தரிசனம், சாபமிடும் ஆற்றல் போன்றவற்றோடு ஏதோ

ஒரு வகையில் தொடர்பு கொண்டுள்ளதைக் காணலாம். வருவது உரைப்பது, (foretelling), சகுனம் காட்டுவது போன்றவற்றோடு தொடர்புடைய பல்லியை இப்பாடல்கள் முதுவாய்ப்பல்லி என்று குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது. பாணர்கள் அல்லது புலவர்களின் இந்த முதுவாயிலிருந்து புறப்படும் மொழியே நிறைமொழியாகவும், மறைமொழியாகவும் அமைந்து விடுவதாகப் பழைய சமுதாயம் நம்பியது. இத்தகைய ஆற்றல்மிக்க பாடல்களை மந்திரம் என்று தொல்காப்பியம் குறிப்பிடும்.

''நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப''

என்பது தொல்காப்பிய நூற்பா. இதற்கு உரைகூறும் ஆசிரியர்கள் நக்கீரர் பாடியதாகக் கருதப்படும் ஒரு பழைய சாபப்பாடலைச் சான்று காட்டுவர்.

குயக்கொண்டான் என்பவன் ஆரியத்தைப் புகழ்ந்து தமிழைப் பழித்ததைக் கேட்டுச் சீறிச்சினந்த நக்கீரர் கீழ்க்கண்டவாறு பாடினாராம்.

''ஆரிய நன்று தமிழ் தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச் - சீரிய
அந்தண் பொதியி லகத்தியனா ராணையாற்
செந்தமிழே தீர்க்கசுவா கா''

தமிழைப் பழித்த குயக்கொண்டான் இதைக்கேட்டதும் மாண்டுவிட்டானாம். இதனை ''தெற்கண் வாய்திறவாத பட்டி மண்டபத்தார் பொருட்டு நக்கீரர் ஒருவனைச் சாவவும் வாழவும் பாடிய மந்திரம்'' என்ற உரைப்பகுதி தெளிவுபடுத்தும்.

இருங்கோவேள் மன்னனின் முன்னோன் ஒருவன் கழாத்தலையார் என்ற புலவனை இகழ்ந்துவிட்டானாம். புலவன் இட்ட சாபத்தால் அவனது நகரான அரையம் அழிந்துவிட்டது. இதனைத் தன்னை மதியாத

இருங்கோவேள் மன்னிடம் கபிலர் கீழ்க்கண்டவாறு நினைவுபடுத்துகின்றார்.

''கோடிபல அடுக்கிய பொருள்நு மக்கு உதவிய
நீடுநிலை அரையத்துக் கேடும் கேள்இனி
நுந்தை தாயம் நிறைவுற எய்திய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்!
நூம்போல் அறிவின் நுமருள் ஒருவன்
புகழ்ந்த செய்யுள் கழாஅத் தலையை
இகழ்ந்ததன் பயனே ------------'' (புறம் 202)

பரிசில் தராத மன்னனை மறைமுகமாகப் புலவர்கள் சாபமிடுவதைச் சங்கப்பாடல்களில் ஆங்காங்கு காணலாம். உலகெங்கிலும் தோன்றிய வீரயுகப் பாடல்கள் அனைத்திலும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் ஏராளம் இடம் பெற்றுள்ளன. இத்தகைய சாபப்பாடல்களில் அங்கத இலக்கியத்தின் கூறுகளும், வசைப்பாடல்களின் பல இயல்புகளும், அறம்பாடுதல் என்ற மரபின் சில தன்மைகளும் இணைந்து காணப்படும். எனினும், இவை அங்கதப்பாடல்களிலிருந்து வேறுபட்டன என்பது தெளிவு. தனிமனிதன் அல்லது ஒரு நிறுவனம் அல்லது ஒரு சமுதாயத்தின் குறைகளைச் சுட்டி அவற்றை நல்வழிப்படுத்தும் போக்கில் அமையும் அங்கதப் பாடல்களின் உயரிய நோக்கை இந்த சாபப் பாடல்களில் காணமுடிவதில்லை. வசைப்பாடல்கள் ஓரளவு அங்கதப்பாடல்களோடு தொடர்புடையன. ஆனால் சாபப்பாடல்கள் இவற்றிலிருந்து வேறுபட்டன. ஆனால் பலநிலைகளில் வசையும் சாபமும் இணைந்து பாடல்கள் தோன்றுவதுண்டு.

இந்நூலில் ஆராய்யப்பட்டுள்ள ஆண்டான் கவிராயன் என்பவன் வசைப்பாடல்கள், சாபப்பாடல்கள் என்ற இருவகையான பாடல்களைத் தனித்தனியாகவும், இணைந்தும் ஏராளம் பாடிக்குவித்த ஒரு கவிஞனாகத்

திகழ்கிறான். சமுதாயத்தோடும் சமுதாய அமைப்பு களோடும் முரண்படும் இக் கவிஞன் பல நிலைகளில் சினத்தோடு அலையும் பழைய தீர்க்கதரிசிகளை ஒத்துக் காட்சிதருகின்றான். சாபப்பாடல் பாடிய சில சங்கப்புலவர்கள், மந்திரப்பாடல் உரைத்த குயக்கொண்டானை மாய்த்த நக்கீரர் ஆகியோரின் தொடர்ச்சியாக ஆண்டான் கவிராயனைக் கருதிப்பார்ப்பது ஏற்புடையது.

வசைகவி ஆண்டான் என்று தொடர்ந்து இவன் தலைமுறை தலைமுறையாகச் சுட்டப்பெறுவதால் அதனை உடன்பட்டு இந்நூலுக்குத் தமிழில் வசைப்பாடல்கள் என்று தலைப்புக் கொடுத்துள்ளார். எனினும் ஆண்டான் கவிராயன் பாடல்களில் வசைப்பாடல்களைவிட சாபப் பாடல்களே அதிகமாக உள்ளன என்பது சுட்டுவதற்குரியது. அரசவையினையோ, நிலப்பிரபுக் களையோ, கோவில்களையோ முழுக்கச் சார்ந்து நிற்காது தன்னிச்சையாக நாட்டுப்புறக் கவிஞர்களைப் போன்றும், சித்தர்களைப் போன்றும் ஊர் ஊராக அலைந்து திரிந்து தனது சினத்தையும், சமுதாய, தனிமனித வெறுப்பையும் கவிதைகளில் எரிமலைபோல் வெளியிட்டு நெஞ்சக் குமுறல்களையெல்லாம் அதிகக் கலையுணர்வோ, சமுதாயப் பொறுப்புணர்வோ இன்றி வெளிப்படுத்தி நின்ற ஒரு வயிற்றெரிச்சல் கவிஞனாகவே பொதுநிலையில் இவன் தென்படுகின்றான். இவன் வாழ்ந்த காலத்தில் இவனைக் கண்டு மக்கள் அஞ்சினர். இவனை இன்றைய தலைமுறையினரும் அச்சத்தோடு எண்ணிப்பார்க்கின்றனர். தமிழிலக்கிய வரலாற்றில் ஏராளமான சாபப்பாடல்களைப் பாடி பிறரைத் துன்புறுத்திய கவிஞன் இவனைவிட யாரும் இல்லை எனலாம். அவ்வாறே தான் வாழ்ந்த சமுதாயத்தைக் கவிதையால் அஞ்ச வைத்தவன் இவனைப்போல் வேறு எந்தக் கவிஞனும் இல்லை என்று தோன்றுகின்றது. இந்த,

வகையில் தமிழிலக்கிய வரலாற்றில் இவன் மிகவும் குறிப்பிடத்தக்கவனாக அமைந்துள்ளான்.

பலருக்கும் தெரியாத இக்கவிஞன் பற்றி முதன்முதலில் விரிவான நூல் ஒன்றினைத் தயாரித்துள்ள டாக்டர் ஆ. தசரதன் பாராட்டிற்குரியவர். டாக்டர் உ.வே. சாமிநாதையர் தரும் குறிப்புகள், அபிதான சிந்தாமணி தரும் செய்திகள், புலவர் புராணம் தரும் விபரங்கள் ஆகியவற்றோடு மட்டும் நில்லாது கள ஆய்வு செய்து வாய்மொழியாகத் தொடர்ந்து வழங்கிவரும் இக்கவிஞனின் பல பாடல்களையும் இக்கவிஞனின் பாடல்களின் தன்மை பற்றிய டாக்டர் தசரதனின் நீண்ட ஆய்வுரை நூலுக்கு சிறப்பாக அணி சேர்க்கின்றது. ஆண்டான் கவிராயன் பாடிய சில பாடல்களைக் காளமேகம் பாடியதாகக் கருதுவதையும் காளமேகம் பாடிய பல பாடல்களை ஆண்டானின் பாடல்களாகக் குறிப்பிடுவதையும் சுட்டிக்காட்டி தகுந்த சான்றுகளுடன் ஆசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார்.

பழிவாங்கும் நோக்கத்தோடு பாடிய ஆண்டானின் மறச்சினம் சில வேளைகளில் அறச்சினமாகவும் பரிணமிப்பதைப் பார்க்கின்றோம். கன்றுக்குப் பால் ஈயாது கறந்தவள் மீது அவன் பாடிய நிகழ்ச்சி இதனைத் தெளிவுபடுத்தும். ஆண்டான் பாடிய காளிமடல், வசைபுராணம் போன்ற நூல்கள் கிடைக்கவில்லை என்பது உண்மையிலே வருந்துவதற்குரியது. இந்நூல்கள் இக்கவிஞன் பற்றி மேலும் பல புதிய வெளிச்சங்கள் கிடைக்கத் துணைபுரிந்திருக்கும். பல இடங்களுக்குச் சென்று அங்கு வாழ்ந்த கவிஞர்களோடு போட்டிக்கவிகள் பாடி ஆண்டான் கவிராயன் சிறப்புப்பெற்றான் என்பதையும் நாம் அறிய முடிகின்றது. ஒரு தேங்காயை முன்னர் வைத்துக்கொண்டு துண்டு, துண்டு, துண்டு, துண்டு என்று சொற்களை அமைத்துப் பாடி தேங்காயைத் துண்டு துண்டாகச்

சிதறவைத்து அனைவரின் பாராட்டுதலையும் பெற்றான் என்ற செய்தி இவனை ஆசுகவிபாடும் கவிக்குடும்பத்தோடு இணைய வைக்கின்றது.

தமிழ் இலக்கிய உலகிற்கு அதிகம் தெரியாத ஒரு கவிஞன் பற்றிய செய்திகளையெல்லாம் அரிதாகத் தொகுத்து, அழிந்துபோன அவன் பாடல்களில் தன்னால் முடிந்தவற்றையெல்லாம் திரட்டி, அக்கவிஞன் தொடர்பாக எழும் பல்வேறு குழப்பங்களுக்குத் தக்க சான்றுகளுடன் தெளிவு தேடித்தந்து, செவிவழியாக வரும் செய்திகளை கள ஆய்வு செய்து தொகுத்து அவற்றை அவன் பாடல்களோடு இணைத்து ஆய்ந்து ஒரு நல்ல நூலைப் படைத்துள்ள இவ்வாசிரியரின் முயற்சி பலநிலைகளிலும் பாராட்டுவதற்குரியது.

**ஜி. ஜான் சாமுவேல்**

***16-9-1993***

# முன்னுரை

நம் தாய்மொழியாம் தமிழ் மொழி, பழந்தமிழ் இலக்கணங்களையும், இலக்கியங்களையும், காவியங்களையும், புராணங்களையும், சிற்றிலக்கியங்களையும் மிகுதியாகப் பெற்றுச் செழித்து, உயர்தனிச் செம்மொழியாகத் திகழ்கின்றது. இதற்கு மேலும் அணி சேர்க்கும் விதத்தில் தனிப் பாடல் இலக்கியம் என்னும் இலக்கிய வடிவம் அமைந்துள்ளது. எண்ணிலடங்கா தனிப் பாடல்களுள் இதுவரை தொகுக்கப் பெற்றவை சில ஆயிரங்களே. பல்லாயிரக்கணக்கான பாடல்கள் மக்கள் நினைவில் பதிந்துள்ளன. அவற்றுள் சிலவற்றை ஒலைச் சுவடிகளிலும் அவர்கள் எழுதிவைத்துள்ளனர். அப்பாடல்களைத் திரட்டித் தொகுக்கும் பணியில் நான் காலடி வைத்ததின் காரணமாக இந்நூல் எழுந்துள்ளது.

தனிப் பாடல்கள் பாடியோரில் தலைசிறந்தவராகக் கவி காளமேகத்தைத் தமிழறிஞர் குறிப்பர். காளமேகத்தின் பல கவிதை முயற்சிகளுள் அவரைச் சிலேடைக் கவிஞராகவே அவர்கள் போற்றுவர். காளமேகம் வசைப் பாடல்களையும் பாடினாரேனும் அவரை வசை(க்) கவி எனக் கூறுவதில்லை. அவ்வாறான பட்டத்தைத் தட்டிக் கொண்டு சென்ற ஒரே கவிஞனாக ஆண்டான் கவிராயன் திகழ்கின்றான். தமிழிலக்கிய வரலாற்றில் வேறு எப்புலவனும் பாடாத வசைப் பாடல்களைப் பாடித் தனக்கென ஓர் அழியா இடத்தை அவன் பெற்றுள்ளான்.

தமிழறிஞருள் ஆண்டான் கவிராயனை அறிந்தோர்

விரல்விட்டு எண்ணிவிடக் கூடிய அளவினரே. ஆனால் தென்பாண்டி நாட்டுப் பாமர மக்களுள் பலர் வாழையடி வாழையாக அந்த வசை(க்) கவிஞனைத் தம் நினைவில் நிறுத்தியுள்ளனர். அவன் பாடிய வசைகள் பலித்துவிட்டதால் ஏற்பட்ட பயத்தினால் அக் கவிஞனுக்கு இவ்வாறான அழியாத இடம் கிடைத்துள்ளது.

தென்பாண்டி நாட்டு வரலாற்றினை எழுதும் முயற்சியில் ஈடுபட்ட காலத்தில் ஆண்டான் கவிராயனின் வசைப் பாடல்களையும் திரட்டும் பணி எனக்குக் கிட்டியது. இப் பாடல்கள் முழுமையாக என்னால் இன்னும் திரட்டப் பெறவில்லை என்ற குறை இருந்து வருகிறது. காலப் போக்கில் ஆண்டான் கவிராயனின் பிற பாடல்களையும் திரட்டித் தொகுக்க முடியும் என்ற உறுதியுமுள்ளது. அதற்குத் தமிழுலகம் உதவும் என நம்புகிறேன்.

டாக்டர் ஆ. தசரதன்

எண்.11, இராஜாஜி நகர்.
திருவான்மியூர்,
சென்னை – 600 041

# தமிழில் வசைப்பாடல்கள்

## 1. வசைப்பாடல்கள் இயல்பு

ஒருவர் மற்றொருவரைச் சொற்களால் திட்டுதல் எவ்விடத்தும் காணப்படுவது ஆகும். சினம் காரணமாகவோ, பொறாமை காரணமாகவோ, வயிற்றெரிச்சல் காரண மாகவோ அல்லது வேறு வகையிலோ இச் செயல் ஏற்படு கின்றது. சான்றாக ஒரு தாய் தன் மகன் அல்லது மகள் தான் சொல்லும் பணியைச் செய்யாதிருக்கின்றபோது திட்டுகிறாள். 'நீ நாசமாகப்போக', 'நீ விளங்காமப்போக', போன்ற அழிவு வார்த்தைகளால் திட்டுகிறாள். இதைப்போல, படிக்காத மாணவனை ஆசிரியர் திட்டுகிறார். கணவன் மனைவியைத் திட்டுகிறான். பொருளில்லாதவன் பொருள் கொடாதவனைத் திட்டுகிறான். தவறு செய்தவனைப் பாதிக்கப்பட்டவன் திட்டுகிறான். இவ்வாறு ஒருவரை மற்றொருவர் திட்டுவது எல்லாவிடத்தும் ஏற்படும் இயல்பான தன்மை ஆகும்.

குடும்பம், சமூகம், நாடு என அமைந்துள்ள மனித வாழ்வில் ஏற்படும் பல நிகழ்ச்சிகளுள் ஒருவரை மற்றொருவர் திட்டிக் கொள்வதும் தவிர்க்க இயலாததாகி விட்டிருக்கிறது.

திட்டுவதில் சில வகை உண்டு.

1. சாதாரண சொற்களால் திட்டுதல்
2. கெட்டவார்த்தைகளால் திட்டுதல்
3. அழிவு வார்த்தைகளால் திட்டுதல்

போன்றன. இவ்வாறு திட்டுவதில் நேருக்கு நேராகத் திட்டுவதும், மறைந்து நின்று திட்டுவதும் அன்றாட வாழ்வில் இயற்கையாக நடப்பதைக் கண்ணுறுகிறோம்.

ஆனால், புலவர்கள் பிற புலவர்களையோ, பொருள் தராதவர்களையோ, தனக்குப் பிடிக்காத பிறரையோ தம் பாடல்களில் திட்டுதல் உண்டு. இதனை **வசை பாடுதல்'** எனத் தமிழிலக்கிய மரபு கூறும். இதன் காரணமாக எழுந்த பாடல்கள் **வசை(க்)கவி** என வழங்குகின்றன.

புலவர்கள் 'அறம் பாடுதல்' உண்டு. அறம் பாடுதலின் போது கெடுதலையுண்டாக்கும் சொற்கள் மறைமுகமாக இருக்கும். ஆனால் வசைபாடும் போது வசைச்சொற்கள் வெளிப்படையாக அமையும்.

**அங்கதம்**

இந் நிலையில்தான், தமிழில் எழுந்த பண்டைய இலக்கண நூலான **தொல்காப்பியம்**, இவ்வகையான திட்டுதல்—வசை — அறம்பாடுதல் போன்றவற்றை ஆராய்ந்து அங்கதம் என அவற்றைக் குறிப்பிட்டு, அவ்வங்கதம் செம்பொருள் அங்கதம், பழிகரப்பங்கதம் என இருவகைப்படும் என வரையறுத்தது. இவ்விரு வகைகளிலும் சில உட்பிரிவுகள் உள.

**தொல்காப்பியமும்**, அதன் உரைகளும் அங்கதம் பற்றிக் குறிப்பிடும் விளக்கங்களிலிருந்து, 'பாடல்களில் இகழ்ச்சிக் குறிப்புக்களை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் வைத்துப்பாடுதலே' அங்கதம் எனும் இலக்கிய வகை எனத் தெரிந்து கொள்ள முடிகிறது. அவ்வாறாயின் காளமேகம், ஆண்டான் போன்ற வசை(க்)கவிஞர்கள் இவ்வாறான இகழ்ச்சி அல்லது எள்ளி நகையாடுதலைச் சாதாரண மாகவும், கடுமையாகவும் தம் பாடல்களில் செய்துள்ளனர்.

மேலும், இவர்களைப் போன்றோரின் வசைப்பாடல்களை ஆராயுமிடத்து அவற்றுள் சில பாடல்கள் செம்பொருள், பழிகரப்பு' எனும் இரு பிரிவின் கீழ் அமையாமல் சபித்தல் அல்லது சாபமிடுதல் எனும் நிலையில் அமைந்திருப்பதைக் காணமுடியும். ஆண்டான் கவிராயனின் பெரும்பான்மையான பாடல்களில் சபித்தலின் காரணமாக ஏற்படும் அழிவுகளில் மானிடர் இறத்தலும், பொருள் அழிதலும், மக்கள் உணவு தொடர்பான இழிவும் ஏற்பட்டுள்ளன. எனவே, இவ்வகை விளைவுகளை ஏற்படுத்தும் பாடல்களின் இயல்பைத் தெரிந்துகொள்வது இன்றியமையாதது ஆகும்.

தெய்வசக்தி அல்லது மந்திர சக்தி அல்லது சித்தி கைவரப்

பெற்றோர் மட்டுமே இவ்வகை விளைவுகளை ஏற்படுத்தும் சொற்களையோ, பாடல்களையோ பாடமுடியும். காளமேகமும் ஆண்டான் கவிராயனும் அவ்வகையினரே.

### சாபமிடுதலின் வகைகள்

புராணங்களில் முனிவர்கள் தவறு செய்பவர்களைச் சபித்தலைப் பலவிடங்களில் காண்கிறோம். கடவுளர்களும் இவ்வாறு தம்மைப் போன்றவர்களையோ, பிறரையோ சபித்தல் உண்டு. தெய்வசித்தி உள்ளவர்கள் தம்முள் மாறி மாறிச் சபித்தலும் உண்டு. இதனைச் சாபமிடுதல் என்பர். கண்ணகி மதுரை தீப்பற்றச் சபித்தலை இலக்கியம் உணர்த்துகின்றது.

நம்முள் சிலர் மற்றவர்களைத் திட்டுவதும், சண்டையிடுவதும் இறுதியில் சாபமிடுதலும் உண்டு. அவ்வாறு சொற்களால் சாபமிட்டுக் கொண்டே தெரு மண்ணை அள்ளி வீசுவதுமுண்டு. சிலர் தம் மார்பில் அறைந்துகொண்டு சாபமிடுதலும் உண்டு. இதனால் சபித்தல் அல்லது சாபமிடுதல் அழிவுச் சொற்களால் வசைபாடுதலை ஒத்து விளங்குகின்றது என்பதை அறியலாம். சபித்தல் அல்லது சாபமிடுதல் ஓரிரு சொற்களாலோ தொடர்களாலோ அமையும். வசைபாடுதல் என்பது பாடல் அமைப்பில் அமையும். அவ்வாறு அமைவதால் இலக்கிய முக்கியத்துவம் அதற்குக் கிடைக்கின்றது.

### கரு நாக்கு

சாபமிடுதல் எல்லோருக்கும் உரியது. நாக்கு இருந்தால் சபித்து விடலாம். சிறுவர்கள் ஏதாவது சாபவார்த்தைகள் கூறினால் அவர்களின் நாக்கினைச் சோதனை செய்வர். கருநாக்கு உடையவர்கள் திட்டினால் பலிக்கும் என்பர். கருநாக்கு என்பது நுனி நாக்கிலும் நடுவிலும் கரும்புள்ளிகள் காணப்படுவதால் ஏற்பட்ட பெயர். இக்கருப்புப் புள்ளிகளுக்கும் சாபத்திற்கும் எப்படியோ மக்கள் தொடர்பு ஏற்படுத்திவிட்டனர். ஆனால் இந்த நிலை சிறுவர் மத்தியில்

தான் நிலவுகிறதே அன்றிப் பெரியவர்கள் தொடர்புறு வதன்று.

### பெரியவர்கள் சபித்தல்

மக்கள் ஒருவர்க்கொருவர் சபித்தலைச் சாதாரணமாக எவ்விடங்களிலும் பார்க்கலாம். சபித்தல் அவர்களுக்கு எளிதாக இருக்கலாம். அது பலிக்குமா பலிக்காதா என்பது அவர்களுக்கு நோக்கமன்று. நாங்கள் எங்கள் அம்மாவுக்குக் கீழ்ப்படியாத நேரங்களில் அவர்கள் இப்படி எங்களைச் சபித்தல் உண்டு. பல வகையான தொடர்கள் அப்போது வெளிப்படும். பிச்சை எடுத்தல், கொள்ளை நோயில் போதல், கொடிய நோய் உடம்பில் உண்டாதல், இடிவிழுதல், பண்டாரமாகத் திரிதல் போன்றவை தொடர்பாக அவ்வார்த்தைகள் வெளிப்படும். ஆனால் நாங்கள் யாரும் அவ்வாறு ஆகவில்லை. இதனால் யார் சாபமிட்டாலும் பலித்துவிடும் என்பது பொருளன்று.

### சாபமிட்டார்க்கு எதிர் விளைவு

சிலர் பொறாமை காரணமாகச் சாபமிடுவர். அவ்வாறு சாபமிடுபவர்களே அச்சாபத்திற்குப் பலியாகிப் போவர். 'உன் குடும்பம் நாசமாகப்போகும்' என்பர். சொன்னவர் குடும்பமே நாசமாகும். எனவே சாபமிடுதல். எதிர் விளைவுகளையும் ஏற்படுத்தும் என்பது பொதுவான முடிவு. ஆயினும் இதில் சில புறனடையும் உண்டு. சிலர் மற்ற வர்களைச் சபித்துச் சபித்தே உயர்ந்துவிடுகின்றனர். இந் நிலையையும் நாம் கண்ணுறலாம். எனவே சபித்தலின் போது எதிர்விளைவோ, சாதகமான நிலையோ ஏற்படுவ தற்கெனச் சிறப்பான காரணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

### மந்திர தந்திரங்களால் ஏவி விடுதல்

சிலர் தங்களின் எதிரிகளை அழிப்பதற்கு மந்திர தந்திரங்களைக் கையாளுவர். இவ்வகையான செயலை இங்கு

நாம் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. இதுவும் மந்திரம் செய்வோரையும் செய்யப்படுவோரையும் விளைவுகளுக்கு ஆட்படுத்திவிடும்.

**சாபங்களும் சாப விமோசனங்களும்**

முனிவர்கள் அல்லது கடவுளர்கள் சாபமிட்டுக் கொண்டே நீர் வார்ப்பதையும் அல்லது வேறு பொருள்களை வீசுவதையும் நாம் அறிவோம். மண்ணை அள்ளி வீசுதல் முன்பு சொல்லப் பெற்றது. இவ்வாறு சாபமிடும் போது துணைச் செயல்களாகச் சிலவற்றை மேற்கொள்ளுதலையும் காணமுடியும்.

சாபங்களுக்கு விமோசனங்கள் உண்டு. சாபமிட்டவரே சாபவிமோசனமும் செய்துவிடுவர். புராணங்களிலிருந்து இதற்குச் சான்று பகரலாம். சிலர்க்குச் சாபமிடவே தெரியும். சாப விமோசனம் செய்யத் தெரியாது. எனவே சாப விமோசனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான விமோசனங்கள் தெய்வ சித்திகளால் ஏற்படுதலைப் பொதுவாக அறிந்துகொள்ள முடிகிறது. மந்திரங் களினாலும், அறிவாற்றலினாலும் சாப விமோசனங்களை மேற்கொள்ளுதலையும் பார்க்க முடிகிறது.

சாப விமோசனங்கள் 'சவாலாக' அமைதல் உண்டு. சான்றாக 'உருப்படமாட்டாய்' எனக்கூறும் ஆசிரியரின் சாபத்தை நன்றாகப் படித்து நல்ல மதிப்பெண் எடுத்து அம் மாணவன் உடைத்து விடுதலுண்டு. இதைப்போன்றே பெற்றோரிடும் சாபத்தைப் பிள்ளைகள் விமோசனப்படுத்திக் கொள்வதுண்டு. பிறர் தம்மீது கூறும் சாபத்திற்குப் பரிகாரமாக அறிவுப்பூர்வமாகக் காரியங்களைச் செய்து அவற்றிலிருந்து தம்மை நிவர்த்தி செய்கிறவர்களும் உண்டு.

எனவே சாபமிடுதலில் பல வகைகள் இருப்பதுபோல் சாப விமோசனங்களிலும் பல வகைகள் உள.

### சாபமிடுதலுக்குரிய குணாதிசயங்கள்

சாபமிடுதலுக்குத் தனியாக எவ்வித குண நலன்களும் இருப்பதாகத் தெரியவில்லை. சாபமிடுதலுக்கும் உடற் கூறுகளுக்கும் தொடர்பு இல்லை. எனவே யார் வேண்டு மானாலும் சாபமிடலாம். ஆனால் சாபம் பலிப்பதைப் பொறுத்தே அச்சிறப்புக் குணநலன்கள் உரியோர் எப்படிப் பட்டவர் என அறியமுடியும்.

1. பதிவிரதைகள்
2. தவ வலிமை உடையோர்
3. தெய்வசித்தி பெற்றவர்கள்
4. மந்திரசக்தி பெற்றவர்கள்
5. துர்தேவதைகளின் மூலம் மந்திரம் செய்வோர்

இவ்வகைத் திறமைகள் கொண்டவர்கள் சாபமிட்டால் பலிக்கும் என்பர்.

### 2. தமிழில் வசை கவிஞர்கள்

தமிழில் வசைப்பாடல்கள் பாடிய புலவர்கள் மிகச்சிலரே ஆவர். வெண்பாவிற்குப் புகழேந்தியைப் போல, விருத்தத் திற்குக் கம்பனைப் போல, கோவை–உலா– அந்தாதிக்கு ஒட்டக் கூத்தனைப் போல, கலம்பகத்திற்கு இரட்டையர்கள் போல, வசை பாட ஒரு காளமேகம் இருந்ததைத் தனிப்பாடலொன்று குறிப்பிடுகின்றது. ஆயினும் அப் புலவன் பாடிய வசைப் பாடல்கள் மிகச் சில. சிலேடைப் பாடல்களோ எண்ணில.'பிற்காலக் காளமேகம்' எனவும் 'வசைகவி ஆண்டான்' எனவும் பெயர் அடைந்த ஆண்டான் கவிராயனே முழுக்க முழுக்க வசைப்பாடல்களை – சாபப் பாடல்களைத் தமிழில் பாடிய கவிஞன் ஆவான்.

காளமேகத்துடன் ஆண்டானை ஒப்பிடுதல் தகும். அவனும் காளிவரம் பெற்றவன், இவனும் காளிவரம் பெற்றவன் என வழங்கப்படுகின்றது. அவ்வாறு கிடைத்த வரத்தினால்

தமிழில் சிலேடைப் பாடல் இலக்கியம் தழைக்கச் செய்தவன் காளமேகம், வசைப் பாடல் இலக்கியம் வழங்கச் செய்தவன் ஆண்டான் கவிராயன்.

ஆண்டான் கவிராயன் பாடிய பல வசைப்பாடல்கள் தனிப்பாடல்களாகத் தென்பாண்டி நாட்டில் வாய்மொழியாக வழங்கிவருகின்றன. அவை குறிப்பிட்ட சில ஊர்கள், அவ்வூரார் தொடர்பான பழக்கவழக்கங்கள் குறித்து அமைந்து இன்றும் பொருந்துவதாக உள்ளன. அவற்றைத் தொகுத்து, ஆண்டான் கவிராயன் தொடர்பான வாய்மொழிக் கதைகளை முறைப்படுத்துவதன் மூலம் அவனது காலத்து வரலாறு, ஊர்களின் இயல்பு போன்றவற்றைத் தெரிந்து கொள்ள இயலும்.

## 3. தனிப்பாடல்கள் வரலாறு

'சிறுதுளி பெருவெள்ளம் போல்' பல காலகட்டங்களில் பலரால் பாடப் பெற்ற தனிப்பாடல்களைத் தொகுத்ததன் காரணமாக இன்று நமக்குப் **புறநானூறு, அகநானூறு** போன்ற சங்க இலக்கியங்கள் கிடைத்துள்ளன. கற்பனை மிகுந்த வருணனைப் பகுதிகள் கொண்ட நீண்ட சங்கப் பாடல்கள் பிற்காலத்துத் தோன்றியவை என்பர். காப்பியங்கள் பெரிய அளவு கொண்டதாக இருந்தன. சமயப் பாடல்கள் பத்துப்பத்தாகவோ நூறு நூறாகவோ அமைந்தன. இடைக்காலத்தும் பிற்காலத்தும் எழுந்த பிரபந்தங்கள் காவியங்களைவிடச் சிறிதாக அமைந்திருந்தன.

தனிப்பாடல்கள் எனும் தனி இலக்கிய வகைப் பாடல்கள் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தை வரையறுப்பவை. சங்கப் பாடல்கள் சிலவற்றையும் அதனை அடுத்து எழுந்த சில பாடல்களையும் நாம் தனிப்பாடல்களாகக் கருதித் தனிப் பாடல் தொகுப்பில் இடம் பெறச் செய்கிறோம். ஆனால் அவற்றுக்கும் மேலாகப் பல உதிரிப் பாடல்களைத் தொகுத் துத் **தனிப்பாடல்கள் திரட்டு** எனப் பெயரும் இடுகின்றோம். இவ்வாறான பல தனிப்பாடல்கள் இடைக்காலத்திலும் பிற காலத்தும் பாடப்பெற்றவை.

ஒவ்வொரு தனிப்பாடலுக்கும் ஒரு வரலாறு உண்டு. தனிப்பாடலுக்குரிய விளக்கத்தை இவ்வாறுதான் வரையறுக்க இயலும். ஒரு வரியிலோ நான்கு வரிகளிலோ இந்த வரலாற்று விளக்கம் அமைந்துவிடும். அவை ஒவ்வொன்றும் ஓர் ஊரின் இயல்பையோ அல்லது ஒரு சாதியினரின் இயல்பையோ கூறுவனவாக உள்ளன.

இந்நிலையில் அவை ஔவையாரின் தனிப்பாடல்களை யும், இரட்டையர்களின் பாடல்களையும், காள மேகத்தின் பாடல்களையும் ஒத்தவை. ஔவையார் கூழுக்கும், கீரைக்கும், நெல்லிக்கனிக்கும், ஆடைக்கும் பாடல்கள் பாடியுள்ளார். ஆனால் வசை எதுவும் பாடவில்லை. இரட்டையர்களும் காளமேகமும் வசையும் பாடியுள்ளனர். ஆண்டான் கவிராயனோ உணவுப் பொருள்களைப் பற்றிப் பாடினாலும் வசைப்பாடல்கள் மட்டுமே பாடியுள்ளான். இது அவ்வக்கால இயல்பை வெளிப்படுத்துகின்றது.

ஔவையார் காலத்தில் குறுநில மன்னர்கள், வள்ளல்கள் அவ்வம்மையாரை ஆதரித்தனர். ஔவை மேற்கொண்ட பயணங்களும் குறிப்பிட்டனவாகவே இருந்தன. இரட்டை யர்கள், காளமேகம் ஆகியோர் காலத்தில் பிராந்தியத் தலைவர்கள் மிகுதி. அவர்களை அண்டிப் பிழைத்த புலவர்கள் மிகுதி. எனவே அப்புலவர்களை வென்று, புரவலர்களின் அன்பைப் பெறுவதற்குரிய கவித்துவத் திறமை தேவையாக இருந்தது. தலயாத்திரையின்போது தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்குக் காளமேகத்தின் சொல்வன்மை துணையாக இருந்தது. அவரது பாடல் பல புலவர்களை வதைத்தது; அவரிடம் வம்பு செய்தவர்களையும் உதைத்தது. ஆனால் ஆண்டான் கவிராயன் காலத்தில் போட்டிப் புலவர்களுக்குப் பஞ்சமோ அல்லது ஆண்டானிடம் யாரும் போட்டிக்கு வரவில்லையோ தெரியவில்லை. அல்லது வெறும் பண்டாரமாக அவனை நினைத்து அவர்கள் ஒதுக்கியி ருக்கலாம். அதனால் தான் அவனது வசை கவிகள் பெரும் பாலும் ஊராரை மட்டுமே சபித்துள்ளன.

## 4. வசைப்பாடல்கள் திரட்டிய வரலாறு

*1984*–ஆம் ஆண்டு நண்பர் சு.தங்கதுரை அவர்கள் தாம் பதிப்பித்த **பலவேசஞ்சேர்வைக்காரர்** என்ற நூலுக்கான முன்னுரையைப் பார்த்துத் தருமாறு கூறினார். அதில் 'குட்டம் குடுகுடுங்க.... ' என்ற பாடலை அவர் சேர்த்திருந்தார். அரசூர் எனும் ஜமீன் தொடர்பான அப் பாடல் அப்பொழுது எனக்கு எவ்விதப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

*1989*–இல் ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தில் அதே **பலவேசஞ்சேர்வைக்காரர்** கதையைப் பதிப்பித்தபோது அக் கதையில் வரும் ஊர்ப்பெயர்கள், அக் கதை வழங்கப்பட்ட இடங்கள் போன்றவற்றைப் பதிப்பாசிரியர்களுள் ஒருவன் என்ற முறையில் நான் அறியமுற்பட்டேன். எனக்கு மூலப் பொழி திரு ச. மண்டக்ராஜா அவர்கள் மிகவும் உதவியாக இருந்தார். அன்னாரிடமிருந்து ஆண்டான் கவிராயன் அரசூர் அழியப் பாடியதோடன்றித் திருச்செந்தூரில் பூசை தடையின்றி நடக்குமாறு 'மூவர் பல்லக்கு மூலையில் சாத்த ...' எனும் வசைப்பாடலையும் பாடியமையையும் அறிந்தேன்.

மருதூர் அணை தொடர்பான கதை, ஆழ்வார் திருநகரி மேலமாடவீதி மண்ணாக்கப் பாடியது, திருச்செந்தூர் தொடர்பான பிற பாடல்கள், காயல் பட்டினம், கயத்தாறு பற்றிய பாடல்கள் போன்ற பாடல்களும் அவற்றுக்கான வரலாறுகளும் திரு. மண்டக்ராஜா அவர்கள் மூலம் கேட்டறிந்தேன்.

தென்பாண்டி நாட்டில் தாமிரபரணி ஆற்றுக்கு வடக்கே தமிழ்ச் சுவடிகள் தேடிச் சென்ற டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் தம் அனுபவத்தைக் கட்டுரைகள் வாயிலாகவும், சில குறிப்புக்களாலும் எழுதியுள்ளார்கள். ஆறுமுக மங்கலம், ஆத்தூர், சொக்கப் பழங்கரை பற்றிய பாடல்கள், அவை தொடர்பான கதைகள் போன்றவை டாக்டர் ஐயரவர்களால் குறிக்கப்பெற்றவையே. அவற்றையும் இங்கே எடுத்தாண்டுள்ளேன்.

## அழிப்பாங்கதைப் பாடல்கள்

இத்தலைப்பில் எனது சுவடி நூற்பதிப்பின்போது, பெருங்குளம், நட்டாத்தி போன்ற ஊர்களின் வரலாற்றை அறிவது மிகவும் இன்றியமையாதிருந்தது. அப்போது நட்டாத்தி பற்றிய ஆண்டானின் பாடல் ஒன்றும் சொல்லப்பட்டது. நட்டாத்தி ஊரினரான வழக்குரைஞர் திரு மவ. ஆனந்தகுமார் அவர்களிடம் கேட்டபோது, அவர்கள் நட்டாத்தியில் நல்ல தண்ணீர் இல்லாதுபோகும்படியாக ஆண்டான் சாபமிட்டது, மங்கலக்குறிச்சி மடை பாழாகச் சாபமிட்டது, தென்திருப் பேரை அக்கிரகாரப் பெண்களின் நடத்தை மோசம் பற்றிப் பாடியது போன்றவற்றறைக் கடிதம் மூலமாகத் (11.7.90, 28.7.90) தெரிவித்ததார். பின்பு நேரிலும் (13.8.90) கேட்டுத் தெரிந்து கொண்டேன். ஆண்டானின் வசைப்பாடல்கள் முழுவதும் ஆனந்தகுமார் அவர்களின் தாயாருக்கு மனப் பாடமாம். அன்னாரின் தாயார் பலமுறை அவர்களுக்குச் சொன்னார்களாம். தென்திருப்பேரை தொடர்பான பாடலைத் தவிர்த்து மீதி எல்லாவற்றையும் சொன்ன அவ்வம்மையார் ஓராண்டுக்கு முன் இறந்துவிட்டார்கள். ஆனால், ஆண்டானின் பாடல்கள் முழுமையாகக் கிடைக்கும் வாய்ப்பை இழந்துவிட்டேன். ஆயினும் இன்னும் பல முதியோர் அப் பாடல்களை நினைவு வைத்திருப்பர். அவர்களை அணுகிக் கேட்கும் போது அப் பாடல்களின் முழு வடிவங்களையும் பெறமுடியும் என நம்புகிறேன்.

காணியாளன்புதூர் சிவபெருமாள் நாடார் (18—8—88) எனக்குத் தந்த ஓலைச்சுவடிகளில் ஒன்று "ஆண்டான் கவிராயன் சொன்னது" என இருந்தது. இதில் இரு ஓலைகளிருந்தன. முதல் ஓலையில் ஆறு பாடல்கள் இடம் பெற்றிருந்தன. இரண்டாம் ஓலையில் இடம் பெற்றிருந்த நான்கு பாடல்கள் வேறுதனிப் பாடல்களாகத் தெரிகின்றன. இவற்றை இணைப்பு 6—ல் சேர்த்துள்ளேன்.

மஞ்சள்நீர்க் காயல் மைனர் துரைசாமிநாடார் அவர்கள் வாழவல்லான் பற்றிய பாடல் ஒன்றைக் கூறினார்.

அடையாறு பாண்டி நாடார் அவர்கள் 'மோர்' பற்றிய பாடலைக் கூறி விளக்கமும் தந்தார்.

குரும்பூர் பற்றிய பாடலை மேலப்புதுக்குடி இராமையா நாடார் கூறி விளக்கமும் நல்கினார்.

குட்டம் இராசமார்த்தாண்டன் அவர்கள் ஆண்டான் கவிராயன் அங்கு வந்து கணியான் கூத்து ஆடுவது தொடர்பான குட்டத்து ஊரினருக்கும் காயாமொழி ஊரினருக்கும் முன்பு இருந்துவந்த சிக்கலை விடுவித்ததாகவும் 'குட்டத்து நாட்டாரும் காயங்குளத்தாரும்' என அவன் பாடினான் என்றும் குறிப்பிட்டார்.

இவ்வாறு தென்பாண்டியில் வாய்மொழியாக வழங்கப் பெற்ற ஆண்டான் கவிராயனின் வசைப்பாடல்களை நான் அரிதின் முயன்று தொகுத்தேன். அதன் பிறகு அச்சு நூல்க ளில் அவன் தொடர்பான விபரங்களைச் சேகரித்தேன்.

அச்சு நூல்களில் குறிப்பிடத்தகுந்தவை 1. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடிய **புலவர் புராணம்** (1901), 2. **அபிதான சிந்தாமணி** (1910), 3. **தனிச் செய்யுட் சிந்தாமணி** (1908), 4. கா.சு. பிள்ளையின் **தனிப்பாடல் திரட்டு** (1939), 5. **தமிழ்ப்புலவர் அகரவரிசை** (1955), 6. **தனிப்பாடற்றிரட்டு** (1969) என்பனவாம். வாய்மொழிப் பாடல்களுக்கும் அச்சு நூல்கள் குறிப்பிடும் பாடலுக்கும் பல வேறுபாடுகள் உள. இவை பின்னால் விளக்கப்பட்டுள்ளன.

ஆண்டான் கவிராயனுக்கு முன் வாழ்ந்த சில புலவர்கள் பாடிய வசை கவிகளுள் 'ஓமளநாதன்' என்பானின் வீடு பற்றி எரியவும் மேலும் அவன் அயலானான 'கம்பத்தான்' வீடும் எரியவும் பாடிய இரட்டையர்களின் தனிப்பாடல் ஒன்றும், காளமேகப்புலவர் பாடிய சில வசைப்பாடல்களும் இவ் வாய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ளன. இப் பாடல்கள் தனிப் பாடல் திரட்டு அச்சு நூல்களிலிருந்து பெறப்பட்டன. இப் பாடல்கள் ஒப்பீட்டாய்வுக்கும் பெரிதும் பயன்பட்டன.

வசைப்பாடல்கள் பாடிய புலவர்களை ஒப்பிட்டதன் விளைவாகத் தமிழில் வசைப்பாடல்கள் எனும் சாபப் பாடல்களை மிகுதியாகப் பாடிய ஒரே கவிஞன் ஆண்டான் கவிராயன்தான் எனும் முடிவுக்கு வர முடிந்தது. அதன் காரணமாக இந் நூலில் அக் கவிராயன் பற்றிய சிறப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 5. ஆண்டான் கவிராயன் வசைப்பாடல்கள் தொகுப்பு விபரம்

கி.பி. 19—ஆம் நூற்றாண்டின் மத்தியிலும் இறுதியிலும் வாழ்ந்த தென்பாண்டி நாட்டு வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் தாம் இயற்றிய **புலவர் புராணத்துள்**, 'வசைகவியாண்டான் சுருக்கம்' எனும் தலைப்பின் கீழ் எழுபத்தொரு பாடல்களில் ஆண்டான் கவிராயனின் வாழ்க்கை வரலாற்றை விவரித்துள்ளார் (காண்க. இணைப்பு 1). இதனை அடியொற்றி **அபிதான சிந்தாமணி** அக் கவிராயனைப் பற்றிய விபரங்களை நல்கியது. இவ்வடிப் படையிலேயே தமிழ்ப் புலவர் வரிசையும் அவற்றை விரித்தது. 1908இல் வெளி வந்த **தனிச் செய்யுட் சிந்தாமணியில்**தான் முதன் முதலாக அக் கவிராயனின் பாடல்கள் என ஐந்தினைத் திரட்டியுள்ளனர் (காண்க. இணைப்பு 2). இவ்வைந்து பாடல்களில் மூன்று பாடல்களைக் கா.சு. பிள்ளை (1939)யும், கழகத்தினரும் (1969) தம் **தனிப்பாடல் திரட்டு** நூல்களில் சேர்த்துள்ளனர். டாக்டர் ஐயர் அவர்கள் எழுதிவைத்த குறிப்புக்களின் உதவியால் வெளி வந்த **பிற்காலப் புலவர்கள்** (1986) எனும் நூலில் ஆண்டான் பாடியதாக நான்கு பாடல்கள் கிடைத்துள்ளன. (காண்க. இணைப்பு 3). இவற்றிலிருந்து ஆண்டான் கவிராயனின் ஒன்பது பாடல்கள் மட்டுமே இந் நூல்கள் வெளியிட்டுள்ளன என அறியலாம். இவ் விபரங் களை அட்டவணை 1 —2 இல் காண்க.

இரட்டையர்கள் பாடிய ஒரு வசைப் பாடலும் காளமேகம் பாடியதாகக் கருதப்பெறும் சில வசைப்பாடல்களும் தனியே (இணைப்பு 4) தொகுக்கப் பெற்றுள்ளன.

அச்சில் வந்தவைக்கு மேலாக இருபதுக்கும் மேலான பாடல்கள் வாய்மொழியாக வழங்கி வருபவற்றை நான் திரட்டியுள்ளேன் (காண்க. இணைப்பு 5) அச்சில் வந்தவற்றுள் உள்ள சாபங்களைக் காட்டிலும் வாய்மொழியாக வழங்கும் பாடல்களில் அமைந்துள்ள சாபங்கள் கடுமையாக உள்ளன. எனவே ஆண்டான் கவிராயனின் வசைப்பாடல்களின் அமைப்பை வாய்மொழிப்பாடல்கள் மூலமாக ஆராய்வதே சிறப்புடையதாகும். இது பின்வரும் பகுதிகளில் அமைந்துள்ளது.

ஓலைச்சுவடியில் 'ஆண்டான் கவிராயன் சொன்னது' என ஆறு பாடல்கள் (காண்க – இணைப்பு 6) இடம் பெற்றாலும் அவற்றுள், கல்லா(ன்) மொழி, காலன் குடியிருப்பு, கெங்கை நாடு (? கொங்கு நாடு) என்பவை புதிதாகக் கிடைத்தன. கம்பர் பாடியதாகக் குறிப்பிடப்படும் கொங்கு நாடு பற்றிய பாடல் ஆய்வுக்குரியது.

## அட்டவணை 1

### ஆண்டாள் கவிராயன் வசைப்பாடல்கள்

| வரிசை எண் | புலவர் புராணம் குறிப்பிடும் சம்பவங்களின்விபரம் |
|---|---|
| 1. | ஓட்டப்பிடாரம் கோவில் காளி சிலையின் தனம் அற்றுவிழ, கொட்டகை தீ பற்றப் பாடியது |
| 2. | தன் ஆசிரியன் மனைவி தாலி அறுக்க, அவன் தலை வெடிக்கப் பாடியது |
| 3. | தன் தமையனின் பீசகோசம் அற்றுவிழ, அவன் இறந்தது |
| 4. | தன் தந்தை தலை வெடிக்கப் பாடியது |
| 5. | தன் வீடு தீப்பிடிக்கவும், தன் மனைவியின் காதலன் இறக்கவும் பாடியது |
| 6. | தன் நிலத்தை அளந்த கணக்கனைப் பாம்பு தீண்டப் பாடுதல் |
| 7. | கணக்கன் இறக்காததால் அவன் மீது காளிமடல் பாடிக் கொல்லுதல் |
| 8. | சீவலப்பேரி கணிகையைத் தன் ஆசிரியன் மகன் புணரச் செய்தது |
| 9. | கன்றுக்குப் பாலீயாது கறந்த அக்கிரகாரப் பெண்மீது வசைப் புராணம் பாடியது |
| 10. | கோவில் கணிகையர் குற்றம் செய்ய, அதிகாரி மீது சொல் மடல் பாடியது |

| வரிசை எண் | புலவர் புராணம் குறிப்பிடும் சம்பவங்களின்விபரம் |
|---|---|
| 11. | கணிகையர் கலவி இன்பம் விளம்பலரிது எனப்பாடியது |
| 12. | சிந்துக் களஞ்சியப் புலவனை வென்றது |
| 13. | தன்னைக் கொடுப்பேன் என்ற பெண்ணின் மகனைக் கொன்றது |
| 14. | வாழவல்லான் ஊரினர் கூழ் குடித்தல் பற்றிப் பாடியது |
| 15. | சொக்கப் பழங்கரையினர் சோற்றுக்கலந்தது பற்றியது |
| 16. | குருகையூரினர் பாடல் கெடுமாறு பாடியது |
| 17. | தென் திருப்பேரைப் பெண் ஒழுக்கம் பற்றிப் பாடியது |
| 18. | மங்கலக் குறிச்சியினர் பற்றிய பாடல் |
| 19. | கருணையூர் பட்டனைப் பாடியது |
| 20. | பட்டாக்குறிச்சி கொடிக்கால் எரியப்பாடியது |
| 21. | கூழுடன் மோர் சேர்த்துக் கொடுக்கும் பெண்ணைப் பாடியது |

| வரிசை எண் | புலவர் புராணம் குறிப்பிடும் சம்பவங்களின்விபரம் |
|---|---|
| 22. | மருதூரினர் பற்றியது |
| 23. | நீருக்குள் கையிடு மாதுவ ல புகழ் தெரியும்படி பாடியது |
| 24. | இரு வேளாளர் மீது புகழ்பாட அது வசையாக மாறியது |
| 25. | பனஞ்சாடி ஊரினர் செயல் நகும்படிப் பாடியது |
| 26. | ஆற்றூர் பற்றிய பாட்டு |
| 27. | கயத்தாறு பெருமாள் கோவில் பாழாகப் பாடியது |
| 28. | வள்ளியூரில் மணமகன் பிணமாகப் பாடியது |
| 29. | செட்டிக்குளத்துக் குட்டிசெட்டி பற்றிய பாட்டு |
| 30. | மதுரையில் விலைமடந்தையை எமபுரம் அனுப்பியது |
| 31. | சேது போய் மீண்டு வரும்வரை மாதுவுக்கு காவல் வைத்தது |
| 32. | கேரளத்து மன்னனைச் சர்க்கரை அனுப்பச் சொன்னது |
| 33. | செந்தில்பதியில் கந்தனைப் பாடியது. |

## அட்டவணை 2

| வரிசை எண் | திரட்டு நூல்களிலிருந்து அறியவரும் சம்பவங்கள் | தனிச் செய்யுட் சிந்தாமணி (1908) | நா.சு. பிள்ளை (1939) குறிப்பிடுவது | கழகத் தனிப் பாடல் திரட்டு (1969) | பாடல் கிடைத்த விபரம் | தொகுக்கப் பெற்று அச்சில் வந்தவை |
|---|---|---|---|---|---|---|
| 34. | ஆவுடை எனும் தாசிக்குப் பொட்டுக் கட்டியபோது பாடியது | | | | | |
| 35. | சிக்கல் ஊரார் உறவாகாது எனப்பாடியது | | | | | |
| 36. | உக்காரணப்பையன் பற்றிய பாட்டு | | | | | |
| 37. | சேஷி எனும் மொட்டைச்சி தலை எரியப்பாடியது | | | | | |
| 38. | கானைநகர் தீர்த்தமாடியது பற்றிய பாட்டு | | | | | |
| 39. | ஆறுமுகமங்கலம் போனால் சோறு கொண்டு போகப் பாடியது | | | உ.வே. சாமிநாதையர் குறிப்பு நூலக வெளியீடு (1986) | | |
| 40. | ஆத்தூர் ரோடு போக வேண்டாம் எனப் பாடியது | | | | | |

| வரிசை எண் | திரட்டு நூல்களிலிருந்து அறியவரும் சம்பவங்கள் | தனிச் செய்யுட் சிந்தாமணி (1908) | கா.சு. பிள்ளை (1939) குறிப்பிடுவது | கழகத் தனிப் பாடல் திரட்டு (1969) | பாடல் கிடைத்த விபரம் | தொகுக்கப் பெற்று அச்சில் வந்தவை |
|---|---|---|---|---|---|---|
| 41. | தன் குதிரை பற்றிய பாட்டு | | | | | |
| 42. | எச்சிக்கலை என்றவர்க்குப் பதில் கூறியது | | | | | |
| 43. | 'பொடிதா' என்றவரைப் 'போதாதா' எனக் கூறியது | | | | | |
| 44. | ஆழ்வார் திருநகரிபிரசாதம் பற்றிய பாட்டு | | | | | |
| 45. | 'கருக்கவிழ்ந்த' எனத் தொடங்கும் பாடல் | | | | | |
| 46. | நட்டாத்தியில் நல்ல தண்ணீர் இல்லை எனப் பாடியது | | | நட்டாத்தி மவ. ஆனந்தகுமார் குறிப்பிட்டவை | | வாய்மொழியாக உள்ளவை |
| 47. | மங்கலக்குறிச்சி மடைபாழாகப் பாடியது | | | | | |
| 48. | குரும்பூர் நாடாக்கள் வழக்கு வரலாறு | | | மேலப்புதுக்குடி இராமையா நாடார் கூறியது | | |

| வரிசை எண் | திரட்டு நூல்களிலிருந்து அறியவரும் சம்பவங்கள் | தனிச் செய்யுட் சிந்தாமணி (1908) | கா.சு. பிள்ளை (1939) குறிப்பிடுவது | கழகத் தனிப் பாடல் திரட்டு (1969) | பாடல் கிடைத்த விபரம் | தொகுக்கப் பெற்று அச்சில் வந்தவை |
|---|---|---|---|---|---|---|
| 49. | கணியான் ஆட்டம் குட்டம் காயா மொழியில் நடப்பது பற்றியது | | | குட்டம் இராச மார்த்தாண்டன் குறிப்பிட்டது | | |
| 50. | அரசூர் அழியப் பாடியது | | | டாக்டர் தங்கதுரை குறிப்பிட்டது | | |
| 51. | ஆழ்வார் [illegible] மேலமாட வீதி மண் [illegible] பாடியது | | | மூலப் பொழி மண்டக்ராஜா குறிப்பிட்டவை | | |
| 52. | மயிலோடையினர் மதம் பற்றிய பாட்டு | | | | | |
| 53. | மேலக்குத்துக்கல் விளையினர் குடிபெயரப் பாடியது | | | | | |

| வரிசை எண் | திரட்டு நூல்களிலிருந்து அறியவரும் சம்பவங்கள் | தனிச் செய்யுட் சிந்தாமணி (1908) | கா.சு. பிள்ளை (1939) குறிப்பிடுவது | கழகத் தனிப் பாடல் திரட்டு (1969) | பாடல் கிடைத்த விபரம் | தொகுக்கப் பெற்று அச்சில் வந்தவை |
|---|---|---|---|---|---|---|
| 54. | கண்டங்குடியிருப்பு, அம்மன்புரம், கீழப் புதுக்குடி, கூரந்தான் விளை மீது வசை | | | | | |
| 55. | திருமலைபுரம் கீரைத்தோட்டம் கரியப் பாடியது | | | | | |
| 56. | காயாமொழி ஆதித்தன் தென்னை பற்றிய பாடல் | | | | | |
| 57. | காயல்பட்டினம் உப்புநீர் பற்றிய பாட்டு | | | | | |
| 58. | மருதூர் அணை கட்டியது | | | | | |
| 59. | செந்தில்பதியில் காத்தடிக்கப் பாடியது | | | | | |
| 60. | செந்தில்பதியில் காத்தமரப் பாடியது | | | | | |
| 61. | செந்தில்பதியில் தாசி பற்றிப் பாடியது | | | | | |
| 62. | மூவர் பல்லக்கு மூலையில் சாத்தி செந்தில்பதியில் பூசை முடங்காது நடக்கப் பாடியது | | | | | |
| 63. | அரசூர் அழியப் பாடியது | | | | | |

| | | |
|---|---|---|
| 64. | மோர்க்காரி பற்றிய வசைப்பாட்டு | அடையாறு பாண்டிநாடார் கூறியது |
| 65. | கல்லான்மொழி பற்றிய பாட்டு | ஓலைச்சுவடியில் உள்ளவை |
| 66. | காலன் குடியிருப்பும் முருங்கைக் கீரை பற்றியும் பாடிய வசை | |
| 67. | கொங்(கை)கு நாடு பற்றிய பாட்டு | |
| 68. | பிற | |

இந்த அட்டவணை 2–3லிருந்து கீழ்க்காணும் முடிவு களைப் பெறலாம்.

1. தனிப்பாடல் திரட்டு நூல்கள் குறிப்பிடும் பாடல்களில் அவ்வளவாக வசை இல்லை.

2. உ.வே. சாமிநாதையர் தொகுத்த பாடல்களில் முழுமை இல்லை.

3. வாய்மொழியாக வழங்கப்பெறும் பாடல்களே வசைப் பாடல்களுக்குரிய இயல்புகளைப் பெற்றுள்ளன.

எனவே ஆண்டான் கவிராயனின் வசைப்பாடல்கள் வாய்மொழிப் பாடல்களாக வழங்கப் பெறுவதன் காரணமாக அவை நாட்டுப்புற இலக்கிய முக்கியத்துவம் பெறுகின்றன. முதன் முதலாக இங்கே தொகுக்கப் பெறும் சிறப்பையும் அவை அடைகின்றன.

## 6. ஆண்டானின் வசைப்பாடல்களின் அமைப்பு

ஆண்டான் கவிராயனின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை நோக்குமிடத்து அவன் அறுபதுக்கும் மேலான தனிப்பாடல் களையும் இரண்டு மூன்று நீண்ட பாடல்களையும் (மடல், மாலை போன்றன) பாடியிருக்கலாம் என்று கூறமுடியும். ஆனால் அவை எல்லாமும் இப்பொழுது கிடைக்கவில்லை. கிடைத்த சில பாடல்களும் குறைப்பாடல்களாக உள்ளன. முழுமையாகக் கிடைத்தவற்றுள் சில பாடல்கள் வேறு புலவர்கள் பாடிய தொகுப்பில் இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

1. காளமேகப்புலவர் பாடியவற்றை ஆண்டான் பாடியதாகக் கொள்ளுதல் அல்லது

ஆண்டான் கவிராயன் பாடியவற்றைக் காளமேகம்

பாடியதாகத் திரட்டியிருத்தல்

(சான்று – ஒப்பீட்டுப் பகுதியைக் காண்க)

2. தண்டபாணி சுவாமிகள் பாடியவற்றை ஆண்டான் பாடியதாகக் கொள்ளுதல் அல்லது
காளமேகம் பாடியதாகத் திரட்டியிருத்தல் (மேற்படி பகுதி)

3. ஆண்டான் பாடியதாகக் கருதப்பெறும் சில பாடல்கள் அவன் பாடியனவா என ஐயம் எழுதல்
(காரணம் – அவற்றில் வசையும், வரலாறும் இல்லாதிருத்தல்)

4. கிடைத்துள்ள குறைப்பாடல்களில் ஓரிரு அடிகளே மக்கள் நினைவில் இருத்தல்.

இவ்வகையான குழப்பங்களிருப்பதால் ஆண்டான் கவிராயனின் வசைப்பாடல்களின் அமைப்பைச் சரியாக ஆராயவியலாது. ஆண்டான் கவிராயனின் பாடல்கள் கிடைத்துள்ள நிலைகளைக் கீழ்க் காணும் அட்டவணை மூலம் தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

| முழுமையான பாடல்கள் (நான்கு அடிகள்) | குறைப் பாடல்கள் | | |
| --- | --- | --- | --- |
| | மூன்று அடிகள் | ஈரடிகள் | ஓரடிப் பாட்டு |
| ஆவுடைக்குப் பொட்டுக் கட்டியபோது பாடியது | வாழவல்லான் பற்றிய பாட்டு | நட்டாத்தியில் தண்ணீர் பற்றியது | ஆழ்வார் திருநகரி மாடவீதி பற்றியது |
| சிக்கல் எனும் ஊரினர் பற்றியது | செந்தூரில் மூவர் பல்லக்கு குறித்த பாட்டு | ஆறுமுகமங்கலம் சோறு பற்றியது | ஆதித்தன் தெங்கு பற்றியது |
| உக்காரணப் பையன் பற்றியது | மயிலோடையினர் மதம் பற்றியது | காயல்பட்டினம் உப்புத் தண்ணீர் பற்றியது | மங்கலக்குறிச்சி மடை பற்றியது |
| சேஷி எனும் மொட்டைச்சி பற்றியது | செந்தூர்த் தாசியைப் பாடியது | கீரைத் தோட்டம் பற்றியது | ஆத்தூ ரோடு போகாதே என்றது |
| கானை நகரில் தீர்த்தமாடியது பற்றியது | செந்தூர்க் கந்தனைப் பாடியது | குட்டம் காயா மொழி பற்றியது | செந்தில்பதியில் காற்றடிக்கப் பாடியது |
| சொக்கப் பழங்கரை பற்றியது | கண்டங்குடியிருப்பு அம்மன்புரம் | சேதுவுக்குச் சென்று மீண்டு வருவது பற்றியது | செந்தில்பதியில் காற்றமரப் பாடியது |

| முழுமையான பாடல்கள் (நான்கு அடிகள்) | குறைப்பாடல்கள் | | |
|---|---|---|---|
| | மூன்று அடிகள் | ஈரடிகள் | ஓரடிப் பாட்டு |
| ஆழ்வார் திருநகரி கோவில் பிரசாதம் வேண்டாம் என்றது<br>முருங்கைக் குழை பற்றியது<br>குரும்பூர் நாடாக்கள் பற்றியது<br>மேலக் குத்துக்கல் விளை குடி பெயர்தல்பற்றியது<br>தன் குதிரை பற்றியது<br>அரசூர் அழியப் பாடியது<br>கயத்தாறு கோவில் பற்றியது<br>கொங்(கை)கு நாடு பற்றியது | | கல்லான்மொழி பற்றியது | |
| பாடல்கள் 14 | 6 | 7 | 6 |
| மொத்தப் பாடல்கள் 33 | | | |

பாடல்கள் கிடைத்த அளவில் இந்த அட்டவணை தயாரிக்கப்பெற்றது. இவற்றிற்கு மேலாக – முழுமையான பாடல்களோ குறைப்பாடல்களோ கிடைக்குமாயின் இந்த அட்டவணை சற்று மாறுபடலாம். இங்கு முக்கியமாகக் கவனிக்கப் பெற வேண்டியவை மூன்று.

1. ஆசிரியன், தன் தந்தை தலை வெடிக்கப்பாடிய, 'கூலியீந்தனன்', 'நக்கவரி' எனத் தொடக்கம் பெறும் பாடல்கள் ஆண்டான் கவிராயன் பாடியவை எனக் காட்டுகின்றனர். ஆனால் அவை **புலவர் புராணத்துள்** உள்ளன.

2. காளமேகம் கயத்தாற்றுப் பெருமாள்கோவிலைப் பற்றிப் பாடியதாகக் கூறப்பெறும் 'பாளை மணம்' எனும் தொடக்கம் உள்ள பாடல் **புலவர் புராணத்துள்** காணப்படுகிறது.

3. குட்டி செட்டி என்பானைப் பற்றியும், சேஷி எனும் தாசியைப் பற்றியும் காளமேகம் பாடியதாகக் குறிப்பிடப் பெறும் பாடல்கள் ஆண்டான் கவிராயன் பாடியதாகப் **புலவர் புராணம்** குறிப்பிடுகின்றது.

இவ்வாறு தனிப்பாடல்களைத் தொகுத்தோர் யார் பாடியது எனத் தெளியாது தொகுத்துள்ளனர். எனவே இவ்வகை மயக்கம் தரும் பாடல்களை நீக்கிவிட்டுப் பாமர மக்களிடையே வழங்கப்பெறும் பாடல்களை மட்டுமே எடுத்து அவற்றின் அமைப்பைப் பார்ப்பது சிறந்ததாகக் கருதப்படுகிறது.

கிடைத்துள்ள பாடல்களில் அமைந்துள்ள வசைச் சொற்களின் அடிப்படையில் அவன் பாடல்களைக் கீழ்க்காணுமாறு மூன்று வகைப்படுத்தலாம்.

1. வசை குறைந்த முழுப்பாடல்கள்
2. இகழ்ச்சி உள்ள குறைப்பாடல்கள்
3. வசை மட்டுமே உள்ள ஒருவரிப்பாடல்கள்

இம்மூன்றனுள் ஒருவரி அல்லது இரண்டோ மூன்றோ வரிகளில் உள்ள பாடல்களே மக்கள் மனத்தில் நிலைத்துள்ளன எனக் கூறலாம். ஆண்டான் கவிராயன் பாடல்களை மக்கள் நினைவுகூர்வதிலிருந்து கீழ்க்காணும் உண்மை தெரியவருகிறது.

விதி 1 [ மக்கள் வசைச் சொற்களையே பாதுகாத்துவைக்க விரும்பினர்.
அதற்கான வரலாற்றினை விரும்பவில்லை.

இவ்வாறு முடிவு கூறினாலும், அவ்வப்பாடல்களின் சரித்திரப்பின்னணி அழிந்துபடவில்லை, அவ்வவ்வூரின் இயல்பால் ஓரளவுக்கு அறிந்துகொள்ள முடிவதாகவே உள்ளது. இப்பின்னணி வேறொரு பகுதியில் விளக்கம் பெற்றுள்ளது.

அட்டவணை 5

**ஆண்டான் பயன்படுத்திய சொற்கள்**

| **இகழ்ச்சிச் சொற்கள்** | **வசைச் சொற்கள்** |
| --- | --- |
| குடிப்பது கூழ் | மடை பாழ் பாழ் |
| | மேலமாடவீதி மண் |
| சோற்றுக் கலந்த ஊர் | கோவில் நாசம் நாசம் |
| | மூலையில் சாத்த |
| நல்ல தண்ணீர் இல்லை | தெங்கு பட்டுவிடும் |
| | பிறப்பதெல்லாம் தேவரடியாள் பிள்ளை |
| உப்புத் தண்ணீர் | ஆத்தூரோடு போகாதே |
| சோறு கொண்டு போங்கோ | மனை இருக்க மறுவிடம் போவான் |
| | மனை இருக்க குடி போகும். பிஞ்சுக்கும் பிற்கிளைக்கும் எட்டாது. |
| ஆழ்வார் திருநகரி பிரசாதம் வேண்டாம் | கீரை தழைக்காது |
| | அரசூர் – பூச்சிக்காடு |
| | அழிய. காலம் குறித்தானிடம் போனானாம் |

ஆண்டான் கவிராயன் பயன்படுத்திய சொற்களிலிருந்து கீழ்க்காணும் முடிவுக்கு வரமுடியும்.

விதி 2 [ உணவுப்பொருளானால் இகழ்ச்சிச் சொற்கள்
பிற பொருள்களானால் அழிவுச் சொற்கள்

இவ்வாறு ஆண்டான் கவிராயன் இகழ்வதற்கும் கடுமையான வசைச் சொற்களால் அழிவதற்கும் பாடியதற்கான காரணங்கள் ஆராயப்பெற வேண்டியவை. அக்காரணங்களுக்கும் அவன் பாடிய பாடலில் வந்தமைந்த சொற்களுக்கும் இயைபுள்ளதாகவே தோன்றுகிறது. அவன் காலத்துச் சூழ்நிலையை நன்கு ஆராய்ந்தால்தான் ஆண்டான் பாடல்கள் இவ்வாறு ஏன் பாடப்பெற்றன என முடிவு கூற இயலும். இச்சூழல் அடுத்துவரும் பகுதிகளில் விளக்கம் பெறுகின்றது.

ஆண்டான் கவிராயனின் தோற்றம் எப்படிப்பட்டது என அறிய இயலவில்லை. அவனைப் 'பண்டாரம்' என்றே பாமர மக்கள் இன்றும் நினைக்கின்றனர். ஊர் ஊராகச் சுற்றுவதால் அவன் 'பண்டாரம் பரதேசி' யாக வாழ்ந்து வந்துள்ளான் என்று நினைக்கத் தோன்றுகிறது. அவன் காளிவரம் பெற்றவன் எனக் கதைகள் கூறுவதால் அவன் பயன்படுத்தும் அழிவுச் சொற்களுக்குத் தெய்வசித்தி கிடைத்துள்ளது. அதன் காரணமாகவே அவன் சொல்வது பலித்துவிடுகிறது. அவன் 'கவிராயன்' எனவும் அழைக்கப் பெற்றிருத்தலால், அக்காலத்துக் கவிராயர்கள் போல் பல்வகைக் கவிதைகள் புனையும் ஆற்றலுள்ளவனாகவும் இருந்துள்ளமையை அறியலாம். புலவர்கள் சொல்லாற்றல் மிக்கவர்கள். சொல்லாற்றலொடு தெய்வத்தின் வரமுமிருப்பதாகச் சொல்லப் பெறுவதால் அவன் கூறும் வாக்கு பலித்து விடுகிறது. இவ்வடிப்படையிலேயே ஆண்டான் கவிராயனின் பாடலடிகளும் அமைந்துவிடுகின்றன.

ஆண்டான் ஊர் ஊராகச் சுற்றித் திரிந்தமையால் அவ்வூரினரின் இயல்புகளை நன்கு அறிந்து அதற்கேற்பத் தன் பாடல்களில் அவர்களை வசை பாடியுள்ளான். அவ்வூரினர் அவனைப் புறக்கணிக்கும் போதும், அவனைக் கண்டு அஞ்சியபோதும் அல்லது அவனைத் தண்டித்த போதும் அவற்றின் தாக்கத்துடனேயே அவனது பாடலடிகளும் சொல்லாட்சிகளைப் பெற்றுள்ளன. இதனைக் கீழ்க்காணுமாறு வரையறுக்கலாம்.

விதி 3 -
- மக்கள் பயந்து அவனைப் புறக்கணித்தபோது அவன் இகழ்ந்தான்,
- அவன் மிகவும் பாதிக்கப்பட்டபோது வசை பாடினான்

இவ்வாறு ஆண்டான் கவிராயனின் பாடல்களின் அமைப்பை ஓரளவு வரையறுக்கவியலும். இவ்வடிப்படையில் இரட்டைப் புலவர்கள் பாடிய ஒரு வசைப் பாடலில் 'பற்றி எரிக' எனும் சாபமே உள்ளது.

### 7. ஆண்டான் கவிராயனின் பாடல்களின் விளைவு

மேலே கூறியவற்றின் அடிப்படையில் ஆண்டான் கவிராயனின் பாடல்களை அணுகும்போது சில முடிவுகளை நாம் அடையமுடியும். ஆண்டான் தொடர்பாக நமக்குக் கிடைத்துள்ள அறுபதுக்கும் மேலான நிகழ்ச்சிகளுள் அழிவு நிகழ்ச்சிகளே மிகுதியாக உள்ளன. இதனைக் கீழ்க்

| விளைவு | சில சான்றுகள் |
|---|---|
| 1. இறந்து போதல் | தந்தை, தமையன், கணக்கன், கணிகை மகன், கணிகை, மணமகன், மனைவியின் காதலன் |
| 2. தீப்பிடித்தல் | காளி கோவில் கொட்டகை, தன்வீடு, கீரைத் தோட்டம், கொடிக்கால், சேஷி எனும் மொட்டைச்சி |

| விளைவு | சில சான்றுகள் |
|---|---|
| 3. தாசிக்குத் தண்டனை | சீவலப்பேரி தாசி, கோவில் கணிகையர், திருச்செந்தூர் தாசி, மதுரை தாசி, ஆவுடை |
| 4. அழிந்து போதல் | அரசூர், சிவிகை, கயத்தாறு பெருமாள் கோவில், ஆழ்வார் திருநகரி வீதி, மங்கலக் குறிச்சி மடை, ஆதித்தன் தெங்கு, காலனிடம் போதல் |
| 5. எள்ளி நகையாடுதல் | அதிகாரிகள் மீது சொல் மடல், மயிலோடையினர் மதம், மோர்க்காரி, தென் திருப்பேரை பெண் செட்டி |
| 6. இல்லாது போகு மாறுபாடுதல் | நட்டாத்தியிலும் காயல் பட்டினத்திலும் நல்ல தண்ணீர் இல்லாது போனது |

காணுமாறு முறைப்படுத்தலாம்.

ஆண்டான் கவிராயனின் பாடல்களை ஆராய்வோர் அவன் பாடல்கள் தந்த எதிர் விளைவுகள் மிகுதியாக இருப்பதையும் நல்ல விளைவுகள் ஒன்றிரண்டே இருப்பதையும், நல்ல முடிவு ஏற்படவேண்டுமென்று பாட நினைத்தாலும் இறுதியில் கெட்ட முடிவே அமைந்து விடுவதையும் தெரிந்துகொள்ளலாம். எதிர் விளைவுகளில், இறத்தலே மிகுதியாக உள்ளது. அடுத்த நிலையில் தீப்பிடித்தலும், மூன்றாவது நிலையில் தாசிகளுக்குத் தண்டனைகளும், நான்காவதாகப் பொருளழி

வுகளும் ஏற்பட்டிருப்பதைக் காண முடிகின்றது.

இந்த நிலையில் ஆண்டான் கவிராயன் தனக்கு முன்னோனான காளமேகப் புலவனை விட வசை பாடுவதில் முதல் நிலை பெற்றுவிடுகிறான். இவ்விருவரையும் ஒப்பிடும் ஆய்வு பின்னால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 8. வசைப்பாடல்கள் எழுந்த சமூகச் சூழலும், பாதிப்பும், பரிகாரங்களும்

ஆண்டான் கவிராயன் தென்பாண்டி நாட்டினன். அப் பகுதியிலுள்ள பல ஊர்களுக்கும் பயணம் மேற் கொண்டவன். மலையாள நாட்டிற்கும், மதுரைக்கும், சேதுவுக்கும் சென்று வந்துள்ளான். ஆனால் மதுரைக்கு வடக்கே அவன் செல்ல வில்லை என்று தெரியவருகின்றது.

ஆண்டான் வாழ்ந்த காலம் ஆங்கிலேயர் – பாளையக் காரர்கள் மோதல்கள் ஏற்பட்ட காலமாதல் வேண்டும். அக்காலத்தில் அடிக்கடி சமஸ்தானப் போர்களும், கொள்ளைகளும் நிலவி வந்தன. அதனால் மக்கள் கடுமை யான மனம்கொண்டவர்களாக இருந்தனர். பஞ்சமும் தாண்டவமாடிற்று. இச்சூழலில் ஆண்டான் கவிராயன் ஊர் ஊராகச் சென்று உணவுப் பொருள்களை நாடியிருப்பதாகத் தோன்றுகிறது. அவர்கள் தாராளமாக வழங்காத நிலையில் அவன் அவர்களை இகழ்ந்தும் சபித்தும் பாடியுள்ளான்.

கீழே குறிப்பிடப்படுவோர் ஆண்டான் பாடியதாக அறியவரும் சாதியினராவர்.

1. தன் குலத்தினரான வேதியர்
2. வேளாளர்
3. கோவில் பட்டர்
4. நாடார்
5. செட்டி
6. மறவர்
7. தாசியினர்
8. துலுக்கர்

இச்சாதியினரிடையே தான் ஆண்டான் வாழ்ந்துள்ளான்.

ஓட்டப்பிடாரம், சிக்கல் எனும் ஊர்களில் தன் குலத்தினரான வேதியருடன் அவனுக்கு மோதல் ஏற்பட்டுள்ளது. கயத்தாறு, ஆழ்வார் திருநகரி, திருச்செந்தூர், பெருங்கருணையூர் ஆகிய தலங்களிலுள்ள கோவில்களில் பட்டர்களுடன் மோதல் ஏற்பட்டுள்ளது. வேறு இடத்தில் வேளாளர் மீது நல்ல எண்ணத்துடன் பாட அதுவும் வசையாக வந்துள்ளது. வாழ வல்லான், சொக்கப்பழங்கரை, மங்கலக்குறிச்சி, ஆறுமுக மங்கலம், பட்டாக்குறிச்சி, நட்டாத்தி, ஆத்தூர், மயிலோடை, பனஞ்சாடி, மருதூர், குரும்பூர், திருமலையப்பபுரம், காயாமொழி, கல்லாமொழி, குட்டம், கொம்மடிக் கோட்டை, அச்சம்பாடு, தட்டார்மடம், வள்ளியூர் எனும் ஊர்களிலுள்ள நாடாரினத்தவர்கள் மேல் பாடியுள்ளான். அரசூர் —பூச்சிக் காட்டில் மறவர்களுடன் மோதல் ஏற்பட்டுள்ளது. செட்டி குளத்தில் செட்டியார்களுடனும், காயல்பட்டினத்தில் துலுக்கர்களுடனும் அவனுக்கு மோதல் ஏற்பட்டுள்ளது. சீவலப்பேரி, திருச்செந்தூர், மதுரை போன்ற இடங்களில் தாசிகளுடன் மோதல் ஏற்பட்டுள்ளது. இவற்றால் தென் பாண்டி நாட்டிலுள்ள சில சாதியினர் வாழ்ந்த தலங்களில் சென்றதால் அவர்களுக்கும் அவனுக்கும் ஒருவகையான வெறுப்பு இருந்துள்ளமையை அறியலாம்.

குறிப்பாக ஆண்டான் கவிராயன் நாடாரினத்தவர் வாழ்ந்த பல ஊர்களுக்குச் சென்று புறக்கணிக்கப் பெற்றுள்ளான். குட்டம், காயாமொழி, அச்சம்பாடு எனும் ஊர்களில் அவ னுக்கு வரவேற்பும் பிற இடங்களில் எதிர்ப்பும் இருந்ததாகத் தெரிகிறது. எதிர்ப்பு இருந்த இடங்களில் வாழ்ந்த நாடா ரினத்தவர் கட்டபொம்மன் போன்ற பாளையக்காரர்கள் தொல்லைகளுக்கு ஆட்பட்டவர்கள். தன்னிச்சையாக உழைத்து வாழ்பவர்கள். அதன் காரணமாக அவர்கள் பொருளீய்வதில் சற்றுப் பின்தங்கியவர்கள். பிற சாதியினரின் பிரவேசங்களை வெறுப்பவர்கள். இவை போன்ற காரணங் களினால் ஆண்டான் கவிராயனுக்கும் அ'வ்வினத்தாருக்கும் வெறுப்பு வளர்ந்துள்ளது எனலாம். அவ்வெறுப்பினால் ஏற்பட்டவைதாம் அவர்கள் மேல் இவ்வளவு அதிக வசைப் பாடல்களை அவன் பாடியதற்குக் காரணமாக அமைந் துள்ளன.

## அட்டவணை 6

## ஆண்டான் கவிராயனால் பாடப்பெற்றோர்

| தெய்வங்கள் | ஆண்கள் | பெண்கள் | ஊரினர் | கணிகையர் |
|---|---|---|---|---|
| ஒட்டப்பிடாரம் காளி | ஆசிரியன்<br>தலைவன்<br>மனைவி காதலன் | மோர்க்காரி<br>நீருக்குள்<br>கைவிட்ட மாது | ஆறுமுக மங்கலத்தினர்<br>நட்டாத்தியினர் | சீவலப்பேரி தாசி<br>மலையாளத்துக்<br>கணிகையர் |
| வைத்தாறு பெருமாள் | தந்தை<br>கணக்கன்<br>சிந்துப் புலவன் | கொடும்பெண்<br>என்ற பெண்,<br>கன்றுக்குப்<br>பாலீயாத பெண் | வாழவல்லான் ஊரினர்,<br>சொக்கப் பழங்கரையினர் | ஆற்றூர் சோமி<br>எனும் தாசி |
| திருச்செந்தூர் முருகன் | கூத்தப்பட்டன்<br>மணமகன்<br>இளம்பருவத்து<br>நண்பர்கள் | தென் திருப்பேரை<br>பெண்<br>சீதேவி<br>செங்கொடி | ஆழ்வார் (குருகையூர்)<br>திருநகரியினர்<br>மங்கலக் குறிச்சியினர் | கோவிலில்<br>குறும்பு செய்த<br>கணிகையர் |
| ஆழ்வார் திருநகரி<br>பெருமாள் | செட்டி<br>மயிலோடையினன்<br>பலவேசம்<br>ஆறுமுகம்<br>முத்தன் | | பனஞ்சாவடி ஊரினர்,<br>ஆத்தூரினர்,<br>பட்டாக்குறிச்சியினர்,<br>மலையாளத்தினர்,<br>அம்மன்புரம்,<br>கண்டங்குடியிருப்பு, | திருச்செந்தூர்<br>தாசி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கீழ்ப்புதுக்குடி,<br>கூரந்தான் விளை,<br>மருதூரினர்,<br>குரும்பூரினர்,<br>மேலக்குத்துக்கல்<br>விளை, புலவர்,<br>பூலாங்கண்ணி,<br>வாத்தியார், கடலோடி,<br>காயல்பட்டினத்தார்,<br>அரசூரினர்,<br>கல்லாமொழியினர்,<br>குட்டத்தூரினர்,<br>காயாமொழியினர்,. | |

பாதிப்புகளும், பரிகாரங்களும்

ஆண்டான் கவிராயன் பாடல்கள் ஏற்படுத்திய பாதிப்புகளையும், பரிகாரங்களையும் அடுத்த நிலையில் தெரிந்து கொள்வது தேவையாகும்.

அட்டவணை 7

| வசைப் பாடல்கள் | ஏற்படுத்திய பாதிப்புகள் | அதற்கான பரிகாரங்கள் ஏற்பட்டனவா இல்லையா |
|---|---|---|
| 1.ஆசிரியன் இறத்தல் | அவன் மகன் சட கோபன் அடைக்கலமாதல், இதனால் சடகோபனை ஆண்டானே பராமரிக்கும் நிலை ஏற்பட்டது | அவன் தேவைக்குப் பெண்ணும் பொருளும் தருவது ஆண்டான் கடமை யாயிற்று |
| 2.தன் ஊரா ரையும் உற வினரையும் சபித்தல் | இதனால் த்ன் ஊரில் வாழ வியலாத நிலை ஆண்டானுக்கு ஏற்பட்டது | பிற ஊர்களில் திரிந்து யாசித் தலை மேற் கொள்ளுதல் |
| 3.கயத்தாறு பெருமாள் கோவில் நாசம் எனல் | சப்பரம் முறிந்து வீழ்தல், கோவில் சிலை இல்லா மலிருத்தல் | பெருமாளை எட்டயபுரம் தூக்கிச் சென்று வழிபட்டனர் |
| 4. சொக்கப் பழங்கரையி னர் பற்றிய பாடல் | அதனால் அவர்கள் சோற்றுக்கு அலந்த நிலை | இன்றைய நிலை தெரியவில்லை |

| வசைப் பாடல்கள் | ஏற்படுத்திய பாதிப்புகள் | அதற்கான பரிகாரங்கள் ஏற்பட்டனவா இல்லையா |
|---|---|---|
| 5.நட்டாத்தி யினர் பற்றிய பாடல் | நல்ல தண்ணீர் இல்லாமல் போனது | இன்னும் அந்த நிலை நீடிக் கிறது (மவ. ஆனந்த குமார் கடிதம்) |
| 6.வாழவல் லான் கூழ் | செழிப்பு இருந் தாலும் கூழ் குடிப் பது வழக்கம் | இன்றும் அந்த நிலை நீடித்தல் |
| 7.ஆறுமுக மங்கலம் — சோறு | நல்ல உணவு விடுதி கள் நிலைப்பதில்லை (மவ.ஆனந்த குமார் கடிதம்) | சாபமிருப்பதால் யார் போனாலும் விருந்து வழங்கு தல் (டாக்டர் ஐயர் குறிப்பு ) |
| 8.மங்கலக் குறிச்சி மடை பாழ் | (பாலம்) மடை இடிந்து விழுந்தது | இன்றும் மடை (பாலம்) அங்கு கட்ட அஞ்சு கின்றனர் |
| 9. ஆழ்வார் திருநகரி மே லமாட வீதி மண் | அவ்வூர் மேலமாட வீதியும் அதற்கு மேற்கேயும் அழிந்து பட்டது | இன்றும் அழிந்த நிலை காணப் படுகிறது |
| 10. காயல் பட் டினம் ஊருக் குள் உப்புத் தண்ணீர் பற்றிய பாட்டு | கடலருகில் இருப்ப தால் ஊருக்குள் உப்புத் தண்ணீர் ஊற்று ஏற்பட்டது | இன்றும் அப்படித்தான் |

| வசைப் பாடல்கள் | ஏற்படுத்திய பாதிப்புகள் | அதற்கான பரிகாரங்கள் ஏற்பட்டனவா இல்லையா |
|---|---|---|
| 11.தென் திருப் பேரை அக்கிர காரப் பெண் கள் ஒழுக்கம் பற்றியபாட்டு | அன்றைய நிலை தெரியவில்லை | இன்றைய நிலை தெரியவில்லை |
| 12. குரும்பூர் நாடாக்கள் வழக்கு | சொத்து பற்றிய வழக்குகள் நீண்டிருந்தன | ஆனால் இப் போது பொருள் தேடி வைக்கின் றனர் |
| 13. மயிலோடை யினர் மதம் | அடிக்கடி சண்டைகள் | அப்படியான ஊரிருந்து அழிந்து போ யிற்று |
| 14.ஆத்தூரோடு போ காதே என்ற பாட்டு | தாசியினரின் தொல்லை | இன்றைய நிலை தெரிய வில்லை |
| 15. திருச்செந் தூரில் மூவர் அதி காரத்தில் பூசை நடந்தது | மூவர் பல்லக்கு மூலையில் சாத்தி வைக்கப்பட்டது | பூசை முறைகள் ஒழுங்காக நடக்கின்றன |
| 16. ஆதித்தன் தெங்கு படப்பாடியது | அன்றுள்ள நிலை தெரியவில்லை | இன்றும் தெங்கு செழிப்பதில்லை |
| 17. மேலக் குத்துக்கல் விளையினன், | அவர்கள் முன்பு இருந்த ஊர் களிலிருந்து குடி | இன்றும் அந்த நிலை உள்ளது. |

| வசைப் பாடல்கள் | ஏற்படுத்திய பாதிப்புகள் | அதற்கான பரிகாரங்கள் ஏற்பட்டனவா இல்லையா |
|---|---|---|
| ஆத்தூரிலிருந்து வந்தவன், பூலாங் கண்ணியர், புலவர் குடும்பத்தினர் போன்றோரிருந்த ஊர்கள் அழியப்பாடியது | பெயர்ந்துள்ளனர். | |
| 18. கந்தன் குடியிருப்பு, அம்மன் புரம், கீழப் புதுக்குடி கூரந்தா விளை மேல் வசை | அன்று வந்த நிலை இருந்தது. | அதன் காரணமாக இன்றும் அவ்வூர்கள் மேல் பழி உள்ளதாகத் தெரிகிறது. |
| 19. குட்டத்தினர் காய ங்குளத்தார் பற்றிய பாட்டு | கணியான் கூத்து நடக்கிறது. பாதிப்பு ஏற்பட வில்லை | முதல் நாள் (திங்கட்கிழமை) குட்டத்திலும், மூன்றாம் நாள் (புதன்கிழமை) காயாமொழியிலும் அது நடக்கிறது |
| 20. அரசூர் – பூச்சிக்காடு அழியப் பாடியது | குட்டம், கொம்மடிக் கோட்டை, தட்டார் மடம் போன்ற ஊர்கள் முன்பு அடங்கியிருந்தன | இப்போது அவ்வூர்கள் நிமிர்ந்துள்ளன. அரசூர் அழிந்து விட்டது. |

| | |
|---|---|
| வசைப் பாடல்கள் | 20 |
| தெரிந்தபாதிப்புகள் | 17 |
| ஏற்பட்டபரிகாரங்கள் | 7 |

இவ்வட்டவணையிலிருந்து ஆண்டான் கவிராயனின் வசையினால் பாதிக்கும் மேலான பாதிப்புகளும், பாதிக்கும் குறைந்த பரிகாரங்களும் ஏற்பட்டுள்ளன. ஆண்டான் கவிராயன் மறைந்து சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலானாலும் அவன் வசைப்பாடல்களினால் ஏற்பட்ட விளைவுகளை மக்கள் மறவாமலுள்ளனர்.

### 9. காளமேகப்புலவர் – ஆண்டான் கவிராயன் – ஒப்பீடு

பல தனிப்பாடல் திரட்டு நூல்களில் முதலாவதாக இடம் பெற்ற பெருமை காளமேகப்புலவரைச் சாரும். பாட்டில் பல தனித்தன்மைகளைப் புகுத்தி மக்களிடத்தில் தனிப் பாடல்களுக்கு ஓர் இடத்தைப் பெற்றுத்தந்தவர் என்பதுவே இதற்குக் காரணமாகும். இவர் பாடிய பலவற்றுள்ளும் சிலேடைப் பாடல்களும், சமுத்திப்பாடல்களும் இவருக்கு மிகுந்த புகழைத் தேடித் தந்தன. ஆனால் இவர் மிகவும் சில வசைப்பாடல்களையே பாடியுள்ளனார். சோழ நாட்டினரான காளமேகம் கி.பி. 15–ஆம் நூற்றாண்டிலும் 16–ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார்.

காளமேகத்திற்கு இருநூறு ஆண்டுகள் பின்வந்தவன் ஆண்டான் கவிராயன். இவனைப் 'பிற்காலத்துக் காளமேகம்' என்று கூறுவது மரபு. தென்பாண்டி நாட்டினனான இவன் வசை மட்டும் பாடியதாலே 'வசைகவி ஆண்டான்' எனும் பெயர் பெற்றுள்ளனான். காளமேகத்தைச் 'சிலேடைக்கவி' என்று போற்றுவது போல் ஆண்டான் கவிராயனை 'வசைகவி' என்று தூற்றுவது வழக்கமாக உள்ளது.

காளமேகம் வசையும் பாடியுள்ளமையால் சில தொகுப்பாளர்கள் ஆண்டான் கவிராயன் பாடிய பாடல்களை காளமேகம் பாடியதாகக் கருதியுள்ளனர். இதனால் இவ்விருவர் தொடர்பான நிகழ்ச்சிகளை ஒப்பிடுவதன் மூலம் இருவர் பாடல்களின் இயல்புகளையும் அறியமுடியும். இந்த ஒப்பீடு இவ்விரு கவிஞர்களுக்குரியபொதுவான சம்பவங் களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது.

அட்டவணை 8

| சம்பவங்களும் பாடல்களும் | காளமேகப் புலவர் | ஆண்டான் கவிராயன் |
| --- | --- | --- |
| இனம் | வேதியர் | வேதியர் |
| பிறந்த ஊர் | சோழநாட்டு நந்திபுரம் | பாண்டிநாட்டு ஒட்ட பிடாரம் |
| அருள் பெற்றது | பூட்டிய கோயிலுள், அகிலாண்ட ஈஸ்வரியிடம் நாவில் எழுதப் பெற்றார். | பூட்டிய கோயிலுள், காளியிடம் நாவில் எழுதப் பெற்றார். |
| முதலில் பாடியது | துதி—திருவானைக்கா உலா | வசை— காளி சிலையின் ஒரு தனம் அற்றுவிழவும் கொட்டகை தீப்பிடிக்கவும் |
| மடல் இலக்கியம் | சித்திர மடல் (காதல்) | காளி மடல் (வசை) சொல் மடல் (அங்கதம்) |
| புலவன் மீது வசை | சம்பந்தாண்டான் மீது வசை | சாநது களஞ்சிய புலவன் மீது |
| குதிரை பற்றிய பாட்டு | 'முன்னே கடிவாளம் ...' எனத் தொடங்கும் பாடல் | 'என்னைச் சுமக்கவறியாய் ...' எனத் தொடங்கும் பாட்டு |
| ஊர் அழியப் | திருமலைராயன் | அரசூர் அழியப் |

| சம்பவங்களும் பாடல்களும் | காளமேகப் புலவர் | ஆண்டான் கவிராயன் |
|---|---|---|
| பாடியது | பட்டினத்தில் மண்மாரி பெய்யப் பாடுதல் | பாடியது |
| இரு பிரிவினர்க்குள் சமாதானம் | திருவரங்கத்தினர்க் கும் திருவானைக் காவினர்க் கும் நிகழ்ந்த வாதம் | குட்டத்தார்க்கும் காயாமொழி (காயங்குளத்தா ருக்கும் கணியான் தொடர்பாக நடந்த வாதம் |
| ஊரார் பாடவேண்டிய தால் பாடுதல் | திருத்துருத்தியில் சிவனைத் தரி சிக்கச் சென்ற போது ஊரார் கேட்கப் பாடியது | குருகூரினர் பாடவேண்டிய தால் பாடுதல் |
| குழந்தை இறக்கப் பாடுதல் | உன்னைக் கொடுப்பேன் என்ற தாயின் குழந்தை இறக்கவும் உயிர்த்து எழவும் பாடியது | உன்னைக் கொடுப்பேன் என்றவள் குழந்தை இறக்கப் பாடியது |
| தாசியிடம் கோபம் கொண்டு பாடுதல் | இஞ்சி குடியிலி ருக்கும் தாசி மீது வசை | திருச்செந்தூர் தாசி மீது வசை |
| தரிசனத்தின் | திருவாரூரில் | திருச்செந்தூரில் |

| சம்பவங்களும் பாடல்களும் | காளமேகப் புவலர் | ஆண்டான் கவிராயன் |
|---|---|---|
| போது காலதாமதம் ஆனதால் பாடியது | தியாகரின் வச்சி ரப்பதக்கம் அறவும் பொருந்தவும் பாடியது | 'காற்றடிக்க'வும் 'காற்றமரவும்' பாடியது |
| ஆற்றூர் பற்றிய பாட்டு | 'ஆராயு முத்தமி ழாற்றூரில்... எனத் தொடங்கும் பாட்டில் சோமி எனும் தாசி பற்றிய பாட்டு | சோமி எனும் தாசி பற்றிய பாட்டில் ஆற்றோடு போனாலும் ஆற்றூரோடு போக வேண்டாம் எனப் பாடியது |
| கயத்தாறு பற்றிய பாட்டு | 'பாளை மணங் கமழுகின்ற . . . !' எனத் தொடங்கும் பாடல் | 'பாளைமணங் கமழுகின்ற ...!' எனத் தொடங்கும் பாடல் |
| மோர்க்காரி பற்றிய பாட்டு | நீருடன் மோர் கலந்தவள் மீது சிலேடை | கூழுடன் மோர் விற்றவள் மீது வசை |
| செட்டி பற்றிய பாட்டு | எட்டி குளத்துச் செட்டி மீது 'எட்டி குளத்திலிருந்து ...!' எனத் தொடங்கும் பாட்டு | செட்டி குளத்துச் செட்டி பற்றிய இதே பொருள் தரும் பாட்டு |
| நோய் காணுதல் | கண்ட நோய் கண்டு மண் தின்று | நாவில் புண் உண்டாதல், |

| சம்பவங்களும் பாடல்களும் | காளமேகப் புவலர் | ஆண்டான் கவிராயன் |
|---|---|---|
| | குணமாதல் | அதனால் இறத்தல் |
| முருகன் மீது சிலேடை | 'அப்பன் இரந்துண்ணி' எனத் தொடங்கும் பாடலில் முருகனை நிந்தாஸ்துதியாக பாடியது | திருச்செந்தூர் முருகன் மீது நிந்தாஸ்துதி |

மேலேயுள்ள ஒப்பீட்டு அட்டவணையின் மூலம், சிலேடைக் கவி காளமேகம் பாடிய பாடுபொருள்களை ஒத்தே ஆண்டான் கவிராயனும் பாடியுள்ளான் என அறியமுடியும். காளமேகம் திருத்தலங்கள் பல தரிசித்துப் பாடிய பெரிய கவிஞர் என்றால் ஆண்டான் கவிராயன் சிற்றூர்கள் பலவற்றில் திரிந்த வசைபாடிய மக்கள் கவிஞன் எனக் கூறலாம். தமிழில் வசைப்பாடல்களைப் பாடிய கவிஞர்களுள் மிகவும் விஞ்சி நிற்கக்கூடிய ஒரே கவிஞனாக ஆண்டான் கவிராயன் திகழ்ந்துள்ளான்.

| காளமேகம் பாடிய பாட்டு | புலவர் புராணம் அல்லது ஆண்டான் பாட்டு |
|---|---|
| **கயத்தாறு**<br>பாளைமணங் கமழுகின்ற கயிற்றாற்றுப்<br>பெருமாளே பழிகாராகேள்<br>வேளையென்றோ லிவ்வேளை பதினாறு<br>நாழிகைக்கு மேலாயிற்றென்<br>தாளைமுறித் ததுமன்றி நம்பியா னையுங்கூடச்<br>சுமக்கச் செய்தாய்<br>நாளையினி யார்சுமப்பார் ரெந்நாளு<br>முன்கோயி னாசந் தானே | **கயத்தாறு**<br>பாளைமணங் கமழ்ந்திருக்குங் கைத்தாற்றுப் பெருமாளே<br>பழிகாராவென்<br>றோளையற முறித்தாயே நம்பியானையுங்கூடச் சுமக்கப்<br>போமோ<br>வேளையிதில் விழுந்தொழிவாய் நாளை<br>வரோஞ்சுமக்கவென விண்டானந்தோ<br>தேளைநிகரவன் வாக்குப் படலுமதிலிருந்த கலை<br>சிதைந்ததம்மா |
| **உன்னைக் கொடுப்பேன் என்ற தாயின் குழந்தை இறக்கவும் பிழைக்கவும் பாடியது**<br>என்னைக் கொடுத்தா லிரக்கமுனக்<br>குண்டாமோ<br>வன்னக் கமலமுக வல்லியே—துன்னுமதக்<br>காட்டானைக் கோட்டுமுலைக் காரிகையே<br>நீபயந்த<br>கோட்டானைத் தானே கொடு | **உன்னைக் கொடுப்பேன் என்றவள்மேல் பாட்டு**<br>நீட்டாண்மைப் பெண்ணொருத்தியுனைக் கொடுப்பேனே<br>யெனமுன்னிகழ்த்தக் கேட்டுக்<br>காட்டானைபோன்ற முலைக் காரிகைநீ பெற்றெடுத்துக்<br>கண்போற் காக்குங்<br>கோட்டானைச் சாவதற்குக் கொடுத்திடெனச்<br>சொல்லியுடன் கொன்றானந்தப்<br>பாட்டாளன்காளமேகப் புலவனெச் சிலர்தாம் பகர்வாரன்றே |

## எட்டிகுளம் செட்டி

எட்டி குளத்திலிருந்து சரக்கு விற்கும்
குட்டிசெட்டி தன்மகளைக்
கொண்டுபோய்–நொட்டுதற்கே
ஆயிரம் யானை யெழுநூறு கூன்பகடு
பாயும் பகடெண்பத் தைந்து

## ஆற்றூரில் சோமி எனும் தாசி

ஆராயு முத்தமி ழாற்றூரிற் சோமி யழகுகண்டு
நாரா யணனெடு மாலாகி னானந்த
நான்முகனும்
ஒரா யிரமட லூர்ந்தான்வின் மார
னுருவருந்தான்
பேரான வானவர் கோனுங்கண் ணாயிரம்
பெற்றனனே

## செட்டிகுளம் செட்டி

உட்டி ணஞ்செய் செட்டிகுளமென் றுரைக்கு மோரூரிற்
நட்டிலாமலே தினஞ்சிறு சரக்குகள் விற்குங்
குட்டிசெட்டியா னையுங்குதி ரையும் வரப்பாடிற்
கெட்டியிப்புல வோனெனக் கிளத்துவே னெனலும்

அவன் மகட்கொடு போய்ப்புணர் வதற் கவை வருமென்
றெவள வோசினத் துடனொரு கவியிசைத் திட்டான்
கவனமுடவளிராப்பக லங்ஙனங் கண்டு
புவனியோர்வினா விடமிகப் புலம்பியாமாய்ந்தனளே

## ஆற்றூரில் சோமி எனும் தாசி

அன்று சிவன் புரமூன்று மெரித்தபொழுதொரு மூவர்க்கந்த
வெந்தீ
நன்று பயந்ததுபோல வாற்றூரிற் சோமயெனு நாரிமேனி
பொன்றுமழகான் முகுந்தன் மாலானான் பிரமன்
மடலூர்ந்தான் மாரன்
றன்றுகடீருருவழிந்தா னென்றானங் ஙனஞ் சிறிதுஞ்
சாற்றினானே

காளமேகம் பாடியதாகத் தொகுக்கப்பெற்றிருக்கும் நான்கு பாடல்களும் சம்பவங்களும் ஆண்டான் கவிராயன் பாடியதாகப் **புலவர் புராணத்திலி** ருந்தும் வாய்மொழியாக வழங்கப்பெறும் செய்திகளிலிருந்தும் தெரியவருகின்றது.

ஆண்டான் கவிராயன் பாடியதாகத் தொகுக்கப் பட்டிருக்கும் பாடல்களை விட வாய்மொழியாக மக்களிடம் வழங்கும் அவன் பாடல்களை மேலும் முழுவதுமாகத் திரட்டி ஆராய்வோமெனில் இன்னும் புதிய விளக்கங்களைப் பெறமுடியும். வசைப்பாடல்கள் வாய்மொழி இலக்கியமாகத் திகழ்வதை இந்த ஆய்வின் மூலம் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

**10. நன்றியுரை**

ஆண்டான் கவிராயனைப் பற்றிய முதல் உணர்வினை எனக்கு ஏற்படுத்தியவர் மு.கோ.ராமன் அவர்களே. அதன் பின்னரே நான் அக்கவிராயன் பற்றிய பாடல்களைத் தனிப்படல் திரட்டு நூல்களிலும், வாய்மொழியாக வழங்கி வரும் அன்பர்களிடமும் திரட்ட முற்பட்டேன். அவன் பாடிய பாடல்களை மிகுந்த அளவில் எனக்கு வழங்கிய திரு ச. மண்டக்ராஜா நாடார் அவர்களுக்கும், இந்த ஆய்வுக்குப் பயன்படுமாறு கருத்துக்களை வழங்கிய திரு மவ. ஆனந்தகுமார் அவர்களுக்கும், மைனர் துரைசாமி நாடார் அவர்களுக்கும், காணியாள்ன் புதூர் சிவபெருமாள் நாடார் அவர்களுக்கும் நான் எனது நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

T5142



# 4. ஆண்டான் கவிராயன் பாடல்கள்

## 1. தென்பாண்டிச் சீமை

பாண்டிய நாட்டின் தென் பகுதியைத் 'தென்பாண்டிநாடு' என்பது வழக்கம். பாண்டியர்களிடமிருந்து சோழர்களும், பின்பு சேரர்களும் இப்பகுதியின பெரும்பான்மையான நிலப்பரப்புகளை ஆண்டுவந்தனர். அவர்களுக்குப்பின் முகமதியர்களும் நாயக்கர்களும், இறுதியாக வெள்ளையர்களும் இதை ஆண்டுள்ளனர்.

'தென்பாண்டி நாடு' என்றும் 'தென்பாண்டிச் சீமை' என்றும் அழைக்கப்பட்ட பகுதி அன்றைய திருநெல்வேலிச் சீமையே ஆகும். 'நெல்லைச் சீமை' எனப் பொதுவாக குறிப்பிட்டாலும், தென்பாண்டி நாட்டிற்குரிய பகுதிகளாக — இன்றைய காமராசர் மாவட்டம், நெல்லை மாவட்டம், வ.உ. சிதம்பரனார் மாவட்டம் எனும் மூன்று மாவட்டப் பகுதி களையும் வரையறுக்கலாம். இதில் சற்று முன்பின் மாறுபாடும் உண்டு. மேற்கே மலையும், தெற்கே ஆரல்வாய் மொழிகணவாயும், கிழக்கே குடாக்கடலும், வடக்கே சேது நாட்டின் தெற்கு எல்லையும் கொண்ட பரந்த நிலப்பரப்பே அக்காலத்தில் தென்பாண்டிநாடாகக் கருதப்பெற்றது.

இந் நாட்டின் முக்கியக் கூறுகளாகப், பொதிகை மலையையும், தாமிர பரணி நதியையும் கூறலாம். தென் பாண்டி நாட்டின் அரசியல் முக்கியத்துவம் பெற்ற நகரங்களாகப் பாண்டியர்களின் கொற்கை, அது அழிந்த பின்பு சோழர்களின் நிலைப்படைதங்கியிருந்த பெருங்குளம், பஞ்ச பாண்டியர்கள் என்போர் ஆண்டதாகக் கூறப்பெறும் நகரங்களான தென்காசி, கரிவலம் வந்த நல்லூர், வள்ளியூர், சீவலப்பேரி, சேரர்கள் ஆதிக்கம் செலுத்திய சேரன் மகாதேவி, நாயக்கர்களின் பாளையங்கள் மற்றும் ஜமீன்களான பாஞ்சாலங்குறிச்சி, எட்டையபுரம், வில்லி புத்தூர், சிவகிரி, சேத்தூர், சொக்கம்பட்டி போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஆங்கிலேயரின் நிலையான ஆட்சி நாட்டில்

தோன்றிய பிறகு ஏற்பட்ட திருநெல்வேலிச் சீமையில், தேசபக்தித் தலைவர்களும், தேசியக் கவிஞர்களும் தோன்றி இம்மண்ணுக்கு மாண்பினைத் தேடித் தந்துள்ளனர்.

தென்றல் தவழ்ந்து வரும் தென்பொதிகைத் தமிழ் முனிவன், திருச்செந்தூரில் தமிழழகன் குமரன், தாமிரபரணித் தீரங்களில் தோன்றிய தமிழ்க் கவிஞர்கள், சமஸ்தானப் புலவர்கள், நாட்டுப்புறக் கவிஞர்கள் போன்றோர்களால் இம் மண் இலக்கிய மணங்கமழ்கின்றது.

பிரித்தாளும் திறமையினால் தேசத்தையே பிடித்துக் கொண்ட ஆங்கிலேயர் 1800 ஆம் ஆண்டுக்குப் பின்தான் நிலையான ஆட்சியை நாட்டில் நல்கினர். தென் பாண்டி நாட்டில் மேலோங்கியிருந்த பாஞ்சாலங் குறிச்சிக் கட்டபொம்மனின் மறைவுக்குப் பின்னர் — சுய மாகவோ ஆங்கிலேயர் ஆதரவுடனே இயங்கிக் கொண்டிருந்த அனைத்து ஜமீன்களும், பாளையங்களும், மிட்டாக்களும் நேரடியாக ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்தன. அதன்பின் சுதேசிகள் ஆயுதம் ஏந்துதலுக்குத் தடை ஏற்பட்டது. அதற்குமுன் அனுபவித்து வந்த உரிமைகளுக்கு ஏற்ப நிலங்கள் உரிமையாளர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கப் பெற்றன. போக்குவரத்து எல்லாவிடங்களுக்கும் பொதுவுடைமை ஆயிற்று. கல்விமுறையும் ஒருங்கிணைக்கப் பெற்றது. பல தாலுக்காக்கள் தோற்றுவிக்கப் பெற்றன. சட்டம், நீதி, ஒழுங்கு முதலியவை காவல் நிலையங்களாலும் நீதி மன்றங்களாலும் முறைப்படுத்தப் பெற்றன.

தென்பாண்டி நாட்டில் பல சாதியினர் இருந்தாலும் மேலெழுந்தவாரியாக வட பகுதியில் நாயக்கர்களும், நடுப்பகுதியில் மறவர்களும், தென்பகுதியில் நாடார்களும் அதிகமாக வாழ்கின்றனர். கயத்தாறு முதல் கூடங்குளம் வரையும், தென்காசி முதல் திருச்செந்தூர் வரையும் மக்கள் தம்முள் கலந்துகொண்டனர். வசதியற்றவர்கள் வசதி படைத்தோரை அண்டி வாழ்ந்தனர். இப்படியான கால கட்டத்தில்தான் தென்பாண்டியில் ஆண்டான் கவிராயனின் பிரவேசம் இருந்தது.

## 2. ஆண்டான் கவிராயன் பற்றிய கதைகள்

கலைமகள் கல்விக்குத் தெய்வமானாலும் காளியே காளிதாசனையும் காளமேகத்தையும் உருவாக்கியவள் என்பதை நம்மிடையே வழங்கும் கதைகள் வாயிலாக அறிந்து கொள்ளலாம். முதலில் கல்வியறிவில்லாதிருந்த இவர்கள் காளியின் அருள் காரணமாக மகாகவிஞர்களாகத் திகழ்ந்த வர்கள். அதைப்போலவே ஆண்டான் கவிராயனின் கதையும் அமைந்துள்ளது. இது நம் நாட்டில் வழங்கப்பட்ட ஓர் உத்தி ஆகவே இருந்துள்ளது.

ஆண்டான் கவிராயன், 'வசைகவி ஆண்டான் புலவன்' என்றும் 'வசைகவி ஆண்டான் கவிராயன்' என்றும் படித்த வர்களால் அழைக்கப்பெற்றுள்ளான். பாமரர்களோ 'ஆண்ட வன் கவிராயன்' என்றோ 'ஆண்டுவன். கவிராயன்' என்றோ அவனை அழைக்கின்றனர். அவனது பெயர் இறைத்தொடர்பு கொண்டிருந்ததால் இப்படி வழங்கினார்களா- அல்லது ஆண்டவன் போல் சொல்வதெல்லாம் பலித்துவிடுவதால் அக்கவிராயனை அப்பெயரில் வழங்கினார்களா எனத் தெரியவில்லை.

தென்பாண்டிப் புலவர்களுள் முழுக்க முழுக்க வசைப் பாடல்களே பாடியுள்ள ஆண்டான் கவிராயன் மற்றவர்களை விட தனித்த ஓரிடத்தைப் பெற்றுள்ளான். அவனது வசை கவிதைகளால் நேர்ந்த துன்பங்களை அறிந்த மக்கள் அவன்பால் ஒருவித பயமும், மதிப்பும் கொண்டிருந்தனர். அவன் பாடுவதையே அவர்கள் வெறுத்தனர். ஆயின் அவன் பாடிய பாடல்களை மறந்திலர். இன்றும் அவனது கதையையும், பாடல்களையும் தம் மனங்களிலிருந்து நீக்காமல் வைத்துள்ளனர். காவியங்களிலும் கதைகளிலும் வரும் பெரிய எதிர் பாத்திரங்களை மக்கள் நினைவிலிருத்திக் கொள்வதுபோல் வசைகவிதைகளையே பாடிய ஆண்டான் கவிராயனும் அழியா இடம் பெற்றுள்ளான்.

மு.ரா. கந்தசாமிக் கவிராயர் (1908) தொகுத்த தனிச்

செய்யுட் சிந்தாமணி (பக்கம் 375 – 76) என்னும் நூலிலும், கா.சு.பிள்ளையவர்கள் தொகுத்து உரையாத்த தனிப்பாடற்றிரட்டு (1939 –இரண்டாம் பாகம் ,பக்கம் 35 – 36) எனும் நூலிலும், சு.அ. இராமசாமிப்புலவர் பதிப்பித்துக் கழகம் வெளியிட்ட **தமிழ்ப்புலவர் வரிசை** – ஆறாம்புத்தகம் (1955), மற்றும் **தனிப்பாடல் திரட்டு** (1969) எனும் நூல்களிலும், அபிதான சிந்தாமணியிலும் ஆண்டான் கவிராயன், வசைகவி ஆண்டான் புலவன்' எனும் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளான். இந் நூல்களில் குறிப்பிடப்படும் இப்புலவன் பாடிய பாடல்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட பாடல்களே மக்கள் மனத்துள் பதிந்திருப்பதாலும் அப் பாடல்களே அவனது வசைகவிகளாக இருப்பதாலும் அவற்றை ஆராய்ந்து அவனது வரலாற்றை உறுதி செய்துகொள்வது முக்கியமாகும். டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் தாம் சென்ற ஊர்களில் வழங்கப்பட்ட ஆண்டான் கவிராயன் பற்றிய சில குறிப்புக்களின் அடிப்படையில் எழுதப்பெற்ற கட்டுரை (**பிற்காலப் புலவர்கள்**. உ.வே.சா. நூலகம், 1986, பக் 28 – 30) யிலும், தண்டபாணி சுவாமிகளியற்றிய **புலவர் புராணத்திலும்** இக்கவிராயன் பற்றிய செய்திகள் உள. புலவர் புராணத்துப் பாடல்களை இணைப்பு 1–ல் காண்க.

### 3. ஆண்டானின் ஊரும் பேரும்

இன்றை வ.உ. சிதம்பரனார் மாவட்டம் பாஞ்சாலங் குறிச்சிக்கு அருகிலுள்ள ஒட்டப்பிடாரத்தைச் சேர்ந்த ஓர் ஊரே ஆண்டான் கவிராயன் பிறந்த ஊர் என நம்பப் படுகிறது. ஒட்டப்பிடாரம் என்ற பெயரில் தனியொரு தாலுகாவும் உள்ளது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இவ்வூரில் வைணவ (சிக்கலார் வமிசம் அல்லது சிச்சிலிச் சோழியர்) வேதியர் குலத்தில் பிறந்தான் என்றும் ஆண்டான் எனும் பெயருடன் வளர்ந்தான் என்றும் இவனது தந்தை பெயர் வைகுந்தநாதன் என்றும் அறியப்படுகிறது. 'ஆண்டான் என்பது இயற்பெயரன்று, அவன் சொல்வதெல்லாம் பலித்ததால் ஏற்பட்ட காரணப் பெயராகும்' எனவும் கூறப்படுகிறது.

18 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19 ஆம் நூற்றாண்டின் முதலிலும் ஆண்டான் கவிராயன் வாழ்ந்ததாகக் கூறுவர். குறிப்பிட்டுக் கி.பி. 1800 ஆம் ஆண்டினன் என்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால் இவனது காலத்தை வரையறுப் பதற்குச் சான்றுகள் இல்லை. இவர் ஒட்டப்பிடாரத்துக்கும் உவரிக்கும் இடைப்பட்ட பல ஊர்கள் பற்றியும் அங்கு வசித்த மக்கள் பற்றியும் மட்டுமே வசைகவிதைகளைப் பாடி யுள்ளான்.

இந் நகரங்கள் கீழைக் கடலோரப்பகுதியில் உள்ளவை. இவை தாமிரபரணி ஆற்றுக்கு வடக்கும் தெற்குமாக அமைந்துள்ளன. ஆற்றுக்கு வடக்கிலுள்ள ஊர்கள் நீர் வளமான நன்செய் நிலங்கள் கொண்டவை. தென்புறத்து ஊர்களோ தேரிமணல் நிறைந்த புன்செய்க் காடுகள் கொண்டவை. ஆனால் இந் நகரங்களில் பெரும்பான்மையும் வசித்தவர்கள் நாடார் குல மக்களேயாவர். இக் குலத்தினர் பலர் கட்டபொம்மனையும் பிற பாளையக்காரர்களையும் ஆதரிக்காதவர்கள். இதனால ஆங்கிலேயப் படைகளால் எவ்விதத் தொல்லைகளும் பெறாதவர்கள்.

ஆண்டான் கவிராயன் அரசூர் அழியப்பாடிய பாடலி லிருந்தும் பிற அகச் சான்று—புறச் சான்றுகளிலிருந்தும் இக் கவிராயன் கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19 ஆம் நூற்றாண்டின் முதலிலும் வாழ்ந்தவனாகக் கருதமுடியும். ஏறக்குறைய கட்டபொம்மன் காலத்தவனாகவோ அதற்குச் சற்றுப் பிந்திய காலத்தவனாகவோ இருக்கலாம் என்பது உறுதி.

## 4. ஆண்டானும் ஒட்டப்பிடாரம் உலக அம்மனும்

ஆண்டான் கவிராயனது இளமைப் பருவ நிகழ்ச்சிகளைத் தனிப்பாடல் திரட்டு நூல்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றன. ஆண்டான் சிறுவயதில் ஆசிரியரின் அடி உதைகளுக்குப் பயந்து பள்ளி செல்லாது ஒளிந்து கொள்வான் என்றும், ஒரு நாள் அவனைக் கண்ணுற்ற சித்தர் ஒருவர் காளி மந்திரத்தை

அவனுக்குப் போதித்தார் என்றும், சகமாணவர்கள் கண் களில் படாமல் ஒட்டப் பிடாரம் உலக அம்மன் (காளி) கோவி லுக்குள் நுழைந்து கதவை உட்பக்கமாகத் தாழிட்டுக் கொண்டான் என்றும், வெளியே சென்றிருந்த காளி கதவைத் திறக்கச் சொன்னதாகவும் கதை வழங்குகின்றது. காளி கோவிலுக்குள்ளிருந்த ஆண்டான் சித்தர் கூறிய காளி மந்தி ரத்தை உருவேற்ற அப்போது காளிபிரசன்னமானாள் என்று மற்றொரு கதை வழங்குகின்றது.

கதவை அடைத்துக் கொண்டதற்குக் காரணம் கேட்ட காளிக்கு ஆண்டான் தனக்குக் கல்வி அறிவு வேண்டும் எனக் கேட்க, அவள் ஆசுகவியா அல்லது வசை கவியா என வினவ வக்கரித்த மனம் கொண்டிருந்த ஆண்டான் வசைகவியே வேண்டுவதாகக் கூற, காளியும் தனது சூலாயுத நுனியால் ஆண்டானின் நாவில் எழுதினாள் என்றும் கூறுவர்.

இவன் வசைகவி பாடியதற்கு மற்றொரு கதையும் வழங்குகிறது. வெளியிலிருந்து கதவைத் திறக்கச் சொன்ன காளிக்குக் கதவைத் திறக்க அவன் மறுத்த போது அவள் அவனது நாக்கை வெளியே நீட்டச் சொன்னதாகவும் அவன் கதவு இடுக்கின் வழியாக நாக்கை நீட்ட, அம்மனும் அருகிருந்த வேப்ப மரக்குச்சியை ஒடித்து அவன் நாவில் எழுதினாளாம். வேப்பங்குச்சி கசப்பானதால் ஆண்டானின் நாவில் எழுந்த தமிழ்ப்பாடல்கள் எல்லாம் கசப்பானவை களாக இருந்தன என்றும் கதைகள் வழங்குகின்றன (மவ. ஆனந்தகுமார், கடிதத் தொடர்பு).

'வசைகவியாண்டான்' எனும் தலைப்பின் கீழ் **அபிதான சிந்தாமணி** (பக்–1374) குறிப்பிடுவதாவது

> பாண்டிநாட்டில் சித்திரா நதிக்கரைக்கணுள்ள ஓட்டப்பிடாரம் என்னும் ஊரில் வைணவ சமயத்துச் சிக்கலார் வம்சத்தில் வைகுண்டன் என்பவன் மனைவியிடத்தில் பிறந்தவர். இவர்க்குத் தாய் தந்தையர் ஆண்டான் எனப் பெயரிட்டனர். இவர் கல்வி பயிலாது உலாவித் திரிந்து கணவனுக் கஞ்சித் தாய் ஒளித்திடும் அன்னத்தையுண்டு திரிகையில் சித்தர் ஒருவர்

காளி மந்திரத்தினை உபதேசிக்க அதனை உச்சரித்துத் தன்னுடன் கல்விச் சாலையிற்கற்கும் சிறுவர் தம்மைக் கண்டு கூட்டிச் செல்வரென அஞ்சி ஆண்டிருந்த காளிகோயினிற் காளிக்குப் பின் சென்று மறைந்து மந்திரஞ் செபிக்கையில் காளி பிரத்தியக்ஷமாய் இசைவேண்டுமோ வசைவேண்டுமோ வெனக் கேட்க ஆண்டான், முன்னை வினையால் வசை வேண்டுமெனக் கேட்டுப் பெற்று .....

ஆண்டான் கவிராயன் அருள் பெற்ற நிகழ்ச்சி வடமொழிக் கவிஞன் காளிதாசன் அருள் பெற்றதுடனும் தமிழ்ச் சிலேடைக்கவி காளமேகம் காளிவரம் பெற்றதுடனும் ஒத்துள்ளது. காளிதாசன் பிற புலவர்களை வாதிட்டு வென்றதுடனும், காளமேகம் தன் கவியாற்றலால் பல கவிஞர்களிடம் வாதிட்டுச் சிலர் மேல் வசைபாடியதுடனுன் ஆண்டானின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஒத்துள்ளன. மேலும் காளமேகம் பல தனிப்பாடல்கள் பாடி, பல தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்டது போலவே ஆண்டான் கவிராயனும் பல தனிப்பாடல்களைப் பாடியுள்ளான். பல ஊர்களுக்கு யாத்திரையும் சென்றுள்ளான். ஆனால் ஆண்டான் சிலேடைக் கவியன்று, வசைகவியே.

இடைக்காலத்துக் காளமேகத்தின் தனிப்பாடல்கள் மற்றும் அவனது வாழ்க்கையுடன் பிற்காலத்து ஆண்டான் கவிராயன் வாழ்க்கையும் ஒத்திருப்பதால் இவனது இளமைக் காலத்து நிகழ்ச்சிகளைக் காளியுடன் இணைத்துக் கதைகள் வழங்கியுள்ளன.

### 5. ஒட்டப்பிடாரம் தொடர்பான வசை கவிகள்

வசை கவி ஆண்டான் கவிராயன் பாடிய தனிப்பாடல்கள் முதன்முதலாக 1908 இல் வெளிவந்த **தனிச் செய்யுட் சிந்தாமணியில்** தொகுக்கப் பெற்றுள்ளன. இந்நூலில் ஐந்து பாடல்கள் இடம் பெற்றன. இவ்வைந்து பாடல்களிலும் எவ்வித வசையும் இல்லை. இதனால் ஆண்டான் கவிராயன் பாடியவைதாமா இவை எனும் ஐயம் எழுகின்றது. மூன்று பாடல்களில் அவனுடைய வறுமையின் காரணமாக வெளிப்

படும் வக்கிரஉணர்ச்சி காணப்படுகிறது. வசை யெதுவும் இல்லாத·காரணத்தால் இவ்வைந்து பாடல்கள் பற்றிய விளக்கம் இப்பகுதியில் இடம் பெறாது இணைப்பு 2 இல் தரப்படுகின்றது.

### 5.1.காளி தனம் அற்றுவிழப்பாடியது

ஒட்டப்பிடாரம் உலகஅம்மன் அல்லது காளி அம்மன் அருள் பெற்ற ஆண்டான் அதனைச் சோதனை செய்ய முற்பட்டான். இதுபோன்ற சோதனைகளுக்கு வரமளித்த வர்களே முதலில் ஆட்படுவர். அதுபோன்றே காளி மாதா தந்த வரத்தை அவள் மேலேயே சோதனை செய்தான். சோதனைக் கவியே வசைகவியாக வந்துவிட்டது. காளி சிலையில் ஒரு தனம் அற்றுவிழும்படியாகவும், காளி கோவிலின் முன்புள்ள தென்னங்கீற்றுக் கொட்டகை எரிந்துவிழும்படியாகவும் அவனது கன்னி வசைப்பாட்டு அமைந்ததாம். அதுபடியே ஆயிற்றாம். இன்றும் காளிக்கு ஒரு தனம் இல்லாதிருப்பது இதற்குச் சான்றாகக் கூறப்படுகிறது.

அருள் தந்தவரைப் போற்றிப்பாடுவதே அருள்பெற்ற கவிஞர் மரபு. ஆனால் சிவனாரிடம் பெற்ற அருளை வல்ல ரக்கன் அவரிடமே சோதனை செய்து பார்க்க முனைந்த புராண நிகழ்ச்சியை ஒத்து ஆண்டான் கவிராயன் வாழ்க் கையும் அமைந்து விட்டிருக்கிறது. இதனால் இவன் பொது மக்களின் எதிரியாகவே கருதப்பட்டுள்ளான். இதன் காரண மாகவே ஆண்டானின் கன்னிக் கவிதை தொடர்பான கதை உருவாக்கப் பெற்றுள்ளது.

ஆனால், இக்கதையினைக் கூறும் புலவர் புராணப் பாட்டொன்று கீழ்வருமாறு அமைந்துள்ளது.

அக்கோயிலுறும் விக்கி ரகமார்பினொரு கொங்கை
யற்றேவிழத்

தக்கோர்கள் வைகச் செய்முன்கொட்டகைக் கட்டழற் பற்றிட

ஆண்டான் கவிராயனின் முதல் வசைகவி கிடைக்க

வில்லை. கவிதை இல்லாவிட்டாலும் கதை மக்களிடையே நிலவிவருகிறது. இக்கதைகூடப் புராணப் பழங்கதை மரபுத் தொடர்புடன் கட்டப்பெற்றது என்றே கூறவேண்டும்.

### 5.2 ஆசிரியர் தலை வெடிக்கப்பாடியது

காளிகோவிலில் நடந்த தீ நிகழ்ச்சிக்குப் பின் ஆண்டான் மனத்தில் பயமும், அலட்சியமும் தோன்றின. காளி கோவிலைவிட்டு வெளிப்பட்டவனை உடன் பயிலும் மாண வர்கள் ஆசிரியரிடம் அழைத்துச் சென்றனர். பள்ளி ஆசிரியர் தரும் தண்டனைகளால் வெறுப்புற்றிருந்த ஆண்டானுக்கு மீண்டும் பிடிபட்டபோது மேலும் ஆசிரியர் மேல் வெறுப்புண் டாயிற்று. வெறுப்பின் வேகம் வசைகவியாக வெளிப்பட்டது. ஆசிரியன் தலை வெடிக்கவும் அவன் மனைவி தாலியறுக்கும் படியும் வசைகவி வெளிவந்ததாக அறிய முடிகின்றது. [illegible]வர் புராணப் பாடல் வருமாறு.

> கூலி யீந்தனன் குறைத்தினம் படித்திலன் கொடிய
> கோலி லங்குகை வாத்தியான் கொண்ட பெண்டாட்டி
> தாலி யற்றிடும் படிவரந் தாடி ......
> உரத்த வோசை முற்றலுமவன் றலைபிளந் தொழிந்தான் ....

இப் பாடல் அக்காலத்து ஆசிரியர் சிலரின் கொடிய செயல்களையும் கல்வி முறையையும் வெளிப்படுத்துகின்றது. கூலியைக் குறைக்காது ஈந்தும் படிக்கவில்லை என்ற ஒரே காரணத்திற்காக அடிப்பதற்கு ஆசிரியர் வைத்துள்ள கோலின் மீது ஏற்பட்ட வெறுப்பு அவ்வாசிரியரின் குடியே கெட்டுபோகும்படிச் செய்துவிட்டது.

### 5.3 ஆசிரியர் மகனுக்குப் பாதுகாப்பு

தந்தை இறந்தபின் தவித்துநின்ற தனயன் ஆண்டானைப் பணிந்தபோது அவனைப் பராமரிக்கும் பொறுப்பும் ஆண்டா னுக்கே ஏற்பட்டுவிட்டது. தான்தேடும் பொருளெல்லாம் அவனுக்கே தருவதாக ஆண்டான் வாக்களித்து எப்போதும் [illegible] வைத்துக் கொண்டிருந்தானாம்.

### 5.4 தன் தமையன் பீசம் அற்று விழும்படியாகப் பாடியது

ஆசிரியர் செய்த கொடுமைபோல் அண்ணனும் செய்திருப் பான் போலும். படிக்காதவனையும் காளிகோயிலை எரித்தவனையும் யார்தான் விரும்புவர். மண்சுவர் கட்டிக் கொண்டிருந்த தன்தமயன்மீது ஆண்டான் தன் வசைகவியைச் சோதனை செய்தான். உள்ளாடை அணியும் வழக்கமில்லாத அத் தமையன் தனது வேலையின் போது மடித்துக் கட்டிய வேட்டியின் கீழ் தொங்கிய அவனது பீசம் அற்று விழும் படியாக ஆண்டானின் வசைகவி அமைந்ததாம். அண்ணனும் இறந்தானாம்.

### 5.6 மலையாள மன்னனைச் சர்க்கரை அனுப்புமாறு பாடியது

ஒட்டப்பிடாரம், பாஞ்சாலங்குறிச்சியின் கீழ் இருந்தது. கட்டபொம்முவின் ஆங்கிலேயர் எதிர்ப்பின் காரணமாக அப்பகுதியில் அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன. அதனால் பஞ்சம் எற்பட்டது. கி.பி. 1800க்கு பின் ஏற்பட்ட வெள்ளத் தாலும் பஞ்சம் ஏற்பட்டது. இவைபோன்ற சரித்திர நிகழ்ச்சிகளால் அப்பகுதி வறுமைக்குட்பட்டது. ஆண்டானும் பிற புலவர்போல் வசதிபடைத்தோரை அணுகிப் பொருள் பெற முனைந்தான். ஆனால் வாயிலிருந்து வருபவையெல் லாம் வசைகவிகளாக இருப்பதால் யார்தான் அவனை விரும்புவர். அவன் பாடுவது வசைகவிதையாக இருப்பதுவே பின்பு அவனுக்கொரு வரப்பிரசாதமாகிவிட்டது. பயத்தால் பலர் பொருள் கொடுக்க ஆரம்பித்தனர். அவன் பாடுவதை விரும்பாமலே பொருள் கொடுத்து அனுப்பத் தொடங்கினர்.

ஆண்டானும் தென்பாண்டி நாடுவிட்டு ஆங்கிலேயர் ஆட்சி இல்லாத மலைநாடு சென்று பொருளீட்டி வர நினைத்தான். அவ்வாறே மலைநாட்டிற்கும் சென்றான். ஆண்டானின் இயல்பை ஒற்றர்கள் மூலமறிந்து அரசன் 'ஆண்டான் தன்மீதும் தன் நாட்டின்மீதும் அறம் பாடிவிடக்கூடாது' என்பதற்காகத் தன் அமைச்சரை அனுப்பி ஆண்டான் வேண்டும் பொருள் ஈவதாகக் கூறவைத்தான்.

அக்கணமாங் கவனடுங்கி முதலமைச்சன்
றனையேவி யையநீயிங்
கெக்கடமை விதித்தாலுஞ் செய்கின்றே
மெம்மிறைவற் கெதிர்வா ராமன்
மெய்க்கவியொன் றும்பகரா தேகுகெனப்
பணிந்துமிக வேண்டச் செய்தான்
சர்க்கரையோர் பாரமதி தோறுமனுப்
புதிரெனுஞ்சொற் சாற்றிப்போனான்

ஒட்டப்பிடாரப் பகுதிப்பஞ்சம் பற்றியும் ஆண்டான் பல ஊர்களுக்குச் சென்று பொருளீட்ட முடியாமல் மலையாள நாட்டிற்குப் போனது பற்றியும், அங்கு சென்று பாடாது பொருளீட்டி வந்தது பற்றியும் வழங்கப்பட்ட செய்திகளின் அடிப்படையில் இக்கதைபுனையப் பெற்றுள்ளது. மலை நாட்டிற்கு ஆதரவாக அமைந்து, ஒட்டப்பிடாரத்துக்கு இலவசமாகப் பொருள் வருவதைக் குறிக்கும் இப்பாடல் புலவர் புராணத்துள் உள்ளது. இதன் மூலம் ஆண்டானின் வரலாறு பிறபுலவர்களாலும் பாடல்களாக இயற்றப் பெற்றுள்ளது என நம்பலாம். இவ்வாறான சில பாடல்களை ஆண்டானின் தனிப்பாடல்களாகத் தொகுத்துவிட்டனரோ எனும் ஐயம் எழுகின்றது.

## 5.6 ஆண்டான் தன் தந்தை தலைவெடித்து இறக்கப் பாடியது

ஆண்டான் தனக்கு வந்த சர்க்கரையில் பங்கு கேட்ட தன் தந்தையின் தலை அற்றுவிடும்படியாக வசைகவி பாடிய தாகச் சான்று உள்ளது. ஆண்டான் அவனுக்கு வந்த சர்க்கரையைப் பங்குவைத்துப் பிறருக்கு வழங்கி வந்தான். அவனது தந்தை வைகுந்தநாதன் என்பான் அச்சர்க்கரையில் அதிகப் பங்கு கேட்டான். அவ்வாறு நச்சரித்ததால் வெறுப்புற்ற ஆண்டான் வசைபாடினான். அவன் பாடிய வசைப் பாடல் கிடைத்திலது. **புலவர் புராணத்துப் பாட்டு** வருமாறு.

நக்கவரி சித்தவிடோ டுடுப்பதற்குத்
துணியுமின்றி நாட்டிலுள்ளோ

றொக்கவருந் திடும்பஞ்ச காலத்திற்
சிறிதேனு முணர்வில்லாமல்
சக்கரை சக்கரையென்றே சிணுங்குதற்குத்
தலைப்பட்டா யெனும்பாச் சொன்னான்
னக்கணத்தி லவன்றலை படீரெனவே
வெடித்துயிர்போ யகன்றதம்மா

ஆண்டானின் சாபப் பகுதிகள் இப் பாடலில் விடப் பட்டுள்ளன. அந்த அளவு கொடூரமான சாபமாகச் சொற்கள் இருந்திருக்கலாம் போலும். ஆண்டானின் வாழ்க்கையில் எந்த வயதில் இந் நிகழ்ச்சி நடந்தது என அறிய இயல வில்லை. வேறொரு பாடல் அவன் பாடியதாகக் குறிப்பிடப் படுகின்றது. அது வருமாறு.

நக்கத் தவிடற் றுடுக்கச்சீ லையுமற்றிந் நாட்டிலுள்ளே
எக்கப்ப டும்பஞ்ச காலத்தி லேயுள்ளறிவு கெட்டு
சிக்கையில் வைகுந்த நாதா சவலைச் சிறுபிள்ளைபோற்
சக்கரை சக்கரை யென்றே சிணுங்கத் தலைப்பட்டையே

(பிற்காலப் புலவர்கள் — பக். 29)

மலையாளத்து மன்னன் தொடர்பான நிகழ்ச்சியும் தந்தைக்குச் சர்க்கரை மறுத்த நிகழச்சியும் ஆண்டானின் பிற்காலத்து நிகழச்சிகளாய் இருத்தல் வேண்டும். ஏனெனில், புலவர் புராணத்துள் இவைபிற் பகுதியிலேயே பாட்ப் பெற்றுள்ளன.

## 5.7 மனைவி காதலனும் வீடும் அழியப்பாடியது

அண்ணனையும், அப்பாவையும் அறம் பாடிக் கொன்ற ஆண்டான் தன் மனைவியையும் விட்டு வைக்கவில்லை. தன் மனைவி கள்ளக் காதலனுடன் உறவாடுகிறாள் எனச் சந்தேகித்துக் காதலனையும், தன்வீடும் அழிய வசை பாடி னான் என்பது மற்றொரு செய்தியாகும். இது தொடர்பாக பாடலெதுவும் கிடைக்கவில்லை. உறவும் வீடும் இன்றி ஊர் ஊராக அவன் அலைந்ததை வைத்து இக்கதை புனையப் பட்டிருக்கலாம்.

### 5.8 கணக்கன் மேல் காளிமடல் பாடியது

உறவினர் பாலிருந்த வெறுப்பு அவர்கள் அழிந்தபின்பு ஊரார்பால் வெளிப்பட்டதுபோலும். தன் நிலத்தை அளந்த கணக்கன் மேல் ஆண்டானின் வெறுப்பு சென்றுள்ளது. கள்ளக்கணக்கன் நிலத்தை அளந்த கையைப் பாம்பு கடிக்க ஆண்டான் வசைபாடியுள்ளான். அதன்படியே நிலத்தை அளக்கும் போது கணக்கனைப் பாம்பு தீண்டியுள்ளது. தீண்டிய இடத்தை வெட்டியெறிந்து உயிர் வாழ்ந்த கணக்கன் மீது ஆண்டான் ஒரு காளிமடல் பாடி அவனைக் கொன்றான் என்பது மற்றொரு கதையாகும்.

கணக்கன் மீது பாடிய கவியும், காளிமடலும் கிடைக்கவில்லை. தனிப்பாடல்களை அன்றி நீண்ட பாடல்களையும் – துதிப்பாடல்களையும் ஆண்டான் பாடியுள்ளான் என்பதற்கு இப் பாட்டு ஒரு சான்றாகும்.

### 6. கருணையூர்க் கூத்தப் பட்டனைத் தண்டித்தது –

நாடோடியாகத் திரிந்த ஆண்டான் கவிராயன் நாடு நகரங்களில் பகலில் யாசித்து உண்பதும் இரவில் கோவில்களில் தங்குவதும் வழக்கமாகக் கொண்டிருந்தான். அந்நாட்களில் ஒரு முறை பெருங்கருணையூரின் கோவில் பட்டருடன் ஆண்டான் மோதியுள்ளான். இந்நிகழ்ச்சியின் கதைப் பின்னணி தெரிந்திலது. தண்டபாணி சுவாமிகள் இதைப் பின்வருமாறு பாடியுள்ளனர்.

அந்தமார் பெருங்கருணையூர்க் கூத்தப் பட்டன்றன்
சொந்தமா மனைவிः யச் சொலாவாறு தூடணித்தான்

இப் பாடல் வரிகளிலிருந்து கூத்தப் பட்டனின் மனைவி வாய் பேசாது ஊமையாகி விடுமாறு ஆண்டான் சபித்திருப்பான் போலும். காளமேகப் புலவனுக்கும் கோவில் பட்டர்களுடன் இது போன்ற அனுபவங்கள் முன்பு நிகழ்ந்துள்ளமையை இங்கு நினைவுகூர முடியும்.

## 7. கூழொடு மோர் கலந்த பெண்மீது வசை

காளமேகம் மோர்க்காரியைச் சிலேடையில் பாடிச் சென்றான். ஆண்டான் கவிராயனோ அவ்வாறான நங்கை மீது தீயோர் பேசும் சொற்களைவிடப் பழியான சொற்களால் கவி பாடியுள்ளான். இதனை,

விலையில் கூழொடு மோர் கரைத் துதவுமெல்லியன் மேற்
புலையர் பேசிடுஞ் சொற் கொடோர் புன்கவி புகன்றான்

எனும் **புலவர் புராணச்** செய்யுளால் அறிய முடியும். கூழுடன் மோர் கலந்து விலைக்கு விற்கும் அம்மாது செய்த தீவினை என்னவெனத் தெரியவில்லை. அவளுடைய மோர் நீரானதா அல்லது கூழ் கெட்டதா என ஐயம் எழுகின்றது.

## 8. பெண் ஒருத்தியின் மானம் வெளிப்படுமாறு பாடியது

ஆண்டான் கவிராயன் பாடிய பாடல்களுள் நல்லெண் ணத்துடன் புகழ்ந்து பாடிய பாடல்கள் என ஓரிரு பாடல்களே பாடப் பெற்றுள்ளன. பாடல்கள் கிடைக்காவிடினும் அவை தொடர்பான கதைகள் வழங்குகின்றன.

நங்கை ஒருத்தியை நாட்டு மக்கள் குற்றஞ்சுமத்தினர். அவள் குற்றமற்றவள் என்பதை நிரூபிக்க வற்புறுத்தினர். ஆண்டான் கவிராயன் அம் மங்கை நல்லாள் குற்றமற்றவள் என நிரூபித்து அவள் மானம் ஊராருக்குத் தெரியுமாறு தன்பாட்டால் புலப்படுத்தியுள்ளான். இந்நிகழச்சியைக் குறிப்பிடும் **புலவர் புராணப்** பாடலடிகள் பின்வருமாறு.

நீருக் குள்ளொரு கையிடு நேரிழைமான
மாருக் குந்தெரிந்திடும்படி செய்தன னந்தோ

## 9. மலையாளத்து கணிகையர் இயல்பு குறித்துப் பாடியது

மலையாளத்து நாட்டிற்குச் சென்று சர்க்கரை அனுப்பு மாறு கூறிவந்த ஆண்டான் தொடர்பான நிகழ்ச்சிகள் முன்பு கூறப்பட்டன. அவ்வாறு சென்று வந்த ஆண்டானை அவனது இளம்பருவத்து நண்பர்கள் மலையாளத்து மாதர் இயல்பைக்

கேட்டனர். அவ்வாறு கேட்டோரை அவன் பேய்களாகுமாறு சபித்துவிட்டு அப் பாட்டிலேயே அங்குள்ள கணிகையர் இயல்பையும் கூறியுள்ளான். இந்நிகழ்ச்சியைக் கூறும் **புலவர் புராணத்துப்** பாடல் வருமாறு.

> இளம்பருவத் துறவாளர் பலர்கூடி மலையாளத் தியன்ற மாதர்
> வளம் பகர்தி யெனக்கேட்ப வரையெலாம் பேய்களென வைதப் பாட்டிற்
> களம்படு நஞ்சினர் காந்தீச் சுரத்து வடிவெனுங் கணிகை கலவியின்பம்
> விளம்பது வெல்லத்து மிச்சந் தேனமுதினிலு மேலென்றானே

மாதருடன் ஆண்டான் கவிராயன் பெற்ற தன் அனுபவங்களை வேறு சில பாடல்களிலும் கூறியுள்ளான். இவர்கள் பெரும்பாலும் தாசியர்களாக இருப்பதையும் இப் பாடல்களிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

### 10. ஆற்றூரில் சோமி எனும் தாசி

இவ்வூர் இன்றைய ஆத்தூராக இருக்கலாம் எனத் தோன்றுகிறது. இது தாமிரபரணி சங்கமத்தின் அருகில் தென் பகுதியில் உள்ளது. இந் நகரத்திலுள்ள சோமி எனும் கணிகை மிக்க அழகுள்ளவள் என்றும் அதன் காரணமாகக் கடவுளர்கள் கூட அவள் அழகில் ஈடுபட்டு மயங்கினர் என்றும் அங்கதமாக ஆண்டான் கவிராயன் பாடியுள்ளான். அதனைக் குறிக்கும் புலவர் புராணத்துப்பாடல் வருமாறு.

> அன்று சிவன்புர மூன்று மெரித்த பொழுதொரு மூவர்க்கந்த வெந்தீ
> நன்றுபயந் துபோல வாற்றூரிற் சோமியெனு நாரிமேனி
> பொன்றுமழகான் முகுந்தன் மாலானான் பிரமன் மடலூர்ந்தான் மாரன்
> றன்றுகடீருரு வழிந்தா னென்றான நஞ்ஞனஞ் சிறிது சாற்றினானே

காளமேகமும் ஆற்றூர் சோமி எனும் தாசி பற்றிப் பாடியுள்ளார். அப்பாடலை ஒப்பீட்டுப்பகுதியில் (அட்டவணை 9)

காணலாம். ஒரு வேளைஆண்டான் பாடிய பாடலைத்தான் காளமேகம் பாடியதாகத் தொகுத்து விட்டனரோ எனும் ஐயம் எழத் தக்கவிதத்தில் மேலேயுள்ள பாடல் பாடப் பெற்றுள்ளது. இப்பாடல் குறிப்பிடும் நிகழ்ச்சி ஆண்டான் தொடர்புடையதாக இருப்பதாகவும் நம்பப்படுகின்றது. அதன் காரணமாகவே 'ஆத்தூரோடு போகவேண்டாம்' என அவன் பாடினான் போலும்.

## 11. கணிகையர் மீது சொல்மடல் பாடல்

ஆண்டான் கவிராயன் வாழ்ந்த காலத்தில் கோவிலுடன் தொடர்புடைய கணிகையர் பற்றிய பல செய்திகளை அறிந்து கொள்ளமுடிகின்றது. இது அக்காலத்துச் சமூக நிலையை அறிந்து கொள்ளத் துணை செய்கின்றது.

ஆண்டான் தங்கியிருந்த கோயிலொன்றிலிருந்த கணிகையர் பல வகையான குற்றங்களைச் செய்து வந்தனர். ஊராரையும், கோயிலில் வதிந்த நாடோடிகளையும் அவர்கள் தங்கள் குறும்புகளால் இகழ்ந்தனர். அதனால் வெறுப்புற்றிருந்த போது அவர்கள் கோயில் மண்டபத்தின் மேலிருந்து இரவில் நீக்கிய சிறுநீர் அருவிபோல விழுந்ததைப் பார்த்துக் கொதிப்புற்ற ஆண்டான் அவர்கள் மேல் சொல்மடல் ஒன்றைப் பாடினான். அச் சொல்மடல் பாடியதற்கான காரணத்தைக் கேட்டோர்க்கு அவற்றை அவன் சொன்ன போது ஊரார் பெருத்த நகை செய்தனர் எனப் **புலவர் புராணம்** கூறுகின்றது.

*ஆங்கொரு கோயிலிற்பணிசெய் கணிகையர்செய்*
*குற்றங்களவை பொறானாய்*

*வேங்கொடுங் கண்ணதிகாரி வெயிற்போது மண்டபத்தின்*
*மீதேயுய்ப்பப்*

*பாங்கொரு சிற்றருவியென வவர்பெய் சிறுநீர் விழுதற்*
*பார்த்ததாலே*

*தேங்கொலிச் சொன்மட லொன்று பாடினான் வினவினர்தாஞ்*
*சிரிக்குமாரோ*

## 12. சீவலப்பேரி கணிகையை அடக்கியது

தாமிரபரணியின் கரையிலுள்ள ஊர் சீவலப்பேரி. பாண்டியன் சீவல்லபன் பேரில் அமைவது. நெல்லை நகரை அடுத்துள்ள ஊர். இவ்வூரில் உள்ள சுடலை மாடன் எனும் தெய்வம் மிகவும் சக்தி வாய்ந்தது ஆகும். நாட்டுப் புறக் கதைப்பாடல்களான வடுகராசன் கதை, பலவேசஞ் சேர்வைக்காரன் கதை என்பவற்றுள் இது குறிப்பிடப் படுகின்றது.

இவ்வூரில் வசித்த கணிகை ஒருத்தி காரணமாகப் பல ஆடவர் கவலையுற்றிருந்தனர். ஆண்டானுடன் செல்லும் ஆசிரியர் மகன் சடகோபன் இக்கணிகை மேல் மையலுற்றான். அவளைக் கூடி இன்பம் துய்க்க நினைத்தான். சடகோபனின் தேவைகளை நிறைவேறச் செய்வது ஆண்டானின் கடமை அல்லவா? அதனால் தனது வர பலத்தால் அக் கணிகையைச் சடகோபன் அடையுமாறு செய்தான்.

## 13. மதுரை விலை மடந்தையை எமபுரம் அனுப்பியது

ஆண்டான் கவிராயன் மதுரை நகருக்கும் சென்றுள்ளான். அதற்கு வடக்கே சென்றதாக நிகழ்ச்சிகள் இல்லை. அம் மதுரை மாநகரிலிருந்த விலை மடந்தை ஒருத்தி ஆண்டானை அவமதித்துள்ளாள். ஆண்களைப் பெண்கள் அவமதித்தால் இயல்பாகவே ஆண்கள் கொதித்தெழுவர். அதிலும் பண்டா ரமாகத் திரிந்த ஆண்டானைக் கணிகை ஒருத்தி அவமதித்த தற்குக் கேட்கவா வேண்டும். அவ்வாறு செய்தவளை அடுத்த வர் கேட்கக் கூட நாணத்தகும் சொற்களால் வைது, வசையால் எமலோகம் அனுப்பினான் என அவனது வாழ்க்கையைச் சித்திரிக்கும் தண்டபாணி சுவாமிகள் குறிப்பிடுகின்றார்:

> மதுரை யூரினுக் கேகின னொருவிலை மடந்தை
> கதுமென் றின்னவற் கண்டெழுந் திராவிதங் கருதி
> யிதுசொன்னா னெனச் சொல்லா நாணிடுங் கவியிசைத்துப்
> புதுமை யாயிரந் திகழெம புரம்புகுத்தினனே

ஆண்களையும் ஊராரையும் வசைபாடியும், சிலர் இறந்து

போகுமாறு சபித்து வந்த ஆண்டான் கவிராயன் ஒரு விலை மாது இறக்குமாறு சபித்தது இந்த நிகழ்ச்சி மட்டும் தான். இதிலிருந்து அம்மாதுமேல் எந்த அளவு சபித்தலைச் செய்திருப்பான் என எண்ணத் தோன்றுகிறது.

### 14. தன்னை அவமதித்த பெண்ணின் மகனைக் கொன்றது

ஆண்டானை இகழ்ந்த பெண் ஒருத்தி அவனை அவள் இழந்துவிடுவதாகக் கூறினாள். அதனால் அவனுக்குச் சினம் ஏற்பட்டது. அப்பெண்ணின் மகனையே அவள் இழந்து விடுவாள் எனச் சபித்துவிட்டான். அந் நிகழ்ச்சி குறித்த **புலவர் புராணப்** பாடலாவது,

> *நீட்டாண்மைப் பெண்ணொருத்தி யுனைக்கொடுப்பேனே யன*
> *முன்னிகழ்த்தக் கேட்டுக்*
> *காட்டானை போன்றமுலைக் காரிகைநீ பெற்றெடுத்துக்*
> *கண்போற் காக்குங்*
> *கோட்டானைச் சாவதற்குக் கொடுத்திடெனச் சொல்லியுடன்*
> *கொன்றானந்தப்*
> *பாட்டாளன் காளமே கப்புலவனெனச் சிலர்தாம்*
> *பகர்வா ரன்றே.*

இப்பாடல் குறிப்பிடும் நிகழ்ச்சியொன்று காளமேகம் தொடர்புடையதாக நம்பப்படுகிறது. காளமேகம் அம்மகன் இறக்கவும் பிறகு வேண்டிக் கொண்டபிறகு அவன் உயிர்த் தெழவும் பாடியதாக வரலாறுண்டு. இக்கதை தொடர்பான உண்மையினை அறிவது இன்றியமை யாததாகும்.

### 15. கன்றுக்குப் பால் ஈயாது கறந்தவள் மீது வசைபாடியது

மக்கள் மீது ஆண்டானுக்கு வெறுப்பிருந்ததற்கு மற்றொரு நிகழ்ச்சியும் கதையாக வழங்குகின்றது. கன்றுக்குச் சிறிதேனும் பால் விடாது ஒட்டக் கறந்த அந்தண மாது மீது தனிப்புராணம் ஒன்றைப் பாடினான் என்றும் சொல்வர். அம் மாது இறந்தாளா இல்லையா எனத் தெரியவில்லை. அவன் பாடிய வசைப்புராணமும் கிடைத்திலது.

ஆண்டானின் பல வசைப் பாடல்கள் சம்பந்தப்பட்டோரை அழிக்கவே செய்துள்ளன. இவ்வாறு ஒட்டப்பிடாரம், அதன்

அண்மைப் பகுதிகளிலும் ஆண்டானின் வசைப்பாடல்கள் ஆரம்பக் காலங்களில் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. அதன் காரணமாக அவனை வெறுத்தொதுக்கும் நிலை அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. ஊராரும் உறவினரும் வெறுத்தபின்பு ஆண்டானுக்குப் புகலிடம் அயலூர்களாகவே இருந்தன. அவ்வாறு அவன் யாத்திரை செல்கையில் பல ஊர்களும் பேர்களும் அவன் வசைகவிக்கு ஆளாகி அழிவுற்றுள்ளன.

## 16. கயத்தாறு பெருமாள் கோவில் நசிக்கப்பாடியது

ஒட்டப்பிடாரத்துக்கு மேற்கேயிருப்பது கயத்தாறு நகராகும். இங்குள்ள பெருமாள் கோவிலில் கருட உற்சவம் நடந்தது. அதைக் கண்ணுறவந்த ஆண்டான் கவிராயன் களைப்பால் கண்ணுறங்கி விட்டான். பல்லக்கு சுமக்கும் ஆள் என நடுநிசியில் ஆண்டானையும் கோவிலதிகாரிகள் எழுப்பிப் பல்லக்கு சுமக்கவைத்துவிட்டனர். பசியின் களைப்பும் பாதி உறக்கக் கலக்கமும், தோள்வலியும், கால்வலியும் சேர்ந்து கவிராயனுக்குக் கோபத்தை உண்டாக்கிவிட்டன. அதன் காரணமாக வசைகவி வெளி வந்தது. (பாடல் தந்தவர் மூலப் பொழி மண்டக் ராஜா) ..

பாளைமணங் கமழுகின்ற கயத்தாற்றுப் பெருமாளே
பாவி பழிகாரா கேள்
வேளை யென்றா லிவ்வேளை பதினாறு நாழிகைக்கு
மேலா யிற்றென்
தோளை முறித்ததுமன்றி உன் நம்பியானையுங்கூடச்
சுமக்கச் செய்தாய்
நாளையினி யார்சுமப்பா ரெந்நாளும் உன் கோவில்
நாசம் நாசந்தானே

ஆண்டான் கவிராயனின் இப் பாடலைச் சற்று மாற்றிப் பாடியுள்ளது **புலவர் புராணம்** அது வருமாறு.

பாளைமணங் கமழ்ந்திருக்குங் கைத்தாற்றுப் பெருமாளே
பழிகாராவென்
றோளையற முறித்தாயே நம்பியானையுங்கூடச் சுமக்கப்
போதே

வேளையிதில் விழுந்தொழிவாய் நாளைவரோஞ்சுமக்கவென
விண்டானந்தோ

தேளைநிகரவன் வாக்குப் படலுமதிலிருந்த கலை
சிதைந்ததம்மா

இப் பாடல் முடிந்ததும் சப்பரமும் முறிந்தது, சிலையும் கீழே விழுந்தது. ஆண்டான் கவிராயனின் வசை காரணமோ என்னவோ கயத்தாற்றுப் பெருமாள் கோவில் நசித்துவிட்டது. அங்குள்ள சிலையை எட்டயபுரத்துக்கு எடுத்துச் சென்றுவிட்டனர்.

மேலேயுள்ள தனிப்பாடல் காளமேகம் பாடியதாக **அபிதான சிந்தாமணி** (பக். 423) குறிப்பிடுகிறது. இது பிழையாகும். காளமேகம் தென்பாண்டி நாடு வரவில்லை, அது மட்டுமல்ல. தென்பாண்டி நாட்டுப் பாமரர் காளமேகத்தின் பாடல்களை அறியமாட்டார் என்பதும் மற்றொரு காரணமாகும். இப் பாடல் திருச்செந்தூர் வட்டாரத்துப் பாமர மக்களிடையே வழக்கிலுள்ளது. இதனைக் காளமேகத்தின் தனிப்பாடலாகத் தவறாகத் தொகுத்துள்ளனர். சில தனிப் பாடல் திரட்டு நூல்கள் செய்த தவறுகளினால் அத் தனிப் பாடல்களை ஆராய்வோரும் அதே தவறையே மீண்டும் செய்தனர்.

காளமேகம் தன் தல யாத்திரையின்போது திருவாரூர் வைதீசுவரன்கோவில், நாகபட்டினம், எட்டிகுளம், கொட்டத்தூர், தண்டாங்கூர், ஆமூர், அமராவதி எனும் ஊர்களுக்குச் சென்றபின் கயற்றாறு வந்து மேலேயுள்ள பாடலைப் பாடியதாக **அபிதான சிந்தாமணியில்** குறிப்பிடப் பட்டுள்ளது. அவ்வூர் நீங்கித் திருப்பனந்தாள் அடைந்து பின்னர்த் திருமலைராயன் பட்டணம் சென்றதாகவும் அதிலுள்ளது. காளிமேகம் தலயாத்திரை செய்தது தமிழ் நாட்டில் வடபகுதி ஊர்கள். அவர் தென்பாண்டி நாட்டுக்கு வரவேயில்லை. ஆண்டான் கவிராயன் ஊர்யாத்திரை சென்றது தென்பாண்டி நாட்டுப்பகுதிகள். மேலும் அவன் மலைநாட்டுக்கும், மதுரைக்கும், சேதுவுக்கும் சென்றதாகச் சில பாடல்கள் மூலம் அறிகிறோம். சில தனிப்பாடல் திரட்டு நூல்களில் அவன் சிக்கல் எனும் ஊர்பற்றியும்

திருக்கானப்பேர் எனும் ஊர் பற்றியும் பாடியுள்ளான் எனக் கூறப்பட்டுள்ளது. அவன் காலத்துக்குச் சற்றுப்பின் வாழ்ந்த தண்டபாணி சுவாமிகள் அவன் சரித்திரத்தைத் தம் **புலவர் புராணத்துள்** பாடியுள்ளார். அதிலுள்ள பாடல்தான் மேலேயுள்ள பாடல் (காண்க இணைப்பு 1. பாடல் 58) ஆண்டானின் பாடல்கள் பல தென்பாண்டி மக்களால் அறியப் பெறுவதாலும் அவன் பாடிய ஊர்களெல்லாம் தாமிரபரணி தீரத்து ஊர்களாதலாலும் மேலே குறிப்பிடப் பெற்ற பாடல் ஆண்டான் கவிராயனின் கயத்தாறு செய்தியைக் கூறும் பாடலாகும்.

## 17. ஆறுமுக மங்கலத்தில் சோறு குறித்துப் பாடியது

ஆறுமுகமங்கலம் என்பது தாமிரபரணி ஆற்றிற்கு வடக்கே கொற்கை அருகிலுள்ள ஓர் ஊர் ஆகும். முன்னொரு காலத்தில் இவ்வூர் செல்வாக்குற்றிருந்தது. இப்போது இவ்வூரினர் பயிர்த் தொழில் மட்டுமே செய்து வருகின்றனர். ஆண்டான் கவிராயன் தன் ஊர் யாத்திரையின் போது இவ்வூருக்கு வந்தான்.

வந்தவன் வசைபாடுபவனாதலால் அவ்வூரார் யாரும் அவன்பால் கருணை காட்டவில்லை போலும். பிச்சைக் காரனாக இருந்தால் உணவு வழங்கியிருப்பார். ஆனால் வந்தவனோ கவிராயன் பட்டம் பெற்றவன். ஆறுமுக மங்கலத்தில் பெரும்பான்மையோர் வயல்வேலைகளுக்குச் சென்று விடுவதால் உணவு விடுதிகளும் அவ்வூரில் இல்லை போலும். பசித்த அவனுக்கு உணவு கிடைக்காததால் ஆண்டான் தனக்கேற்பட்ட நிலையினை மிக வருந்திப் பாட்டொன்றால் தெரிவித்துள்ளான்.

டாக்டர் உ.வே. சாமிநாதையர் குறிப்பிடுவதாவது,.

> .........பெருங்குளத்திலிருந்து ஆறுமுகமங்கலம் சென்றேன்... சுந்தரமூர்த்திப் பிள்ளைஅவ்வூர் அக்கிரகாரத்தில் ஒரு வீட்டில் என் ஆகாரத்துக்கு ஏற்பாடு செய்தார். அங்கே அன்று பகற்போசனம் செய்து

கொண்டேன். எனக்கு அந்த வீட்டுக்காரர் பெரிய விருந்தே நடத்தினாரென்றுதான் சொல்லவேண்டும். அந்த விருந்துணவை உண்டபோது அவ்வூர் சம்பந்தமான வரலாறு ஒன்று எனது நினைவுக்கு வந்தது. ஆண்டான் கவிராயரென்ற பிராமண வித்துவான் ஒருவர் ஆறுமுக மங்கலத்துக்கு வந்தார். ஆறுமுக மங்கலம் பெரிய ஊர். ஆயிரத்தெட்டுப் பிராமணர் வீடுகள் முன்பு அங்கே உண்டென்றும், அவருள் விநாயகர் ஒருவரென்றும் சொல்வார்கள். அங்குள்ள விநாயகருக்கு ஆயிரத்தெண் விநாயகரென்பது திருநாமம்.

அவ்வளவு பெரிய ஊரில் ஆண்டான் கவிராயருக்கு என்ன காரணத்தாலோ பசிக்கு உணவு கிடைக்கவில்லை. அவர் வசை பாடுவதில் வல்லவர். பிற் காலத்துக் காளமேக மென்று சிலர் அவரைச் சொல்வதுண்டு. பசி மிகுதியால் அவர் வருந்தியபோது கோபத்தால், "ஆறுமுகமங்கலத் துக்கு யார் போனாலும் சோறு கொண்டுபோங்கள், சொன்னேன், சொன்னேன்" என்று சொல்லிச் சில வசைகவிகளும் பாடினாராம்.

இந்த வரலாற்றுக்கும் எனக்குக் கிடைத்த விருந்துக்கும் நேர்மாறாக இருந்தது. "ஆண்டான் கவிராயர் இந்த ஊரைப்பற்றி இழிவாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் எங்கும் சாப்பிடாத புதிய புதிய உணவுகள் எனக்கு இங்கே கிடைக்கின்றனவே," என்று உடன் உண்ட ஒருவரிடம் நான் சொன்னேன்.

'ஆம், அந்த இழிவைப் போக்குவதற்காகவே யார் வந்தாலும் இவ்வூரார் விசேஷமான விருந்து செய்வித்து அனுப்புவது வழக்கம்' என்று அவர் விடை பகர்ந்தார்.

**என் சரித்திரம் பக். 932– 3**

ஆண்டான் கவிராயனின் பழிச் சொல்லைப் பொய்யாக்கும் விதத்தில் அவ்வூரார் நடந்து கொண்டார்கள் என்பதை மேலேயுள்ள பகுதிமூலம் தெரிந்து கொள்ளலாம். ஆனால் இன்றும் ஆறுமுக மங்கலத்தில் ஒரு நல்ல உணவு விடுதிகள் நிலைப்பதில்லை.

ஆறுமுக மங்கலம் பற்றிய ஆண்டானின் பாடலின் ஈரடிகள் வருமாறு,

> ஆறுமுக மங்கலத்துக் காரொருவர் போனாலுஞ்
> சோறுகொண்டு போங்கோள் சொன்னேன் சொன்னேன்

## 18. ஆத்தூர் இயல்பைப் பாடியது

தாமிரபரணி ஆற்றின் தென்கரையில், அதன் சங்கமத்துக்குச் சற்று முன்பாக இந்நகர் உள்ளது. இப்போது இது மேல ஆத்தூர், கீழ ஆத்தூர் என இருபிரிவாக வழங்கப்படுகின்றது. வாழைத் தோட்டங்களும் கொடிக் கால்களும் நெல் கழனிகளும் நிறைந்த ஊர். கோவில்களும் உள்ள ஊர்.

ஆண்டான் கவிராயன் ஆறுமுக மங்கலம் நீங்கிய பிறகு ஆற்றைக் கடந்து ஆத்தூரை அடைந்திருப்பான் போலும் ஆத்தூரிலும் அவனுக்கு வேதனை ஏற்படும்படி நடந்துள்ளது. அதன் காரணமாக

ஆற்றோடே போனாலும் ஆத்தூரோடு போகாதே எனப்பாடியுள்ளான். 'ஆத்தூரோடு' என்பதை 'ஆத்தூரின் வழியே' என எடுத்துக் கொள்ளலாம். அவ்வாறு செல்வதால் துன்பம் நேரிடும் எனும் பொருள் உள்ளது. இவ்வாறான வசை ஆத்தூருக்கு ஏன் ஏற்பட்டதெனத் தெரியவில்லை.

மேல ஆத்தூரில் பிராமணர்களின் ஆதிக்கமும், கீழ் ஆத்தூரில் வேளாளர் ஆதிக்கமும் முன்பு இருந்ததாம். அயலார் அவ்வூர் வழியே சுதந்திரமாகச் செல்வதற்குத் தடையிருந்ததாம். மேல ஆத்தூரில் தாசிகள் தெருவொன றிருந்ததும் மற்றொரு காரணமாக இருக்கலாம் என்பர்.

## 19. சொக்கப் பழங்கரையைப் பாடியது

இது தாமிரபரணி ஆற்றங்கரையை அடுத்துள்ள ஓர் ஊர். இங்கும் பயிர்த் தொழிலே முக்கியத் தொழில். கார், பிசானம் என இரு போகம் நெல்விளையும் ஊர். ஆற்றங்கரையிலுள்ள ஊரினராயினும் ஆண்டான் கவிராயனை உபசரிக்காது

விட்டுவிட்டனர். அதன் காரணமாக அவ்வூர் பற்றி அவன் பாடிய பாடல் வருமாறு,

காருக்குத் தீய்ந்துவிடும் கார்போய்ப் பிசானம் வரி
லூருக்குள் வெள்ளமெடுத்தோடுமே — பாருக்குள்
ஆற்றுக் கடுத்தவூர் அக்கரையி னின்றவூர்
சோற்றுக் கலந்தவூர் சொக்கப் பழுங் கரையே

இப்பாடலில், ஆற்றை அடுத்து இவ்வூரிருந்தாலும் கார்காலத்தில் நெற்பயிர் தீய்ந்து போகுமாம். பிசான் காலத்தில் ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தோடுவதால் ஊருக்குள்ளும் வெள்ளம் வருமாம். இவ்வாறான நிலையில் இவ்வூரார் சோற்றுக்குத் திண்டாடுவர் போலும். இப்படிப பட்ட ஊரில் ஆண்டானை எவ்வாறு அவர்கள் கவனிக்க முடியும்?

ஆண்டான் காலத்துக்குப் பின் இந்நிலைமை மாறி விட்டது. ஆற்றின் நடுவே கி.பி. 1859இல் கட்டப்பெற்ற சீவைகுண்டம் அணைக்கட்டினால் ஆற்று நீர் ஒழுங்கு படுத்தப் பெற்றது.

### 20. பட்டாக்குறிச்சி

தாமிரபரணியின் தென்கரையிலுள்ள ஊர். ஆத்தூரை அடுத்துள்ளது. கழனிகளும், வாழைத் தோட்டங்களும் வெற்றிலை பயிராகும் கொடிக்கால்களும் நிறைந்தது. அகத்திச் செடிகளில் வெற்றிலைக் கொடிகள் படர்ந்திருப்பதும், வெற்றிலையைக் கொய்து அவற்றை அடுக்குவதும் அழகான காட்சிகளாகும்.

ஆண்டான் கவிராயன் இவ்வூர்க்கு வந்து வெற்றிலை கேட்டுள்ளான். வெற்றிலை கொடுக்கப்படவில்லை. வாயில் வசைகவி வந்தது. கொடிக்கால் தீப்பற்றி எரிந்தது. பட்டாக் குறிச்சிக் கொடிக்கால் பட்டுப்போனது.

### 21. நட்டாத்தியில் நல்ல தண்ணீருக்குப் பாடியது

தாமிரபரணி ஆற்றின் இருமருங்கும் உள்ள சில பகுதிகள் திருவழுதிவளநாடென முன்பு வழங்கப்பட்டன. பெருங்குளம்,

அதன் தலை நகராயிருந்தது. பிறகாலச் சோழ மாமன்ன னான முதலாம் இராசராசனின் படைப்பிரிவு ஒன்று பெருங்குளத்தினருகில் நிலை கொண்டிருந்தது. சோழப் பிரதிநிதி கி.பி. 11ஆம் நூற்றாண்டு தொடக்கம் முதல் இவ் வளநாட்டை ஆண்டுவந்தான்.

சோழன் மரபில் வந்தோர் நாயக்க ஆட்சி காலத்திலும் அதற்குப் பின்னும் சிற்றரசர்களாகவும், இறுதியாக ஜமீன்தார்களாகவும் இருந்து வந்துள்ளனர். அவர்கள் தங்கிய இடம் இன்றைய நட்டாத்தி ஆகும். இன்றும் அங்கு மாளிகை யும் பிற சரித்திரச் சின்னங்களும் காணப் படுகின்றன. அவ்வூர் சோலைகள் சூழ்ந்திருந்தது.

ஆண்டான் கவிராயன் தனது ஊர் யாத்திரையில் ஒருநாள் நட்டாத்தி வழியாகச் சென்றுள்ளான். நட்டாத்தியர் பழக்க வழக்கங்களாலும் மரபாலும் பொதுமக்களிலிருந்து உயர்ந்த வர்களாதலால் அவன் பருக நீர் வேண்டிய போது கொடுத் திலர். இதனால் ஏற்பட்ட அவமரியாதைக்கு ஒரு வசை கவியால் பழிவாங்கியுள்ளான்.

குளிர்ந்த பதி நட்டாத்தி ......
குடிக்கத் தண்ணீர் இல்லே

"ஆண்டானின் நா அசைந்ததன் காரணமாக நட்டாத்தியில் இன்னும் நல்ல தண்ணீர் கிடைப்பதில்லை" என அவ்வூர்க் காரர் எழுதியுள்ளார். (மவ. ஆனந்த குமார் கடிதத் தொடர்பு.)

ஆண்டான் கவியை மெய்யாக்குவது போல் இப்போதும் நடந்து வருவது வியப்பாக உள்ளது.

### 22. வேளாளர் மேல் புகழ்பாட அது வசையாகியது :

ஆண்டான் கவிராயன் தான் தங்கியிருந்த ஒரூரில் தனக்குச் செய்த நன்மையினால் அவ்வூர் வேளாளர் இருவரைப் புகழந்து பாடத் தொடங்கினான். ஆனால் அக்கவி வசைகவியாக வந்ததால் அவ்வேளாளர்களால் துன்பத்திற் காளாகியுள்ளான். இந்நிகழ்ச்சியைச் சித்தரிக்கும் **புலவர்**

**புராணப்** பாடல் வருமாறு.

*வெள்ளு ரத்தினா லிரண்டு வேளாளர்தம் மீதி*
*லுள்ளு வப்புறீஇ யொருகவி யோதிடத் துவக்கி*
*யெள்ளும்பாடி றம் விழுந்ததாற் கெடுதிகண் டிடைந்தான்*
*கள்ளு நெஞ்சக மவற்கிலை யெனற்கதோர் கரியே*

## 23. பனஞ்சாடி ஊரினர் மீது பாப்புனைதல்

ஆண்டான் கவிராயன் வெறுக்குமளவிற்குப் பனஞ்சாடி ஊரினர் நடந்துள்ளனர். அவர்கள் செயல் நகைப்பிடமாகும் அளவில் ஆண்டான் கவி புனைந்ததாகப் **புலவர் புராணத்துச்** செய்யுள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. அப்பாடலாவது.

*பாருண் மிக்கதென் பாண்டி யிலுள்பனஞ் சாடி*
*யூருள் வாழ்பவர் தினந்தினம் வயல் வரப்புற்று*
*நீருடன் மலங் கழித்திடுங் கொடுமையை நேர்கண்*
*டியாருஞ் சொல்லியே நகும்படி யொருகவி யிசைத்தான்*

## 24. ஆண்டானின் போட்டிக் கவிகள்

பொருளீட்டும் நோக்கத்துடனும் பல ஊர்களைக் காணும் நோக்கத்துடனும் செல்லும் புலவர் தங்கள் யாத்திரைகளின்போது கவிதைப் போட்டிகளிலும் பங்கு கொள்வதுண்டு. ஆண்டான் கவிராயன் அறம் பாடுவதில் தேர்ந்தவனானாலும் அவன் பாடியதாகக் கூறப்பெறும் **காளிமடல், வசை புராணம்** போன்றவற்றாலும், கவிராயன் எனும் பட்டம் பெற்றவனாதலாலும் அவன்மேல் பிற கவிஞர்களுக்குப் போட்டியுணர்வும் பயமும் இருந்துள்ளன. இவற்றைச் சில நிகழ்ச்சிகளால் அறியமுடிகின்றது.

### 24.1 குருகூரிலுள்ளோர் பாடும் கவிக்குப் பதில் பாடியது

குருகூர் அல்லது குருகையூர் என்பது ஆழ்வார் திருநகரிக்கு அருகிலுள்ள ஓர் ஊர். நம்மாழ்வார் இருந்த தலம். குருகூரில் அவன் பாடியதாவது,

*குருகை யூரினாழ் வார்தம தடியவர் கூடிப்*
*பொருவில் செந்தமிழ்க் கெடுப்பதற் கொருகவி புகன்று ......*

எனும் **புலவர் புராணப்** பாடலால் அறிய முடியும்.

இக்குருகூரில் கவிஞர்கள் சிலர் ஆண்டான் கவிராயனின் கவித்திறமையைச் சோதித்துள்ளனர். அவர்களுக்கு அவன் பதிலிறுத்துள்ளான். இவ்விபரங்களையன்றி வேறு செய்திகள் ஆண்டான் தொடர்பாகக் கிடைக்கவில்லை.

## 25. சிந்துக் களஞ்சியப் புலவரை வென்றது

சிந்துக் களஞ்சியப் புலவர் என்பவர் பல புலவர்களை வென்று பல்லக்கில் வந்து 'தாமே உயர்ந்த கவிஞர் ' எனக் கூறினார். அவரை வெல்ல புலவர்கள் ஆண்டானை அண்டினர். அவரில்லாத வேளையில் அவருடைய பல்லக்கில் ஆண்டான் கவிராயன் ஏறி அமர்ந்திருந்தானாம். அதனால் கோபமுற்ற சிந்துக் களஞ்சியப் புலவர் சில பாடல்களைக் கூறினாராம். அவனும் அவ்வாறு கூறமுடியுமா என அவர் செருக்குற்றுக் கேட்டாராம்.

அப்புலவரின் செருக்கை அடக்க ஆண்டான் கவிராயன் நினைத்தான். இதனை **புலவர் புராணம்** கீழ்வருமாறு கூறுகிறது.

செல்லும்போ தொருதேங்காய் கைக்கொடு போயுடனிருந்து
திண்டிற் சாய்ந்தா

னொல்லும்வெனாரென வன்னவன் சீறிப் பார்த்திடலு
முலப்பிலாத

நல்லுரை போன்றாறிப்பா ரெனவெடுத்து வேற்றொலியா
னாணச் சொன்னான்

வெல்லுமென்போற் சிந்துகள்பாடிடுவாயோ வெனவகன்றான்
வினாவ

கொண்டு வந்த தேங்காயை யவன்முன்வைத்து பார்த்தியெனக்
கூறியபாற்

றுண்டுதுண்டென்றடுக் கொலிச்சொற்சில
சொன்னானத்தனை துண்டாயிற்றந்தோ

கண்டுகொண்டாயோ விஙனந்தலையுடைக்க வல்லாயே கழறு
கென்றான்

மண்டுபயமுற்றெழுந்து வணங்கியவன் முன்புவந்த வழிச்
சென்றானே

ஒரு தேங்காயை முன்னிருத்தித் 'துண்டு, துண்டு, துண்டு, துண்டு' எனும் அடுக்கொலிச் சொற்கள் சிலவற்றை வைத்துப்பாடினானாம். பாடல் முடிவில் அங்கு வைத்த தேங்காய் துண்டு துண்டாகச் சிதறியதாம். அதைக் கண்ணுற்ற சிந்துக் களஞ்சியப் புலவர் தம் தலையும் இவ்வாறு வெடித்துச் சிதறும் என அஞ்சி ஆண்டானுடன் போட்டியிடுவதைத் தவிர்த்துப் பின்வாங்கிச் சென்றார் என்றும் கூறப்படுகிறது.

## 26. வள்ளியூரில் மணவீட்டைப் பிண வீடாக்கியது

மலையாள நாட்டிற்குப் போகுமுன் ஆண்டான் கவிராயன் தென்பாண்டி நாட்டின் தென்பகுதி நகரான வள்ளியூரில் தங்கியுள்ளான். அவ்வூர்ச் சிற்றரசன் வீட்டுத் திருமணத்தில் நம் கவிராயக்கு அவமரியாதையும் இன்னலும் ஏற்பட்டன. அதனால் கோபமுற்ற அவன் அந்த மணவீட்டில் மணமகன் பிணமாகும் படி சபித்தான். கொடிய விடத்தினும் கூடிய சொற்களால் அவன் சபித்தான் எனப் **புலவர் புராணம்** கூறுகின்றது.

*மணஞ்செ யோர்மனை யினரிவன் றனைமதித் திலரா*
*யெணஞ்செ யின்னலும் விளைத்ததால் வள்ளியூ ரிறைதன்*
*வணஞ்செய் வாளியே விடும்படிசொலி மணமகனைப்*
*பிணஞ்செய் தானிவன் கவிவிடத் தினுமிகப் பெரிதே*

## 27. செட்டிகுளத்துச் செட்டிக்குப் பாடம் புகட்டியது

வள்ளியூரை நீங்கி நாஞ்சில் நாட்டிற்குச் சென்ற வழியில் ஆண்டானுக்குச் செட்டிகுளம் என்ற ஊரில் ஒரு நிகழ்ச்சி நடந்துள்ளது. அவ்வூரில் வணிகம் செய்துவரும் குட்டிசெட்டி என்பான் யானையும், குதிரையும் வர யாராகிலும் பாடுவார்களேயானால் அவர்களையே 'உண்மையான புலவர்கள்' எனத் தான் ஏற்பதாகக் கூறித் திரிந்தான். இதனைக் கேள்வியுற்ற ஆண்டான் கவிராயன் அச் செட்டியின் மகளைப் புணர அவை வருமெனக் கவி செய்தான். அவ்வாறே யானையும் குதிரையும் வந்து பயமுறுத்தியதாக அச் செட்டியின் மகள் புலம்பினாள் என்று அறிய முடிகின்றது.

உட்டிணஞ் செய்செட் டிகுளமென் றுரைக்கு மோரூரிற்
றட்டி லாமலே தினஞ்சிறு சரக்குகள் விற்குங்
குட்டி செட்டியா னையுங்குதிரையும் வரப்பாடிற்
கெட்டியிப் புலவோனெனக் கிளத்துவே னெனலும்
அவன்மகட் கொடுபோய்ப்புணர் வதற்கவை வருமென்
றெவள வோசினத் துடனொரு கவியிசைத்திட்டான்
கவன மூடவ விராப்பக லங்ஙனங் கண்டு
புவனி யோர்வினாவிடமிகப் புலம்பி மாய்ந்தனளே

காளமேகப் புலவரின் தனிப்பாடல்களைத் தொகுத்தோர் ஆண்டான் கவிராயன் குட்டிசெட்டியைப் பாடிய பாடலைத் தவறாகத் தொகுத்துள்ளனர். வள்ளியூருக்குப்பின் மலையாள நாட்டு மன்னன் தொடர்பான செய்திகள் அதன் பின் வருவதால் இது ஆண்டான் பாடிய பாடலாகுமென முடிவு செய்யலாம்.

## 28. மங்கலக்குறிச்சி மடை பாழாகப்பாடியது

தாமிரபரணி ஆற்றின் கரையில் குரங்கணிக்கு அருகில் இருப்பது மங்கலக்குறிச்சி. ஆறுமுக மங்கலம், மாறமங்கலம் போன்று வரலாற்று முக்கியத்துவம் பெற்ற ஊர் இது. குரங்கணிக்கு அருகே பழைய பாலம் (மடை) ஒன்று ஆற்றுக் குள் இடிந்துகிடப்பதை இன்றும் பார்க்க முடியும். மங்கலக் குறிச்சியையும் குரங்கணியையும் இணைப்பது இந்தப்பாலம். ஆனால் பாவம், பாலம் புண்ணியம் செய்யவில்லை போலும், ஆண்டானின் வசையைப் பெற்று இடிந்துவிட்டதாம். நாலு வரி வசைப்பாடல் பாலத்தை இடித்ததோடு நிற்கவில்லை. அதற்குப் பின்னும் அங்கு மற்றொரு பாலம் கட்டப் பெறுவதையும் தடை செய்து வருகின்றது.

ஆண்டானுக்கு மங்கலக்குறிச்சியிலும் குரங்கணியிலும் ஏற்பட்ட கசப்பான அனுபவத்தால் அவ்விருவூரையும் இணைக்கும் பாலத்தையும், அதன் வழியாகத் தண்ணீர் வந்து கழனிகள் செழிப்பதையும் அவன் விரும்பவில்லைபோலும்.

..... மங்கலக்குறிச்சி மடை பாழ் பாழ்

எனப் பாடிவிட்டுப் போய்விட்டான். வசைகவியின் வாக்கு பலித்தது. பாலம் (மடை) உடைந்தது.

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் ஏரலை அடுத்துக் கட்டப்பெற்ற ஆற்றுப்பாலம் முதலில் மங்கலக் குறிச்சியில் கட்டப்பெறுவதாக இருந்ததாம். ஆண்டானின் சாபத்திற்குப் பயந்து அது ஏரல் நகர் அருகே கட்டப் பெற்றதாம்.

(மவ. ஆனந்தகுமார், கடிதத் தொடர்பு).

மேலும் மங்கலக் குறிச்சி பற்றிய செய்தியைப் **புலவர் புராணம்** தருவதாவது.

மைந்தராமென மங்கலக் குறிச்சியில் வாழ்வா
ரெந்த மாதரைச் சேரினும் சேர்வரே யென்றான்....

மங்கலக் குறிச்சி ஆடவர் ஒழுக்கம் காரணமாகவே அவ்வூர் பற்றிய வசை எழுந்துள்ளது.

## 29. வாழவல்லானில் கூழ் பற்றிப் பாடியது

வாழவல்லான் என்பது தாமிரபரணி ஆற்றுக்கு வடபால் ஏரலுக்கும் குரங்கணிக்கும் இடைப்பட்ட ஓர் ஊர். நீர்வள முள்ள செழிப்பான நிலபுலன்களைக் கொண்டது. ஆயினும் இவ்வூரினரின் பொருளாதாரத்தில் எவ்வித உயர்வும் ஏற்படாதிருந்திருக்கின்றது. இதனை ஆண்டான் கவிராயனின் ஒரு பாட்டால் அறிந்து கொள்ள முடியும்.

வண்டாளம் பூக்கும் வாழவல்லான் நல்லூரில்
கொண்டாடிக் கொண்டாடிப் புகழும் — திண்டாடிக்
......................
குடிப்பது கூழ்வரகு.

(தகவல் –மைனர் துரைசாமி நாடார் , மஞ்சள் நீர்க்காயல்)

வண்டாளச் செடிகள் நீரில் மிதந்து கிடந்து பூத்துக் குலுங்கும் அளவு செழிப்புள்ள புகழ் மிக்க வாழவல்லான் நல்லூரில் எவ்வளவுதான் விளைச்சலிருந்தாலும் மக்கள் கஞ்சி குடிப்பதே பழக்கமாக இருக்கிறது. இது ஆண்டா

னுடைய சாபமா? அல்லது பயிர்த் தொழிலாளரின் இயல்பா எனத் தெரியவில்லை.

இக் கருத்தை தேவி வார இதழ் (நெல்லை) அலுவலகத்தில் பணியாற்றும் வாழவல்லான் ஊர்க்காரரான திரு சுப்பிர மணியமும் உறுதி செய்தார்.

### 30. மருதூர் அணையைப் பாட்டால் கட்டியது

தாமிரபரணி ஆற்றுநீர் திருவைகுண்டத்து அணையால் வடகால், தென்கால் எனப்பிரிந்து பாசனத்திற்குப் பயன்பட்டு வருகிறது. வடகாலில் வற்றாது நீர்பாய்ந்து செல்வதைக் கண்ணுறலாம். இந்நீர் பழையகாயல் வரையிலும் சென்று பல ஊர்களை வளமாக்குகிறது. திருவைகுண்டத்து அணை கி.பி.1850 இல் கட்டப்பெற்றதாகும்.

மருதூர் அணை என்பது திருவைகுண்டத்துக்கு மேற்கே தாமிரபரணியில் கட்டப்பெற்றதாகும். இவ்வூர் சீவலப் பேரிக்குக் கிழக்கேயுள்ளது. இவ்வணையின் காரணமாக வல்ல நாட்டுபகுதிகள் வளம் பெறுகின்றன. இவ்வணை தொடர்பாக வழங்கும் கதையொன்று ஆண்டான் கவிராய னின் வாழ்க்கையுடன் இணைத்துப்பேசப்பட்டு வருகின்றது.

மருதூர் அணையை அப்பகுதியை ஆண்டசிற்றரசன் ஒருவன் ஆட்களை நியமித்துக் கட்டிக் கொண்டிருந்தான். அவ்வரசனுக்கு அழகான இரு மகளிர் இருந்தனர். அணை கட்டப்படுதலை அவ்வழியாக வந்த ஆண்டான் கவிராயன் கண்ணுற்றான். ஆட்களும், ஆயுதங்களுமாக அணைகட்டப் பெறுதலை அவன் ஏளனத்துடன் பார்த்தான். இதனை அறிந்த அரசன் ஆண்டானிடம் அதற்கான காரணம் வினவியபோது அவ்வணையைத் தன் பாட்டாலேயே கட்டிவிடமுடியும் என அக்கவிராயன் விடையிறுத்தான்.

அரசனுக்கோ வியப்பு, பாட்டால் அணை கட்டப்பட்டால் தன் பாவையரை ஆண்டானுக்குப் பரிசளிப்பதாக அரசன் வாக்களித்தான். ஆண்டான் காளி வரம் பெற்றவனன்றோ? அவனது சொற்கள் ஒவ்வொன்றும் கற்களைச் சுமந்துவந்து அடுக்கின. பாடல் முடியவும் அணையும் கட்டி முடிந்தது.

கவிராயன் தான் சொன்னதை நிறைவேற்றினான். காவலன் தன் வாக்கைக் காப்பாற்ற வேண்டாமா? பாட்டால் அணை கட்டப் பெறுதலைப் பார்க்க வந்த பாவையரை அரசன் அழைத்தான். தன் வாக்குறுதியை நிறைவேற்றுவது அவர்கள் கடமை என்றான்.

பண்டாரத்துக்கு வாக்கப்படுவதை விட பாழும் உயிரை விட்டு விடுதலே மேல் என அப்பெண்கள் முடிவு செய்தனர். நிரம்பியிருந்த நீரில் விழுந்து மூழ்கி இறந்து போயினர்.

அரசனின் புதல்வியர் அநியாயமாக இறந்துபோனதை ஆண்டான் கண்ணுற்றான். அழகான பாவையரின் அழிவுக்குத் தானன்றோ காரணம் ? அவர்கள் இறப்புக்குப் பரிகாரம் தேடவேண்டாமா?

ஆண்டானும் அவ்வணையில் விழுந்து இறந்தான். கூடிநின்றமக்கள் குலுங்கி அழுதனர். ஆண்டாண்டு போனாலும் மாண்டார் வருவரோ? ஆனால் ஆண்டான் கவிராயன் பாட்டால் அணை கட்டியதும், பாவையர் இறந்ததும், அவன் பரிகாரம் தேடியதும் மக்கள் மனத்தை விட்டு இதுநாள் வரை நீங்கவில்லை.

இப்புனைகதையை மூலப்பொழி மண்டக் ராசாவும், மருதூரைச் சார்ந்த ஒரு மாதுவும் எனக்குக் கூறினர். ஆணடான் கவிராயனின் இறப்பு தொடர்பான மூன்று முடிவுகளில் இதுவும் ஒன்று.

இக்கட்டுக்கதை பின்னப்பட்டுள்ள பின்னணி எதுவெனச் சரியாகத் தெரியவில்லை. இதிலிருந்து ஆண்டான் கவிராயனின் பாடல் வன்மை வெளிப்படுகின்றது. அதனால் ஏற்பட்ட பழியும் நிலைத்துவிட்டது.

இக்கதை ஆண்டானுடன் தொடர்புள்ளதல்ல, வேறொரு கவிஞருடன் தொடர்புள்ளது எனக் கூறுவாரும் உளர். அதன் உண்மையினை அறிவது அவசியம்.

**புலவர் புராணம்** மருதூர் பற்றிக் குறிப்பிடுவது மேலேயுள்ள கதையிலிருந்து வேறுபடுத்துகிறது.

ஊருக்குள்ளுயர் புடை மருதூரென வெடுத்துப்
பாருக்குள்ளவர் தனைப் புகழ் மேன்மையும் பகர்ந்து ...

என்கிறது அது.

மருதூர் அணை ஆங்கிலேயர்களால் கி.பி.1792இல் பெரிதாகக் கட்டப் பெற்றதென்றும் கி.பி.1807இல் புதுப்பிக்கப்பட்டதென்றும் கால்டுவெல் தமது திருநெல்வேலி சரித்திரத்தில் குறிப்பிடுகிறார். ஒரு வேளை இந்நிகழ்ச்சிகள் ஆண்டான் கவிராயனுக்கு ஏற்றி வழங்கப்பட்டிருக்கலாம்.

## 31. ஆழ்வார் திரு நகரியில் ஆண்டானின் அனுபவம்

தாமிரபரணி ஆற்றுக்கு வடபாலுள்ள ஊர்களில் யாத்திரை மேற்கொண்டு வுசை கவிதைகளையும் வழங்கிய ஆண்டான் தன் திருப்பாதங்களை ஆற்றுக்குத் தென்பாலுள்ள ஊர்களுக்கும் செல்ல திருப்பினான். முதலில் நின்றது ஆழ்வார் திருநகர் .

இவ்வூர் திருவைகுண்டத்துக்குத் தென்கிழக்கே ஆற்றின் தென்கரையிலமைந்துள்ளது. நம்மாழ்வார் இருந்த குருகூர் என்றும் இத் தலத்தைக் குறிப்பர். நவதிருப்பதிகளில் மிகவும் நடுநாயகமாகத் திகழ்வது. வைணவத் தொண்டுகள் பலவும் நடந்த திருத்தலம்.

இத்திருத்தலத்தில் ஆண்டான் கவிராயனின் அனுபவம் சற்று வித்தியாசமானதாக இருந்துள்ளது. பொதுவாகப் பெரிய கோவில்களிருக்கும் ஊர்களில் கோவில்களிலேயே பசித்தோர்க்கு உணவு வழங்குவது தமிழ்நாட்டு மரபு. அதற்கேற்ப ஆழ்வார் திருநகரி கோவிலிலும் வழங்கப்படும். இதனை ஆண்டான் பாடியதாகக் கருதப் பெறும் ஒரு பாடலில் காணமுடியும்.

சேலடிபட்டு வராலுக ளும்குரு கூரிற் சென்று
மாலடி போற்றி விநியோகம் வாங்கவணங்கி நின்றேன்
வேலடி பட்டது போலே கதவடையானை விட்டு
தோலடி சாதிப்பர் வேண்டாமென்றாலும் துரத்தி வந்தே

இப்பாடலில் குருகூர் எனப்பெறும் ஆழ்வார் திருநகரியின்

வளம் கூறப்பெற்றுள்ளது. அத்தகு வளம் பொருந்திய ஊரிலுள்ள திருமாலைச் சேவித்து உணவு வாங்க நின்ற ஆண்டான், அவ்வுணவை வெறுத்து 'வேண்டாம் வேண்டாம்' என ஓடும் அளவுக்கு அது வழங்கப்பட்டமுறை இருந்துள்ளது. வைதிக வேதியனான ஆண்டான் கவிராயன் தனக்குச் சாத்தாதவனால் வழங்கப்படும் விநியோகத்தை வேண்டாமென மறுத்துச் செல்வதும், அப்போது அவனால் அடித்துத் துரத்தப்படுதலையும் இப்பாடலிலிருந்து தெரிந்து கொள்ள முடிகின்றது.

## 32. ஆழ்வார் திரு நகரி மேலமாடவீதி அழியப் பாடியது

ஆழ்வார் திருநகரியில் மேலே கூறப்பெற்ற அனுபவங்கள் சிலவற்றை ஆண்டான் பெற்றதால் அவ்வூரை வெறுத்துள் ளான். அதிலும் முக்கியமாக மேலமாடவீதியில் அவனுக்குக் கிடைத்த அவமரியாதை பெரியதாகும். அதன் காரணமாக அம்மாடவீதி மண்ணோடு மண்ணாகி விட்டுள்ளது. ஆண்டானின் பாடலடி வருமாறு.

...... *ஆழ்வார்திருநகரி மேலமாடவீதி மண்*

வசைகவியின் வாக்குக்கேற்ப மேல மாட வீதியும், அதற்கு மேற்கேயுள்ள தெப்பமும், கோவில்களும், வீடுகளும் இடிந்து மண்ணோடு மண்ணாகிக் கிடப்பதை அவ்வூர் வழியாகச் சாலையில் போவோர் வருவோர் காணமுடியும்.

## 33. தென்திருப்பேரை அக்கிரகாரத்துப் பெண் ஒழுக்கம் பற்றிப் பாடியது

தென்திருப்பேரை என்னும் ஊர் தாமிரபரணி ஆற்றின் தென்கரையிலுள்ளது. நவதிருப்பதிகளில் ஒன்று. ஆழ்வார் திருநகரிக்கும் குரும்பூருக்கும் இடையிலுள்ளது. மகர நெடுங்குழைக்காதரைத் தெய்வமாகப் பெற்றுள்ள தலமாகும்.

ஆழ்வாரை விட்ட ஆண்டான் அடுத்துவ சைபாடியது பேரையூர் எனப்பெற்ற தென்திருப்பேரையாகும். இவ்வூரின் நடுவில் பெரிய அக்கிரகாரம் உண்டு. ஆண்டான் அந்த

அக்கிரகாரத்துத் திண்ணையொன்றில் ஒரு நாளிரவு படுத்துறங்கினான். இரவு சென்று கொண்டிருந்தது. திண்ணைவீட்டுக்காரிக்குத் தினவெடுத்தது. படுத்திருப்பது பண்டாரம் தானே. படுக்கையைப் பகிர்ந்து கொண்டால் பின்பு பங்கா கேட்கப் போகிறான். எண்ணங்களின் முடிவில் கதவைத் திறந்து ஆண்டானை எழுப்பினாள். குடும்பப் பெண்ணின் குறிப்பைப் புரியாதவனா நம் கவிராயன். வசை கவியானாலும் தசைக்கு நசைபடாதவனன்றோ? பண்டாரத் துக்கு ஏது பாலியப்பசி. வந்ததோ கோபம். பகலிலோ உணவு தராது தன் வயிற்றெரிச்சலைக் கிழப்பி வசை பெற்ற மக்கள், இரவிலோ அதையும் மிஞ்சக்கூடிய செயல். முடிவு, பேரையூர் பெண்கள் நடத்தை கெட்டவர்கள் எனும் வசை.

ஆண்டான் பாடிய வசைப்பாடலை யாரும் பிறருக்கு வழங்குவது கிடையாதாம். அவ்வளவு பச்சையாம். ஆண்டானின் பாடல் கூறுவதுபோல் அவ்வூர் இன்றும் இருக்கக் கூடாதுதான்.

இதனைப் **புலவர் புராணம்** பின்வருமாறு பாடியுள்ளது.

> பெருகு பேரையூர்ப் பெண்ணொருத்தியின் பிழைகண்டு
> மருவு மந்நகர் மாதரார் பலரையும் வைதான்

ஆண்டானின் பாடல் கிடைக்காவிடினும் கிடைத்துள்ள செய்திகளினடிப்படையில் தென்திருப்பேரையின் இயல்பை அறிந்து கொள்ளமுடியும்.

### 34. மயிலோடையினனின் மதம்

தென்திருப்பேரையூர் பெண்களை வசைபாடிவிட்டு வந்த ஆண்டான் குரும்பூரருகிலுள்ள மயிலோடை எனும் ஊரின் வழியாகச் சென்றான். அவனது வசையை வாங்கிக்கட்டிக் கொள்ளும் படியாக ஒரு நிகழ்ச்சி அவ்வூரில் நடந்தது. வழித்தடத்தில் வெளிக்கிருந்தவன் கையில் பனங்கிழங்கு. ஆண்டானுக்கோ சகிக்கவில்லை. மற்றவனைப் பார்த்து இவன் எதையாவது ஒன்றைச் செய்யச் சொன்னான். ஒன்று கிழங்கு தின்பது அல்லது மற்றது செய்வது. ஆனால் ,

மயிலோடைக்காரனைப் பண்டாரமென்ன கேட்பது. அவன் விருப்பமல்லவா? மயிலோடைக்காரன் மமதையுடன் பதிலிறுத்தான். எப்படிப்பட்ட பதில் தெரியுமா? இதையும் செய்வேன் , அதில் முக்கியும் தின்பேன் என்பது தான் பதில் . ஆண்டானுக்கு ஏன்தான் கேட்டோமென்றாகிவிட்டது.

மதம்பெருத்த மயிலோடைச் சாணான்
அடிமெத்தப்படுவான்
மனை இருக்க மறு இடம் போவான்

இது ஆண்டானின் பாடலோ என்னவோ, பதில் சொன்னவனின் திமிர்காரணமாக அடிக்கடி சண்டைகளும் ஏற்பட்டுள்ளன. அதனால் அவ்வூர்க்காரர்கள் அடிபடுவார்கள் போலும், மேலும் தம் மனைகள் மட்டும் அங்கு இருக்க வேற்றிடங்களுக்கும் குடிபெயர்வர் போலும். இந்த நிலைமை இன்று அப்பகுதியின் வழக்கமாக உள்ளதோ என்னவோ தெரியவில்லை

## 35. குரும்பூர் பற்றிய குறும்புப் பாடல்

தாமிரபரணி ஆற்றுக்கு வடபாலுள்ள செழுமை தென்பாலில்லை. வறண்ட பகுதிகளுக்கேற்ப மக்களின் மனங்களிலும் எண்ணங்கள் வெளிப்படும் போலும். அதன் காரணமாக ஏற்படும் சிக்கல்கள் மிகுதி. அவை வரலாற்றுச் செய்திகளாகி விடுகின்றன. குரும்பூர் பற்றிய ஒரு பாடல் இதனைச் சித்தரிக்கின்றது.

நந்தி குரும்பூர் நாடாக்கள்தம் வழக்கு
வந்து பிடித்தால் வழக்கொருநாள் தீராது
நந்தி குரும்பூர் நாடாக்கள் தேடும் பொருள்
பிஞ்சிக்கும் பிறக்கிளைக்கும் எட்டாது.

இப் பாடலைக் குரும்பூருக்குக் கிழக்கேயுள்ள மேலப் புதுக்குடி இராமையா நாடார் கூறினார். 80 வயதை நெருங்கும் அவர் இப்பாடலுக்கான பின்னணியையும் விளக்கினார். இது கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இப்பகுதி நாடார் மக்களின் நிலையை எடுத்துக் கூறுகின்ற விதத்தில் அமைந்துள்ளது. அக்கதைப் பின்னணியாவது.

குரும்பூர்ப் பகுதி ஒரு சிற்றரசாக இருந்ததாம். அதில் இராசகுடும்பத்தில் அண்ணன்தம்பி நான்குபேர் இருந்த னராம். கி.பி 18 ஆம் நூற்றாண்டின் மத்தியில் தென்பாண்டி நாட்டின் மீது படைகொண்டுவந்த முஸ்லிம் தலைவர்களான யூசுப்கான் (கான் சாகிபு) போன்றோரின் கெடுபிடிகளால் சகோதரர்களில் இருவர் கிழக்கேயுள்ள பேயன் விளையில் ஒழிந்து கொண்டார்களாம். முஸ்லிம் படை அவர்களை வளைத்துக் கொண்டபோது அவர்களிலொருவன் தப்பி யோடி சீனந்தோப்பில் தஞ்சம் புகுந்தான். பிடி பட்ட ஒருவன் காயல்பட்டினம் கொண்டு போகப்பட்டு வற்புறுத்த லின் பேரில் இஸ்லாம் சமயத்தைத் தழுவினான்.

குரும்பூர் நாடார்கள் தாயாதிகளுக்குள் அடிக்கடி பாகப் பிரிவினை, சொத்து வழக்குகள் ஏற்படும் போலும்.

அப்படியான ஒரு நாளில் ஆண்டான் கவிராயன் பொருள் பெற ஆங்குச் சென்றுள்ளான். பஞ்சாயத்து இப்போது முடிந்துவிடும் இப்போது முடிந்துவிடும்' எனக் காத்திருந் தான். முடிந்தபின்பு பொருள் தருவரென்று. ஆனால் பஞ்சா யத்து முடியவே இல்லை. அதனால் ஏற்பட்ட பாடல்தான் மேலே கொடுக்கப் பெற்றுள்ளது.

குரும்பூர் நாடார்கள் பக்கத்தூர்களுக்குக் குடியேறியது உண்மையே. அவர்கள் திரண்ட செல்வங்களைச் சேர்த்ததும் உண்மையே. அவ்வாறு சேர்த்தால் கூட வீண் விவாதங்களி னாலும், வழக்குகளினாலும் தாம் சேர்த்த பொருள்கள் அவர்களது சந்ததியார்க்கும் பிறருக்கும் பயன்படாது என்பதை உணர்த்தவே இப்பாடல்பாடப் பெற்றுள்ளது. தமக்கு அவர்களிடமிருந்து பொருளெதுவும் கிடைக்காததால் ஆண்டான் அவர்கள் தேடும் பொருள் யாருக்கும் பயன்படாது போகட்டும் என்று சபித்தான் போலும்.

மேலேயுள்ள பாடல் போன்ற மற்றொரு பாடலைப் பிற்காலத்துப் பொன்னையா புலவன் பாடியுள்ளதாகத் திரு. மண்டக் ராஜா அவர்கள் குறிப்பிட்டார். அப்பாடல் வருமாறு.

நந்தி குரும்பூர் நாடாக்கள் பெருத்த இடம்
செல்வம் வந்தாலும் சென்றுதான் போய்விடுவார்

இவ்விருபாடல்கள் கூறும் உண்மைகள் இன்று எப்படியுள்ளன என்பதை ஆராய்ந்து பார்த்தால்தான் முடிவைக் கூறமுடியும்.

## 36. கந்தன் குடியிருப்பு, அம்மன்புரம், கீழப் புதுக்குடி, கூரந்தா விளை என்பவற்றுக்கு வசை

குரும்பூரை விட்ட ஆண்டானின் வசையை வாங்கிக் கட்டிக் கொண்டவை நான்கு ஊர்கள். இவை குரும்பூர்–திருச் செந்தூர் சாலைக்கருகிலுள்ளவை. கந்தன் குடியிருப்பு 'கண்டன் குடியிருப்பு' என்றும் கூறப்பெறும். அவ்வூர் மரங்களில் பறவைகள் இராத் தங்குமாதலால் அவற்றின் எச்சில் அந்த ஊரில் படியும். இதனை ஆண்டான் கவிராயன் அறிந்து அவ்வூர்க்கு ஓர் இகழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளான். இன்றும் அந்த நிலை உள்ளது.

அம்மன்புரம் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே புகழ் பெற்ற தலம். சாலையின் தென் மருங்கில் சத்திரம் உள்ளது. அதற்கு மிகுந்த சொத்துக்கள் உண்டு. அன்னதானம் உண்டு. அக்கிரகாரமும் உண்டு. அருஞ்சுனை காத்த அய்யனார் கோவிலும் சுனையும் அருகே உண்டு. அக்கிரகாரத்தினரின் அதிகாரம் அப்போது அங்கே இருந்தது. அதிகார வெறியினால் அக்கிரகாரத்தினர் அநியாயமும் செய்தார் போலும். இதன் காரணமாகவோ ஆண்டான் கவிராயனின் வாக்கிலும் அச்சொல் விழுந்துள்ளது. சத்திரம் பண்டாரங்களின் புகலிடமாக இருந்த போது அவர்களுக்கு ஆதரவு இல்லாது போயிருக்கலாம். ஆண்டானின் வசை பலித்து விட்டது. திரண்ட சொத்துக்கள் அச் சத்திரத்துக்கு இருப்பினும் பராமரிப்பு இன்றி அழியும் நிலை உள்ளது. இதனை அவ்வூர் ஆசிரிய நண்பர் திரு. பாஸ்கரன் அவர்கள் என்னிடம் கூறி வருத்தமுற்றார்.

அம்மன் புரத்துக்குத் தெற்கே குளத்தங்கரையில் மேலப் புதுக்குடியும் கீழப் புதுக் குடியும் உள்ளன. நாடார்களின் இருப்பிடம். கீழப்புதுக்குடியினர் ஒருவரை ஒருவர் முன்பு கோள் சொல்லிக் கெடுப்பர் போலும். அதன் காரணமாகவே

இவ்வசைச்சொல் ஆண்டானிடமிருந்து வெளிப்பட்டுள்ளது. அவ்வசை நிலைத்தும் விட்டது.

கூரந்தாவிளை என்பது அம்மன்புரத்துக்கும் சோனகன் விளைக்கும் இடையிலுள்ள ஊர். கருவுற்ற அபலையின் கருவை அநியாயமாக அழித்து வழக்கிலிருந்து தப்பித்துக் கொண்டனர் போலும் அவ்வூரினர். இதன் காரணமாகவே அவ்வூர்க்கு என்றும் பழி ஏற்படுமாறு பாடியும் விட்டான் அவன்.

இந்நான்கு ஊரையும் வசை பாடிய ஆண்டான் மேலப்புதுக்குடியை வாழ்த்தியுள்ளான். ஆதன் காரணமாக அவ்வூர் இப்போதும் செழிப்புற்றுள்ளது. ஆண்டானின் பாடல் வருமாறு. இப்பாடலின் உண்மையை ஆராய்வது நலம்.

அண்டம் திறந்தது கண்டங் குடியிருப்பு
அநியாயம் செய்தது அம்மன் புரம்
கோள் சொன்னது கீழப் புதுக்குடி
குட்டி அழித்தது கூரந்தாவிளை
இருந்து சாப்பிடும் மேலப் புதுக்குடி

## 37. திருமலைபுரம் கீரைத்தோட்டம் கரியப் பாடியது

குரும்பூர் — திருச்செந்தூர் சாலையில் சோனகன்விளை எனும் ஊரும் அதனை அடுத்துக் காணியாளன் புதூர் என்பதும் அதனருகில் திருமலைபுரமும் உள்ளன. காணியாளர்களான விவசாயிகள் நிறைந்த இவ்வூரில் நீர் செழிப்பின் போது நெல், வாழை போன்ற பயிர்களையும், கோடையில் தானியங்களையும் பயிரிடுவர். வீடுகளுக்கருகிலுள்ள வெளியிடங்களில் கீரைத்தோட்டங்கள் நிறைந்து காணப்படும். கிணற்றிலிருந்து ஏற்றம் மூலம் கீரைக்கு நீர்ப்பாசனம் நடைபெறும்.

ஆண்டான கவிராயன் திருமலைபுரத்தில் ஒரு விவசாயிடம் கீரை கேட்டுள்ளளான். கீரையென்ன கொடுப்பதற்குக் கிள்ளுக்கீரையா? ஆண்டானுக்குச் சலிப்பு ஏற்பட்டுவிட்டது. கீரைத்தோட்டம் கருகும்படி வசைபாடினான்.

மாறி மாறிப்பேசும் மாரிமுத்துப் பலவேசம்
கீரை தழைக்காமல் கிருபை செய்வாய் ஆறுமுகனே

காணியாளன் புதூரில் பல சாதியினரும் உள்ளனர். வயற் காவல் செய்யும் மறவர்களும் உள்ளனர். இந்த மாரிமுத்துப் பலவேசம் ஆண்டானை ஏய்த்தானோ அல்லது ஆண்டான் கீரை கொய்ததால் அடித்தானோ, தெரியவில்லை. ஆனால் அவனிடமிருந்து வசையை மட்டும் வாங்கிக் கட்டிக் கொண்டான்.

காணியாளன் புதூர் ஓலைச் சுவடியில் கீழ்வருமாறு எழுதப்பெற்றுள்ளது.

*பாதகரை தோட்டம் பலவேசம் ஆறுமுகம்*
*மாறி மாறி பேசுகிறான் மாரிமுத்து பலவேசம்*
*கீரை தழையாமல் கிருபை செய்வாய் வேலவனே*

ஓலைச் சுவடிப் பாடலில் காணப் பெறும் பலவேசம் ஆறு முகமும் ஆண்டான் கவிராயனை ஏய்த்திருப்பான் போலும்.

### 38. சில வகையறாக்களுக்கு வசை

சோனகன் விளைக்குத் தென் கிழக்கேயிருந்த சில ஊரரின் இயல்புகளை ஆண்டான் கவிராயனின் மற்றொரு பாடலிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. பள்ளிப்பத்து, குடியிருப்புவிளை, கோயில்விளை, குத்துக்கல்விளை எனும் ஊர்கள் ஒன்றையொன்று அடுத்து உள்ளன. நன்செய் நிலங்களும் பனைமரங்களும் செறிந்தவை. இவ்வூர்களில் நாடார் இனத்தாரே குடியேறியுள்ளனர்.

ஆத்தூரிலிருந்து ஒரு குடும்பத்தினர் இப்பகுதிக்குக் குடியேறியுள்ளனர். மலையாள நாட்டிலிருந்து இப்பகுதிக்குப் 'புலவர்' பட்டம் பெற்ற குடும்பத்தினர் முன்பே குடியேறிருந் தனர். இப்பகுதியில் ஏற்பட்ட கொடிய நோயொன்றின் காரணமாக இவர்களுள் பலர் வேற்றூர்களுக்குக் குடியே றினர். புலவர் பரம்பரையினர் திருச்செந்தூருக்கும் பின்பு இராணி மகராசபுரத்துக்கும் குடியேறினர். இவ்வூரில் இவர்களுக்கு உறவினர்களாகப் பூலாங்கண்ணி வகை யறாக்கள் உள்ளனர். பயிர்த்தொழிலே இவர்களின் முக்கியத் தொழில். மேலும் கிராம முன்சிப்பாக இருந்த குடும்பத்தினரை

வாத்தியார்குடும்பத்தினர் என்பர். க(ா)டலோடி என்பார் மாட்டுத் தரகுத் தொழிலைச் செய்வோர். இவர்களும் குடியிருப்பு விளைப் பகுதியில் முன்பு வசித்தவர்களே. எனவே, மேலே குறிப்பிடப்பட்ட நான்கு வகையறாக்களின் வாழ்விடமாகப் பள்ளிப்பத்து குடியிருப்புவிளை–குத்துக்கல் விளைப் பகுதி இருந்தது.

இவர்கள் இப்பகுதியிலிருந்தமையும், அங்கிருந்து குடிபெயர்ந்து போனமையும் ஆண்டான் கவிராயனின் பாடலொன்றால் அறிய முடிகின்றது.

*மேலக்குத்துக்கல் விளையான் விளங்குங்குடிக்கு ஆத்தூரான்*
*பூலாங்கண்ணி முழுலோபி புலவன் முக்கால் லோபி*
*வாத்தியான். அரைலோபி கடலோடி காலோபி*
*மற்றவர்கள் அரைக்கால் லோபி மனை இருக்கக் குடிபோகும்*

இவ்வகையறாக்கள் இப்போது இராணி மகராசபுரத்தில் குடியேறியுள்ளனர். நான் ஓலைச்சுவடிகள் தேடிச்சென்ற காலத்தில் இவ்வூர் குருசாமிப்புலவர் அவர்களை முதலில் சந்தித்தேன். அன்னார் எனக்குப் பலவகையாக உபசரித்த தோடன்றி அன்னாரிடமிருந்த **ஐவர்ராசா கதையின்** மூலப் பிரதியையும் கொடுத்துதவினார். அவரது அண்ணன் பெரியசாமிப்புலவர் இவ்வூரில் பெரிய பாட்டாளியாகவும் பெரிய தொள்ளாளியாகவும் இருந்தவர். குடியிருப்பு விளையில் உடையார் சுவாமி எனும் தெய்வத்தை இப்புலவர் குடும்பத்தினர் பக்தியுடன் வழிபட்டு வருகின்றனர். இத் தெய்வம் மலையாள நாட்டிலிருந்து இவர்களால் கொண்டு வரப்பெற்று வழிபடப் பெற்று வருகிறது. மிகவும் சக்தி வாய்ந்த தெய்வம்.

குருசாமிப் புலவர் அவர்களின் உதவியால் சென்னையிலுள்ள திரு. பெ.சுயம்புலிங்கப் புலவர், திரு.பெ. சுந்தரலிங்கப்புலவர் போன்றோர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. கவிராயன் பாட்டில் சொல்லியிருப்பதைப் போலல்லாமல் இவர்கள் எனக்குப் பல உதவிகள் செய்ததோடன்றித் தம்மிடமிருந்த ஓலைச்சுவடிகளையும்

அச்சு நூல்களையும் அன்பளிப்பாகத் தந்தனர். இவர்களின் குலதெய்வம் உடையார் சுவாமி கதையை ஆராய்ந்தால் பல வரலாற்றுச் செய்திகள் வெளிச்சமாகும்.

### 39. காயல் பட்டினத்தில் உப்புத்தண்ணீர் எனப் பாடியது

காயல்பட்டினம் இஸ்லாமியர் வாழும் பெரிய நகரமாகும். இது திருச்செந்தூர் – தூத்துக்குடி சாலையிலுள்ளது. திருச்செந்தூரிலிருந்து 5 கி.மீ. தூரத்திலிருக்கும் இந்நகரம் வழியாகவும் குரும்பூரிலிருந்து திருச்செந்தூரை அடையமுடியும். காயல்பட்டினம் முன்பு பெரிய துறைமுகப்பட்டினமாக இருந்ததால் இன்று வர்த்தகத்தில் சிறந்துள்ளது.

ஆண்டான் கவிராயன் காயல் பட்டினம் சென்றுள்ளான். இவனைப் போன்ற வசைகவியை யார்தான் விரும்புவார். காயல்பட்டினத்தில் ஆண்டானின் தாகந்தீரத் தண்ணீர் எவரும் வழங்கமுன்வரவில்லை. ஆயினும் தன் தாகத்திற்குப் பருக நீர் கேட்டபோது அவனுக்கு அது மறுக்கப்பட்டது. தண்ணீரையும் சபித்தான்.

ஊரைச் சுத்தி நல்ல தண்ணி
ஊருக்குள் உப்புத் தண்ணி
போடா துலுக்கா

காயல்பட்டினத்தின் அண்டை ஊர்களான ஆறுமுகனேரி, வீரபாண்டியன் பட்டினம் போன்றவைகளில் நல்ல நீரிருக்கும் போது காயல்பட்டினத்தில் மட்டும் உப்புத் தண்ணீர் இருப்பதன் காரணம் ஆண்டான் கவிராயனின் வசை என்பது பலர் இன்றும் சொல்லிக் கொள்ளும் சமாதானமாகும்.

### 40. திருச்செந்தூர் பற்றிய பாடல்கள்

ஆண்டான் கவிராயனின் வசைப்பாடல்கள் பல திருச்செந்தூரை மையமாக வைத்துப் பாடப்பெற்றுள்ளன. இதனால் இக்கவிராயன் செந்தில்பதியிலேயே மிகுந்த நாள் தங்கியிருந்ததாக நம்ப முடியும்.

திருச்செந்தூர்ப் பதியானது தென்பாண்டி நாட்டின் ஐக்கிய நகரம் எனில் மிகையாகாது. பாண்டிய நாட்டுக்கு

மதுரை தலைநகராக இருந்த போது அரசன் அங்கிருப்பான், இளவரசன் கொற்கை நகரிலிருப்பான். அதுபோலத் தென்பாண்டி நாட்டில் பல இனத்தாரும் பல சிற்றரசர்களும் தம் தம் பகுதிகளிலிருந்தாலும் செந்தில் இறைவனை வந்து வணங்கிச் செல்வதையே வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

தென்காசியிலிருந்து திருச்செந்தூர் வரச் சாலை வசதி களும், சாலையின் மருங்கில் மரச்சோலைகளும், மனிதர்க்கும் வண்டி மாடுகளுக்கும் தங்கி ஒய்வு பெற்று நீரருந்த சத்திரங் களுமிருந்தன. அதைப்போன்று பாஞ்சாலங் குறிச்சி கட்ட பொம்மன் திருச்செந்தூர் இறைவனுக்குப் பூசை செய்யும் வேளை அறிந்து தன் பதியிலும் பூசை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

நாஞ்சில் நாட்டிலிருந்தும் மக்கள் செந்தூரானை வழிபட்டுச் செல்வர். கி.பி.19 ஆம் நூற்றாண்டில் வைகுண்ட சாமி அவதாரமாகப் போற்றப்பெற்ற சாமி தோப்பு முத்துக் குட்டிசாமி கூட இப்பகுதிக்கு வந்து கடலில் முங்கி அருள் பெற்றுச் சென்றதாக அவர் வரலாறு கூறுகிறது. இதனால் தென்பாண்டி நாட்டு மக்களும் நாஞ்சில் நாட்டினரும் இன வேறுபாடின்றி இறைவன் முன் ஒன்றாகியுள்ளனர்.

தென்காசி அரசனின் தங்கை மாது பொன்னுருவி பிள்ளை வேண்டித் தவமிருக்கத் திருச்செந்தூர் வந்ததைச் **சிவனணைந்த பெருமாள் கதை** கூறுகிறது. திருச்செந்தூர்க் கோவிலுக்குக் கொடிமரம் வெட்டச் சென்ற தச்சர்கள் மலை யிலிருந்த சுடலைமாடனை அழைத்து இப்பதிக்கு வந்ததைச் **சுடலைமாடன் கதை** கூறுகிறது. அரசூர்ப் பதியிலிருந்து செந்திலான் கோவில் மதிற்சுவர் கட்டுவதற்குரிய காணிக்கை களைச் சுமந்து பிள்ளை வரத்துக்கு முத்தாயி இங்கு வந்த தாகப் **பலவேசக்காரர்கள் கதை** கூறுகிறது. இலங்கை யிலிருந்து கடல்மார்க்கமாக நாஞ்சில் நாடு சென்ற வெங்கலராசன் கடலிலிருந்த படியே செந்திலானை வணங்கியதை **வெங்கலராசன் கதை** கூறுகிறது. இவ்வாறு பாமரர்களிடையே வழங்கப்படும் பல கதைகளும் செந்திலாண்டவனின் சிறப்பைப் பேசுகின்றன.

ஊமையாயிருந்த குமரகுருபரர் கந்தன் அருளால் கவிதை வரம் வரப்பெற்றார். பகழிக்கூத்தர் செந்தூரன் பிள்ளைத் தமிழ் பாடி தன் நோய் நீங்கப் பெற்றார். இவ்வாறு அரசர்களும், மக்களும்,புலவர்களும் பண்டாரங்களும் திருச்செந்தூர்ப் பகுதிக்கு வந்து செல்வர்.

திருச்செந்தூருக்கு இத்தகு சிறப்புக்களிருப்பதாலும், பல வருவாய்கள் அக்கோவிலுக்கு இருப்பதாலும், ஏழை எளிய வர்க்ளுக்கு அன்னதானம் சிறப்பாக நடைபெறும். ஆண்டான் கவிராயன் பல ஊர்களில் சென்று வசைபாடித் திருச் செந்தூரிலும் தன் வாக்குக் கொடுமையைக் காட்டியுள்ளான்.

### 40.1 காற்றடிக்கப் பாடியது

ஆண்டானின் பசி அகோரப்பசியோ தெரியவில்லை. ஆண்டவன் பிரசாதம் கிடைக்கச் சற்றுத் தாமதமாயிற்றோ அல்லது பட்டர்கள் கண்டித்தனரோ தெரியவில்லை.

காற்றடிக்கக் கந்தனை முக்க

எனப் பாடத் தொடங்கினான். ஊழிக்காலமுணர்த்தும் காற்றும் ஓங்கார அலைகளும் கடலில் எழும்பி ‘ஓ’ வெனும் இரைச்சல். உண்மையில் பட்டர்கள் பயந்தே விட்டனர். வந்திருப்பவன் வசைகவி என அறிந்தனர். ஆண்டவனைக் காப்பாற்ற ஆண்டான் கவிராயனை வேண்டினர்.

### 40.2 காற்று அமரப்பாடியது

கந்தனைக் காக்க காத்தமர

என அடுத்த அடியை எடுத்துப் பாடியவுடனேயே சீறிய காற்றும், கொக்கரித்த கடலலைகளும் கரைந்துபோயின. வசை கவி காளிவரம் பெற்றவனென்பது அப்பகுதியிலுள்ள அனைவருக்கும் அன்றிலிருந்து தெரியவந்தது.

### 40.2 மூவர் பல்லக்கு மூலையில் சாத்தப் பாடியது

பல அரசர்களும், பல செல்வந்தர்களும் திருச் செந்திலான் திருக்கோவில் பணிகளைக் காலந்தோறும் செய்து

வந்துள்ளனர். இவர்களுள் கி.பி. 18 ஆம் நூற்றாண்டி னிறுதியில் தென்பாண்டியில் கீழைப்பகுதிகளில் அதிகாரம் செலுத்திய மூவர் இத்திருக் கோவிலில் சில உரிமைகளைப் பெற்றுள்ளனர். முதலாவது – பாஞ்சாலங்குறிச்சி கட்ட பொம்மன், இரண்டாவது அரசூர் அருணாசலத்தேவர், மூன்றாவது காயல்பட்டினம் இராமசெயம்பிள்ளை. இம்மூவரில் ஒருவர் வந்த பின்புதான் முக்கிய பூசைகள் இத்திருக்கோவிலில் நடக்கும் அளவுக்கு அன்றுள்ள அமைப்பு இருந்தது.

கட்டபொம்மு நாயக்கன் பாஞ்சாலங்குறிச்சி பாளையக் காரனாயினும் பல பாளையக்காரர்களுக்குள் நடந்த சச்சர வுகளை விலக்கி ஒன்றுபட்டிருக்க வழிவகுத்தவன். திசை காவல் எனும் காவல் அமைப்பை ஏற்படுத்தித் தென்பகுதிகளில் அதை விரித்தவன். இக்காரணத்தால் செந்திலான் கோவிலின் முக்கிய இடத்தினை அவன் வகித்து வந்தான்.

கி.பி. 1750 இல் அரசூரின் காவல் தலைவனாக இருந்த இருளப்பதேவன் அவனுடைய போட்டியாளனான பூலா வுடைய தேவனால் விரட்டப்பட்டான். இருளப்பனின் இரட்டை மக்களான பெரிய பலவேசமும் சின்னப் பலவேசமும் இழந்த காவல் உரிமைகளை மீட்டு அரசூரிலிருந்தனர். பகைவர்கள் வலிமை பெற்று இரட்டைச் சகோதரர்களை வஞ்சனையால் பிடித்து இட்ட மொழித் தேரியில் வெட்டிக் கொன்றனர். சின்னப்பலவேசத்தின் மகனான அருணாசலத் தேவன் தலையெடுத்து மீண்டும் அரசூர்ப்பகுதியை ஒரு ஜமீன்தார் தானத்தில் ஆண்டுவந்தான். செந்திலான் கோவிலிலும் முக்கியப் பொறுப்பு வகித்து வந்தான். காயல் பட்டினம் இராமசெயம் பிள்ளையும் செல்வந்தராதலால் கந்தன் கோவிலில் முக்கியமானவராகக் கருதப்பெற்றார்.

அரசூரிலிருந்தோ பாஞ்சாலங்குறிச்சியிலிருந்தோ காயல்பட்டினத்திலிருந்தோ பல்லக்கில்தான் அருணாசலத் தேவரும் கட்டபொம்மனும் இராமசெயம் பிள்ளையும் கோவிலுக்கு வருவர்.

ஆண்டான் கவிராயன் அப்படியான ஒரு நாளில் செந்திலான் பிரசாதத்துக்காகத் தவங்கிடந்தான். பசி வயிற்றைக் கிள்ளிற்று. வாயோ வசைப்பாடத் துடித்தது. வசையும் பாடிற்று.

*மூவர் பல்லக்கு மூலையில் சாத்த*
*முருகன் பூசை முக்காலமும் எக்காலமும் நடக்க*
*பூசைவையடா*

ஆண்டான் எந்த வயிற்றெரிச்சலில் பாடினானோ அருணாசலத் தேவனின் பல்லக்கு இடையில் ஒடிந்து விட்டது. அங்கிருந்த ஒருவன் ஓடிவந்து நடந்ததை விவரித்துப் பூசை நிற்காது தொடங்கச் சொன்னான். அருணாசலத் தேவன் சிவிகை அன்று மூலையில் சாத்தப்பட்டதுதான், பின்பு எடுக்கவே இல்லை.

கி.பி. 1799இல் கட்டபொம்மன் ஆங்கிலேயர்களால் கயத்தாறு அருகே தூக்கிலிடப்பட்டான். பாஞ்சாலங்குறிச்சி அதன்பிறகு சில ஆண்டுகள் ஊமைத்துரையின் ஆளுகைக்குட் பட்டு இறுதியில் ஆங்கிலேயரின் கீழ் வந்தது.

நாடார்களை இழிவுபடுத்தும் நோக்கில் மலையாளத்தி லிருந்து இறக்குமதி செய்யப்பெற்ற நாடக அரங்கேற்றத்தின் போது காயல்பட்டினத்தில் குரும்பூர் நாடார்களுக்கும் இராமசெயம்பிள்ளை குழுவினர்க்கும் ஏற்பட்ட அடிதடியில் அவர் தோற்றுப் போனார். அதனால் இராமசெயம் பிள்ளையின் முக்கியத்துவமும் கோவிலில் இழந்துபட்டது. பிற்காலத்தில் அருணாசலத் தேவன் நாடார் வீரர்களுடன் போரிட்டுத் தோற்றுப் போனான். அடையில் பகுதிக்குச் சந்தோச நாடார் தலைமை ஏற்று, இடைச்சி விளைப்பகுதிக்கு ஆபிரகாம் நாடார் தலைமை ஏற்று, குட்டம் பகுதிக்கு அழகப்ப மார்த்தாண்டன் தலைமை ஏற்றுத்திரட்டிய நாடார் வீரர்கள் அரசூர்–பூச்சிக்காடு அருணாசலத் தேவனை முறியடித் தார்கள். ஆண்டான் கவிராயனின் வசையோடு முருகன் கோவில் பூசை முக்காலமும் நடைபெற்று வருகிறது.

### 40.3 தாசியைப் பாடியது

திருச்செந்தூர்ப் பதியில் திரிந்த ஆண்டான் கவிராயனின் வாக்கு வன்மையை அறிந்த தாசி ஒருத்தி அவனைக் காமக்குறிப்புடன் நோட்டம் விட்டாள். அவ்வளவு தான், திருச்செந்தில் பதியிலும் தேவதாசியா? வந்தது வசை. இறைவனுக்கும் எல்லோருக்கும் வசை கிடைத்தது.

*சாமியோ தகப்பன் சாமி தண்ணியோ உப்புத் தண்ணி*
*காடோ கத்தாளங்காடு .......*
*உனக்குப் பிறக்கும் பிள்ளையெல்லாம் தேவரடியாள் பிள்ளை*

இப்பாடல்மூலம் திருச்செந்தூர் நகரத்தைச் சுற்றிலும் அக்காலத்தில் கத்தாளைகள் நிறைந்திருந்தன என்றும் அவ்வூரில் தேவ்தாசிகளும் வாழ்ந்துள்ளனர் என்றும் அறியமுடிகின்றது.

### 40.5 ஆண்டான் பாடலும் அசரீரியும்

திருச்செந்தூர் தொடர்பாக ஆண்டானால் இறுதியாகப் பாடப்பெற்ற பாடலாகக் கீழ்க்காணும் பாடல் கிடைத் துள்ளது. இப்பாடல் பற்றிய இரு கருத்துக்கள் நிலவுகின்றன.

திருச்செந்தூரில் ஒரு பெண்ணை ஆண்டான் விரும்பிச் சென்றபோது அசரீரி எழுந்ததாகாதவும், ஆண்டான் அச்செயலை நிறுத்தாவிடில் அவனுக்கு அழிவு வருமென்றும் **அபிதான சிந்தாமணியில்** குறிப்பிடப்பெற்றுள்ளது.

மற்றோர் இடத்தில் ஆண்டான் கவிராயன் கந்தனையே வசைபாடினான். அப்போது அசரீரி எழுந்தது என்றும் குறிப்பிடுகின்றனர். பாடல் வருமாறு.

*மைச்சேலுண் கண்ணொருத்தி மாதவிடாய்க்காரி யவள்.*
*மாட்டுச் சென்று*
*கைச்சேட்டை செய்த கந்தா*

எனுமளவிலேயே அசரீரி தோன்றியதாம். இப்பாடலடி யிலிருந்து கந்தனைக் குறித்தே ஆண்டான் பாடினான் என்பதை அறிந்து கொள்ளலாம். தென்திருப்பேரை,

திருச்செந்தூர் ஆகிய இரு தலங்களிலும் பெண்களை ஆண்டான் வெறுத்ததாகத் தெரிவதால் இப்பாடல் திருச்செந்தூரிலுள்ள பெண்ணைப் பற்றியதன்று, கந்தனைப் பற்றியதே என்று கூறலாம்.

ஆண்டான் தன் பாடலை முடிக்குமுன்பே அசரீரி அதை அடக்கிவிட்டது. 'இதற்குமேல் பாடுவாயானால் உனக்கு அழிவு ஏற்படும்' என்றது அது.

அசரீரியைக் கேட்டு ஆண்டான் அதிர்ந்து போனான். தன் வாயிலிருந்து வசை வருவதைத் தவிர்க்க முடியவில்லையே. இறுதியில் இறைவனையே வசைபாடும்படி ஆயிற்றே என வருந்தினான். உடனே செந்தூர்ப்பதி விட்டான்.

செந்தூர்ப்பதியை விட்ட பிறகு, காட்டு வழியே அவன் சென்றான் என்றும் வசை பாடிய நாவில் புண் ஏற்பட்ட தென்றும், பசிக்கு உண்ணமுடியாமலும் பாடமுடியாமலும் வருந்தி இறுதியில் இறந்துபோனான் என்றும் கூறுவர். அவனுடைய முடிவு இவ்வாறே ஏற்பட்டது என்று பலர் கூறுகின்றனர்.

### 42. கல்லான்மொழி பற்றிய வசை

திருச்செந்தூரை நீங்கிய ஆண்டான் கவிராயன் அடுத்து வசைபாடிய ஊர் கல்லா(ன்) மொழி ஆகும். இவ்வூர் திருச்செந்தூருக்கும் குலசேகரன் பட்டினத்துக்கும் இடையில் உள்ளது. உப்புநீர் ஊற்றுக்கள் இங்கு இருப்பதால் எந்தப் பயிர்களும் வளர்வதில்லை. இதன் காரணமாகவே அவ்வூர்க்கு ஒருவசையும் ஏற்பட்டு விட்டது. அது வருமாறு.

கானல் பறக்குதடா கல்லான் மொழி – அது
வேனல் பறக்குதடா வெட்டாவெளி

இன்றும் கல்லா(ன்) மொழி ஊர் அதுபோல் தான் உள்ளது.

### 42. காயாமொழியில் இளநீர்க்குப் பாடியது

கல்லான் மொழிக்குப் பின் ஆண்டான் காயாமொழி பதிக்கு வந்தான். ஆதித்தர்களின் ஊர் அது. தேரி மணலைச்

சார்ந்திருப்பது. ஆயின் தேரிக்குள்ளிருந்த நீரின் மிகையால் அது செழிப்பான சோலைகள் வளரப் பெற்றது. தென்னைகளும் பனைகளும் மா, பலா, கமுகு, வாழை, புளி போன்ற வளமரங்கள் நிரம்பியது அவ்வூர்.

ஊரின் எல்லையிலுள்ள தோட்டத்தில் இளநீர்க்காய்கள் தொங்கிக்கிடந்தன. ஆண்டான் ஆதித்தநாடனிடம் இளநீர் கேட்டான். ஆனால் அது அவனுக்குக் கொடுக்கப்படவில்லை.

*ஆதித்தன் தெங்கு அரைமரத்தில் பட்டு விடும்...*

எனும் வசை வந்தது. அவசரப்பட்டு இளநீர் மறுக்கப்பட்டதை உணர்ந்த அவ்வூரார் வசையை மாற்றுமாறு ஆண்டானிடம் கூறினராம். ஆனால் வந்தது வந்தது தான். அதை மாற்றுவது முடியாத காரியமாயிற்று. இன்னும் அவ்வூரில் தென்னை தழைப்பதில்லை என்பர்.

## 43. முருங்கைக் குழைக்கு வசையும் காலன் குடியிருப்பும்

காயாமொழியை விட்ட ஆண்டான் உடன்குடிக்கு வடக்கேயிருந்த ஊர் ஒன்றில் ஒருவனிடம் முருங்கைக் கீரை கேட்டுள்ளான். ஆனால் அது கொடுக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக மரத்துக்காரனே இறக்கும்படியாக ஒருவசை ஆண்டானிடம் ஏற்பட்டுள்ளது.

*சீதேவி செங்கொடியிடந்தனிலே ஒரு குத்து*
*முருங்கைக்குழை கேட்டேன் அவன்*

*மூதேவி முக்தன்கிட்ட சொன்னான் அவன*
*காலன் குடிஇருப்புக்குப் போரேன் யென்றான அவன்*
*காலன் குடியிருப்புக்குத் தான் போனானா அவன்*
*காலம் குறித்தானிடம் போனானாம்.*

காலன் குடியிருப்பு என்பது உடன்குடியைச் சார்ந்த ஊர். முஸ்லீம் மக்கள் மிகுதியாக வாழ்வது. கொழும்பில் வியாபாரம் செய்து ஈட்டிய பொருளால் வசதியாக வீடுகட்டிக் கல்லால் காப்புச் சுவர்களும் கட்டப்பெற்றுள்ளது. இதனால் தான் 'காலன் குடியிருப்பு கல்கெட்டு' எனும் சொலவடை ஏற்பட்டுள்ளது. காலன் எனும் சொல்வசையில்

எமனைக் குறித்து விட்டதால் முருங்கை மரத்துக் காரனை எமன் குடியிருப்புக்கே ஏகி விட்டமை இப்பாட்டிலிருந்து வெளிப்படுகிறது.

## 44. குட்டத்தார்க்கு முன்னுரிமை எனப்பாடியது

காலன் குடியிருப்பை விட்டுச் சென்ற ஆண்டான் அடுத்த தாகக் குட்டத்திற்குச் சென்றுள்ளான். காயாமொழியினரும் குட்டத்தினரும் தங்கள் தங்கள் பகுதிகளில் வரிவசூல் செய்ய அப்பகுதிகளில் மிகுந்த செல்வாக்கும் செழிப்பும் கொண்டிருந்தனர். தங்கள் குலதெய்வங்களுக்குக் குறை வில்லாமல் கொடைவிழா மேற்கொண்டனர்.

ஆடி மாதம் இறுதிச் செவ்வாயில் இக் கொடைவிழா தொடங்கும். இரு ஊர்களிலும் ஒரே நாளில் தொடங்குவதால் பொதுமக்களுக்கும் கலைஞர்களுக்கும் சில நெருக்கடிகள் தோன்றுவதுண்டு. காயாமொழிக்கா? குட்டத்திற்கா? எங்கு முதலில் செல்வது?

குட்டத்து ஆனந்தவல்லி அம்மைக்கும் காயாமொழி முப்புராதி அம்மைக்கும் கொடை நடக்கும் நாட்களில் நீலிகதை பாடுவது மரபு. நீலிகதை பாடும் கணியான்கள் பரம்பரை பரம்பரையாகக் குடும்ப உரிமையுடன் இவ்விரு கோயில்களிலும் பாடவேண்டுமென்பது கட்டுப்பாடு ஆகும். இவ்வாறிருப்பதால் யாருக்கு முதலில் பாடுவது?

ஆண்டான் கவிராயன் குட்டத்திலிருந்த போது இதுபற்றி ஒரு முடிவை வரையறுத்துள்ளான். அதன்படி,

குட்டத்து நாட்டாரும் காயங்குளத்தாரும்
இட்டது சட்டம்

மலைநாட்டில் குட்டநாட்டுப் பகுதியிலிருந்து இப்பகுதிக்குக் குடிவந்ததால் அவர்களைக் குட்டத்து மார்த்தாண்டர்கள் என அழைப்பது மரபு. அதைப்போன்றே கூபநாட்டுக் காயங்குளம் எனும் ஊரிலிருந்து காயாமொழிக்கு ஆதித்தர்கள் வந்ததால் அவர்களைக் காயங்குளத்தார் என்பது வழக்கம்.

ஆண்டான் கவிராயனின் பாடலிலிருந்து தென்பாண்டி யின் தென் கீழ்ப்பகுதிக்குக் காயாமொழி ஊரினரும் குட்டத்து ஊரினரும் சம அளவு உரிமை கொண்டவர்கள் என்பதும் கணியான் கூத்தினர் முதல் நாள் குட்டத்தில் நீலிகதையை பாடி ஆட வேண்டுமென்றும் மூன்றாம் நாள் காயாமொழியில் பாடி ஆட வேண்டுமென்றும் முடிவாயிற்று. இவ்வாறு 200 ஆண்டுகளாக இவ்வழக்கம் கடைப்பிடிக்கப் பெற்று வருகிறது- இன்றுகூட திங்கள் கிழமை குட்டத்திலும் புதன்கிழமை காயாமொழியிலும் நீலிகதை பாடப்பெற்று வருகிறது.

## 45. அரசூர் அழியப்பாடியது

ஆண்டான் கவிராயன் குட்டத்தூரில் அதிக அளவு ஆதரவு பெற்று வாழ்ந்திருந்தான். அவன் கேட்காமல் அவ்வூரினர் பொருள் கொடுத்தனர். அதன்பிறகு அவன் மிகவும் செல்வாக்குற்றிருந்த அரசூர்ப் பதிக்குச் செல்ல முற்பட்டான். இடையில் கொம்மடிக் கோட்டையில் அவ்வூர்த் தலைவரைச் சந்தித்தான். அவ்வூர் நாட்டாரும் தன் தோட்டத்தில் பயிர் நடுதலை விரைவாக முடிக்கச் சொல்லி விரைந்து வந்து அவனுக்குப் பொருளீந்து அனுப்பினார். பின்பு அச்சம்பாடு எனும் ஊருக்குச் சென்றான். அச்சம்பாட்டு நாடார்கள் திரண்ட செல்வம் உடையவர்கள் .கொழும்பு சென்று பணம் திரட்டியவர்கள். இதனால் குட்டத்தினரும் கொம்மடிக் கோட்டையினரும் ஆண்டானுக்குக் கொடுத்ததைக் காட்டிலும் இருபங்கை அளித்தனர்-

நாடார்கள் ஊர்களில் நிறையப் பொருள் பெற்று இறுதியில் அரசூர்க்குச் சென்றான்.

அரசூர் என்பது அன்றைய நாளில் மிகவும் செல்வாக் குற்றிருந்தது. அருணாசலத் தேவன் என்பான் அவ்வூர்த் தலைமை ஏற்றிருந்தான். காவல் மறவர்கள் அப்பகுதியி லுள்ள நிலபுலன்களைக் காவல் செய்து வந்தனர். அவர் களை மீறி எச்செயலும் அவ்வட்டாரத்தில் நடப்பதில்லை.

அரசூர் பூச்சிக்காடு வழியாகச் சென்ற ஆண்டானின் பொருள் எல்லாம் அபகரிக்கப்பட்டன. ஆண்டான் பண்டாரம் எங்கேயாகிலும் திருடினானோ அல்லது பண்டாரத்திற்கு எதற்கு இவ்வளவு பொருள் என நினைத்தார்களோ தெரியவில்லை, பறித்துக் கொண்டனர். ஆண்டான் வேதனை யுற்றான். அருணாசலத் தேவனிடம் சென்று முறையிட்டான். ஆண்டானின் முறையீடு அம்பலம் ஏறவில்லை. மாறாக அரசூர்க்காரர்கள் பறித்தது சரிதான் என மறு மொழி கிடைத்தது. ஆண்டானின் பொறுமை எல்லை மீறியது. அதனால் ஏற்பட்ட சாபம் அரசூர்ப்பதி அழியக் காரண மாயிற்று.

குட்டம் கொடு கொடு என்க
கொம்மடிக்கோட்டை நடு நடு என்க
அச்சம்பாடு பணம் விளைய
அரசூர் பூச்சிக்காடு அழிய அதிகநாள் செல்லுமோடா?

ஆண்டானின் சாபத்திற்கேற்ப அரசூர்ப்பதி இனக் கலவரத்தால் அழிந்தது.

அரசூர் அழிந்தது தொர்டர்பாக வேறு நிகழ்ச்சிகள் கிடைத்துள்ளன. அவற்றுள் முதலில் வருவதாவது.

பிச்சாண்டிப் பண்டாரம் என்ற ஒருவர் தர்மம் வாங்கி வாழ்க்கை நடத்தி வந்தார். அவருக்கு ஒரு குழந்தை உண்டு. அந்தக் குழந்தையைக் காட்டியே பிச்சை எடுத்து வாழ்ந்து வந்தார். அரசூரில் குழந்தையுடன் வந்து ஒரு வீட்டில் பிச்சை வாங்கி விட்டு அந்த வீட்டுப் பெண்மணியிடம் அக் குழந்தையைப் பார்த்துக் கொள்ளும்படி கூறி, கொண்டு வந்த பொருட்களையும் அங்கு வைத்து விட்டு, தான் போக வேண்டிய இடத்துக்குச் சென்றார். வீட்டுத் தலைவி பண்டா ரம் சேர்த்து வைத்திருந்த பொருளின் மேல் ஆசை கொண்டு குழந்தையைப் பக்கத்துக்கிணற்றில் போட்டுவிட்டுப் பொருள்களைக் கடத்திவிட்டாள். திரும்பி வந்த பண்டாரம் குழந்தையைக் கேட்க வீட்டுத்தலைவி காணவில்லை எனப் பொய் சொன்னாள். பண்டாரம் குழந்தையைக் கூப்பிட

கிணத்தின் உள் இருந்து சப்தம் கேட்டதாம். குழந்தை இறந்து ஆவிவடிவில் வந்து குரல் கொடுத்ததாக நினைத்துக் கோபம் கொண்ட பண்டாரம் அரசூர் அழியும்படி அறம் உரைத்துத் தானும் கிணற்றில் விழுந்து இறந்துவிட்டார். அவர் இறக்கவும் ஊர் தீப்பிடித்துக்கொண்டது. அவர் உரைத்த அறமாக இப்பாடலைக் கூறுவர்.

குட்டம் குடுகுடுங்க
குமடிக்கோட்டை நடுநடுங்க
தட்டாமடம் பட்டை எடுக்க
பூச்சிக்காடு பூமணக்க
அரசூர் அடி அழிய
அனேக நேரம் செல்லாது.

(சு. தங்கதுரை, பலவேஞ்சேர்வைக்காரர்
கதை, பக்கம் : XV–XVI)

ஆண்டான் கவிராயன் பாடலும் பிச்சாண்டிப் பண்டாரத்தின் பாடலும் ஒன்று போலவே உள்ளன. ஆண்டான் என்பதும பிச்சை ஆண்டி என்பதும் ஒத்துள்ளன. ஆண்டான் கவிராயனைப் பண்டாரம் என்றும் மக்கள் அழைத்துள்ளனர். எனவே அரசூரில் பாடியவன் ஆண்டான் கவிராயன் என அறிந்து கொள்ளலாம்.

அரசூர் – பூச்சிக்காடு அழிந்தது பாடலால் மட்டுமல்ல. அப்பகுதியில் நடந்த இனக்கலவரங்களால் என்பது சரித்திரச் சான்றுகளால் உறுதிப்படுகின்றது. கி.பி. 1833 இல் பாடப்பெற்றதும், அதற்கு 30 ஆண்டுகளுக்கு முன் அப்பகுதி சந்தனக் கவிராயர் என்பவரால் பாடப்பெற்றதுமான பலவேசஞ்சேர்வைக்காரர்கள் கதை எனும் சரித்திரக் கதையில் எவ்வாறு மறவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டு மடிந்தார்கள் எனச் சித்திரிக்கப்பட்டுள்ளது. அரசூரின் கீழ் ஒன்பது ஊர்கள் காவல் உரிமை பெற்றவை. அவ்வூர்களில் கொள்ளையடித்துத்தம் வசதியைப் பெருக்கிக் கொண்ட பெரிய பலவேசம் சின்னப்பலவேசம் எனும் சகோதரர்கள் இறுதியாக ஊர்க்காரர்களால் தந்திரமாகப் பிடிக்கப்

பெற்றுக் கொலை செய்யப்பெற்றனர். இச்சம்பவம் கி.பி. 1792இல் நடந்துள்ளது.

இதற்குப்பின் சின்னப்பலவேசத்தின் மகனான அருணாசலத் தேவன் அப்பகுதிக்குத் தலைவனாகிய பின்னரும் பகை தீர்ந்த பாடில்லை. ஆண்டான் கவிராயனின் காலமான 1800 க்குப்பின்பு அப்பகுதியில் நடந்த வன்முறைக் கலவரங்களினால் அரசூர் – பூச்சிக்காடு அழிந்து போயிற்று.

மேலே கொடுக்கப்பெற்றுள்ள இரு பாடல்களை மீண்டும் ஆராய்ந்தால் சில சரித்திர உண்மைகள் புலப்படும். அரசூர் – பூச்சிக்காட்டில் ஏற்பட்ட அதிகாரவெறியினால் குட்டத்துப் பகுதியிலுள்ளோர் தளர்ந்து போகும்படியாகவும், கொம்மடிக் கோட்டையைச் சார்ந்த மக்கள் நடுநடுங்கிப் போகும் படியாகவும், தட்டாமடத்தினர் கொள்ளையடிக்கப் பெற்றுப் படையெடுக்க வேண்டிய நிலைக்கு வந்ததும், ஆனால் அரசூர் – பூச்சிக்காடு மட்டும் அதிகாரத்தில் மேலோங் கியிருக்கும்படியாகவும் இருந்த நிலையைச் சித்தரிப்பதாக அறியலாம். அப்படியான அரசூர் – பூச்சிக்காடு சுவடு தெரியாதபடி அழிந்து போயிற்று என்பதும் இன்று ஆங்காங்கே சில இடிபாடுகள் மட்டுமே தெரிகின்றன என்பதும் சரித்திர உண்மைகளாகும்.

## 46. ஆண்டான் கவிராயனின் முடிவு

'வினைவிதைத்தவன் வினையை அறுப்பான்' என்பதற் கேற்ப நாட்டார்கள் மேல் வசைபாடிய ஆண்டான் கவி ராயனின் முடிவு வருந்தத்தக்க அளவில் ஏற்பட்டுள்ளது. ஆண்டான் இறப்புப் பற்றி மூன்று வகையான முடிவுகளை மக்கள் கூறுகின்றனர்.

1. மருதூர் அணையில் விழுந்துமாண்டது
2. நாவில் புண் ஏற்பட்டு மாண்டது
3. இறுதியில் சாமியால் அடிபட்டு மாண்டது.

இம்மூன்றுவகை முடிவுகளில், இரண்டாவது முடிவும் மூன்றாவது முடிவும் ஏற்புடைத்தாகத் தெரிகின்றன.

நாவில் புண் ஏற்பட்டு மாண்டதாகப் **புலவர் புராணம்** குறிப்பிடுகின்றது. அவ்வாறு அவன் இறக்கும் தறுவாயில் ஒரு பெண் அவனிடமிருந்து நீங்கி, 'இனி எங்கு செல்வேன்' என்று புலம்பிச் சென்றாள் என்று பார்த்தவன் ஒருவன் குறிப்பிட்டான் என்கிறது அது. அவன் நாவில் இத்தனை காலமும் வீற்றிருந்து அழிவுகளைச் செய்த வசைப் பெண்ணாகவோ காளியாகவோ அப்பெண் இருக்கலாம். நாவால் பிறரைச் சபித்துக் கொன்றவனுக்கு நாவே சாவுக்குக் காரணமாக இருந்தது கவனிக்கத்தக்கது.

மூன்றாவது முடிவாவது. ஆண்டான் கவிராயன், தான் பல ஊர்களில் சென்று வசைபாடிக் கொடிய பாவங்களைச் சம்பாதித்துக் கொண்டதாக உணர்ந்தான். அதனால் சேதுவில் போயாவது தன் பாவந்தீர்க்க நினைத்தான். அவ்வாறு செல்லும்போது தன் மனைவிக்குத் துணையாக மாட தேவதையையும் இருளனையும் இருக்குமாறு பணித்தான். அவனது சாபத்திற்குகஞ்சி வேறுமானிடர் அவ்வழியே செல்லார். சேதுவுக்குச் சென்று திரும்பி வரும் வரை மாதுவுக்கு மாடனும் இருளனும் துணை. இவ்வாறு தெய்வங்களைக் காவலுக்கு வைத்துச் சென்றதால் அவ்வழி போவோர் வருவோர் அத்தெய்வங்களால் அடித்துக் கொல்லப்பட்டனர் என்றும் மீண்டும் வந்த ஆண்டான் அதை அறிந்து வருந்தினான் என்றும் சொல்வர். அதைவிட, ஆண்டான் கவிராயன் அவ்வாறு தெய்வங்களைக் காவலுக்கு வைத்துவிட்டுச் சென்ற பிறகு ஏதோ ஒன்றை எடுக்க மறந்ததால் திரும்பி வந்தானென்றும், அவனை அத்தெய்வங் கள் அடித்துக் கொன்றன என்றும், உதிரம் கக்கி இறந்தான் என்றும் கூறுவர்.

சேது சென்று திரும்பியிருப்பானேல்தெய்வங்கள் அவனைக் கொன்றிருக்கா. இடையில் வந்ததால் அவன் ஆணைக்கேற்ப அவனையே கொன்றன என்பது பொருந்தும். கொடிய வரம் வாங்கியவனே அவ்வரத்தால் இறப்பது உண்மை. தலைவெடிக்க வரம் வாங்கிய வல்லரக்கன் கதை இதற்குச் சான்று. மந்திரங்களால் சாமிகளைக் கட்டித் தம் ஏவலுக்குப்

பணிய வைப்போர் ஏதாவது கவனக் குறைவாக நடந்து கொண்ட அத்தெய்வங்களால் தண்டிக்கப்படுவதைக் கதைகள் யிலாகக் கேட்டிருக்கிறோம். அவ்வாறே ஆண்டானும் இறந்திருப்பான் என்று நம்பலாம்.

காளியிடம் வரம் வாங்கிக் காளியையே சோதித்துக் கண்டோரை வசைபாடிக் கொன்றொழித்த ஆண்டானின் முடிவும் அதே கதியாக அமைந்துவிட்டது.

# இணைப்பு 1

## ஆண்டான் கவிராயனைப் பற்றி புலவர் புராணத்துள் இடம் பெறும் பாடல்கள்

காரூர் பசுஞ்சோலை மலியுங் கவின்கன்னி வள நாட்டுளே
நீரூர் தருஞ்சித் திராநன் னதிப்பக்க னிகழ்கின்றபல்
சீரூர் பராவுந் திறத்தோடு மாறாத திருமல்கு மோர்
பேரூ ரெனுந்தன்மை பெற்றுற்ற வோட்டப் பிடாரத்திலே.

அரிபாத மேதஞ்ச மாமென்று தொழுமந்த ணாளர்க்குளோர்
பிரிவாகி நிகழ்சிக்க லார்வங் கிசத்தின் பெருஞ் சென்னிபோற்
றெரிவாகி வைகுந்த நாதத் திருப்பேர்கொள் சீலன்றனக்
குரியாள் கடைச்சேயொருத்தன் பிறந்தான்வ லுருமென்னவே.

ஆண்டா னெனப்பே ரவற்கிட்டு மகிழ்வோ டளித்திட்டதாற்
றூண்டா விளக்கிற் றிகழ்ந்தானல் வயதைந்து தோய்ந்திட்ட பின்
வேண்டா னெனத்தண்ட னைகள்செய்து தமிழோது விக்குந்தொழிற்
பூண்டானிடத்துய்த் தவற்காமு தவியும் புரிந்தார்களே.

கொல்லுங் கொலைக்கூட மேபள்ளி யென்றஞ்சு குணபேதமுற்
றல்லும்ப கலுமன்னை பரிவா லொளித்தூட்டு மன்னம்புசித்
தொல்லும் பெருந்துன்ப மயமாகி வயதொன்ப தொடுபத்துமாய்த்
தெல்லுந் தெறித்துப்பல் விளையாடலுஞ்செய்து திரிகின்ற நாள்.

ஒன்றிற் சிவன்போலு மொருசித்த னவன்முன் னொளிர்ந்தோவுறா
வென்றிக் கொடுங்காளி மாமந் திரந்தன்னை விண்டிஃதையே
கன்றிச் சலிக்காம லுருவேற்று வாயேற் களிப்பெய்துவா
யென்றிட் டகன்றா வாறேசெய் தான்முன்னை யின் சேடமால்.

சின்னாள் கழித்தந்த வூர்க்கோயில் வைகுந் திறற்காளியின்
பின்னா லொளித்துச் செபஞ்செய்யு மொருபத்தி பெற்றான்றனைப்
பன்னா ளினுந்தேடி யோடிப் பிடித்துப்பள் ளிக்கூடமுய்த்
தின்னா விளைத்துள்ள பலபாலர் வருவார்க ளெனவஞ்சியே.

அவ்வாறு செல்கின்ற பலநாளு ளொருநாளி லக்காளிதான்
செவ்வாய் திறந்ததந்த வாண்டா னெனும் பேர்கொள் சிறுவன்முனின்
றொவ்வாத விசைவேண்டு மோவன்றி யோவாத வசைவேண்டுமோ
விவ்வாய்மை களிலொன்று பகரங்ஙன ருள்வே னெனச் சொல்லலும்.

வசைதான் எழுங்கென்ன வேமுன்னை வினைநின்ற வெழிகேட்டதா
லிசைவாக வேயெங் குதிர்ந்துற்ற வேப்பீர்க் கினத்தோன்றினு
லசையாத மெய்ச்சத்தி பெறும்வெல்லெழுத்தொன்றை யவனாலினிற்
றிசைதோறுளார்பற் பலோர்க்கேமனேயென்று தீட்டிச் சொல்வாள்.

உன்சொற் பிறந்திட்ட வாறாகுமேயன்றி யொன்றும்பொயா
தென்சொற் பகர்ந்தங்கு முன்னுற்றவாறே யிருந்தாளையோ
வன்சொற் கொடுந்தீ வரம்பெற்ற வாண்டான்முன் வருமாதரி
தன்சொற்பலிப்புக்கொர் கரியாய பாடற் சமைத்தானரோ.

அக்கோ யிலுறும் **விக்கி ரகமார்பினொரு கொங்கை யற்றேவிழத்**
தக்கோர்கள் வைகச்செய் முன்**கொட்டகைக்கட் டழற்பற்றிடத்**
தெக்கோ னெனப்பாடல் சொன்னன வண்ணந் திகழ்ந்திட்டவான்
மெய்க்கோர குணமிஞ்சி யிறுமாந்து பயமுற்றும் விட்டானரோ

## வேறு

விடிந்து வீதியிற் போய்விளை யாடினன் விசனத்
தொடிந்து கட்டிய பிரம்புடை வாத்தியா ருரைக்கீழ்ப்
படிந்து கற்றுள பாலர்பற் பலரவற் பார்த்துக்
கடிந்து மென்புழுப் பற்றுசிற் றெறும்பினங் கடுத்தார்.

பற்று பாலர்தா மொருநொடி யினிற்பள்ளிக் கூடத்
துற்று வாத்தியா யரின்றிரு முன்பினி லுய்த்தார்
முற்று கோபமோ டொறுத்தன ரவர்முக நோக்கிச்
சுற்று வார்பொடிப் படும்படி **முதற்கவி சொலாதான்.**

கூலி யீந்தனன் குறைத்தினம் படித்திலன் கொடிய
கோலி லங்குகை வாத்தியான் கொண்ட பெண் டாட்டி
தாலி யற்றிடும் படிவரந் தாடியென் றொருபாட்
டாலி மேகத்தி னிடித்தொனி யாமென வறைந்தான்.

உரத்த வோசைமுற் றலுமவன் றலைபிளந் தொழிந்தான்
வரத்தை நல்குதெய் வத்திற்கும் வாத்தியான் றனக்குஞ்
சிரத்தை யின்றித்தீங் கிழைத்தன னிவன் றீட்டு
மரத்திற் கூர்மைபார்த் தவனென மகியுரைத் ததுவே.

வாத்தி யானிறத் தலுமவன் மகன்சட கோபன்
றோத்தி ரஞ்செய்தாண் டான்மலர்த் துணையடி தொழுதா
னாத்தி ரங்கொளே லெனக்கெய்துந் திருவெலா மளித்துன்
காத்தி ரம்புரப் பேனெனக் கட்டுரைத் தனனே.

அங்கு விட்டுத்தன் மனைக்குச் சென் றானவ னண்ணன்
றொங்கு பீசகோ சந்தெரி தரச்சுவர் வைத்தா
னங்கு போலவை **யற்றுவீழ்ந் திடும்படி நவின்று**
கங்கு னேரெம புரம்புகக் கடிதனுப் பினனே.

கதுமெ னச்சொலும் படியெலா நடத்திடற் கண்டு
பதுமமின்னருள் பெற்றசில் செல்வர்தாம் பயந்து
புதுமை யார்சிவி கையும்பிற பொருள்களுங் கொடுத்தா
ரெதுவ மச்சட கோபனுக் கோயினி தீந்தான்.

திடமிகுந்தவர் வாழ்வுறு ***சீவலப் பேரிச்***
சுடலையென் றொருதேவதை யாங்குறு தொடிக்கை
மடநல்லாளொரு கணிகையன்னவட் டொடர்வழக்காற்
புடவிமானிடர் விழைவுறாவணம் பொலிந்தனளே.

அவளைக் காண்டலு மச்சடகோபன்மாலாகி
யிவளைச் சேர்ந்தலதமைவுறே னெனவுரைத்திட்டான்
கவளவேழமன்னானொர்பாக் கடிதவனுய்த்துத்
திவளவேயெவட் புணர்ந்திவனுய்வுறச் செய்தான்.

பலபல்பேயொடு பிணஞ்சுடுகாட்டி டைப்பயில
வலவன்றேவதை தானுமச் சுறுமெனின்மற்றார்
நிலவுறழ்ந்தபற் காளிதன்னருள் கொடுநித்த
மலர்விளைக்குமாண் டான்கவிக்கஞ்சுறாதவரே.

அனையபாக்களின் பொருள்களை முன்முறை யமைத்துப்
புனைகிலேனவற் றோடியப் பொலிவுறற் பொருட்டால்
வினையுந் தெய்வத்தி னருளுமே மிகுவலிதரினுங்
கனைகடற்றலத்திடக்கர்க ளடக்குதல்கடனே.

சிவிகை மீதவன் றன்னைவைத் தருகினிற்சென்று
புவியி லுள்ளவர் புகழவுங் கேட்டனன் புனலிற்
குவியுந் தாமரை மலர்தொறு மவனிவற் கும்பிட்
டவிய வெண்மிசை கவிசொலே லெனவறைந் தானே

பாடல் கூறிடே லெனத்தினம் பணிந்தவன் றன்னை
யாடல் போன்றிரா சாவென நீட்டியே யழைக்கில்
வீட லுற்றன னினையபல் விதங்களும் பாண்டி
நாட திற்குடி யிருப்பவர் நன்குரைப் பாரே.

**வாழ வல்லநல் லூர்**வௌர் மனிதர்கேழ் வரகுக்
கூழ் தேபொரு ளாக்கொளற் கொருகவி கூறிச்
சூழ லார் **சொக்கப் பழங்கரை** சோற்றினுக் கலந்து
வீழ லேதொழி லாயதென்றொன்றும் விண் டனனே.

**குருகை யூரி**னாழ் வார்தம தடியவர் கூடிப்
பொருவில் செந்தமிழ்க் கெடுப்பதற் கொருகவி புகன்று
பெருகு **பேரையூர்ப்** பெண்ணொருத்தியின் பிழை கண்டு
மருவு மந்நகர் மாதரார் பலரையும் வைதான்.

மைந்தரர்மென **மங்கலக்குறிச்சியில்** வாழ்வா
ரெந்தமாதரைச் சேரினுஞ் சேர்வரேயென்றா
னந்தமார்பெருங் **கருணையூர்க்** கூத்தப்பட்டன்றன்
சொந்தமாமனை வியைச் சொலாவாறு தூடணித்தான்.

குலைவுறார்மரு வியபட்ட**க் குறிச்சியின்** கொடிக்கா
லிலைக ரிந்திடு மாறொரு சாபமீந் திட்டான்
**விலையில் கூழொடு மோர்கரைத் துதவுமெல் லியன்மேற்**
புலையர் பேசிடுஞ் சொற்கொடோர் புன்கவிபுகன்றான்.

வடிவு **தன்மனை தீப்பட** வரைக்கவி வகுத்தந்
நெடிய வேல்விழி யாண்மிசை நேயமிக் குள்ள
கொடிய னானவேண் டவௌர்ந்தான் குடியொடு சீரு
மடியி னோடுகெட் டிடவரைக் **கவியுரைத்தாதனே.**

ஊருக் குள்ளுயர் **புடைமரு தூரென** வெடுத்துப்
பாருக் குள்ளவர் தனைப்புகழ் மேன்மை யும் பகர்ந்து
நீருக் குள்ளொரு **கையிடு நேரிழை மான**
மாருக் குந்தெரிந் திடும்படி செய்தன னந்தோ.

வெள்ளு ரத்தினு லிரண்டுவே **ளாளர்தம் மீதி**
லுள்ளு வட்புறீஇ யொருகவி யோதிடத் துவக்கி
யெள்ளும் பாழுறம் விழுந்ததாற் கெடுதிகண் டிடைந்தான்
கள்ளு நெஞ்சக மறைற்கிலை யெனற்கதோர் கரியே.

பாருண் மிக்கதென் பாண்டியி **லுளபனஞ்சாடி**
யூருள் வாழ்பவர் தினந்தினம் வயல்வரப்புற்று
நீருடன்மலங் கழித்திடுங் கொடுமையை நேர்கண்
டியாருஞ் சொல்லியே நகும்படி யொருகவி யிசைத்தான்.

மணஞ்செ யோர்மனை யினரிவன்றனைமதித் திலரா
யெணஞ்செ யின்னலும் விளைத்ததால் **வள்ளியூ ரிறைதன்**
வணஞ்செய் வாளியே விடும்படி சொலிமண மகனைப்
பிணஞ்செய் தானிவன் கவிவிடத் தினுமிகப்பெரிதே.

மெய்ய ராவெழுத் தாறையு மிகைபட மொழிவா
ரைய மெய்துறச் சோதிக்கு மறுமுகத் தமலன்
பொய்ய னென்பனென் றவன் சொலுஞ் சொலைப் பொருட்படுத்திக்
கைய கத்துறு சணைவிடுத் திடல்கணிக் கரிதே.

உட்டி **ணஞ்செய்செட் டிகுள** மென் றுரைக்குமோரூரிற்
றட்டிலாமலே தினஞ்சிறு சரக்குகள் விற்குங்
**குட்டி செட்டியா** னையுங்குதி ரையும் வரப்பாடிற்
கெட்டியிப்புல வோனெனக் கிளத்துவே னெனலும்.

அவன் மகட்கொடு போய்ப்புணர் வதற்கவை வருமென்
றெவள வோசினத் துடனொரு **கவியிசைத்** திட்டான்
கவனமுடவ ளிராப்பக லங்ஙனங் கண்டு
புவனி யோர்வியு விடமிகப் புலம்பிமாய்ந்தனளே.

**மதுரை யூரினுக்** கேகின னொருவிலை மடந்தை
கதுமென் றின்னவற் கண்டெழுந் திராவிதங் கருதி
யிதுசொன் னானெனச் சொல்லாநா ணிடுங்கவி யிசைத்துப்
புதுமை யாயிரந் **திகழெழம புரம்புகுத் தினனே.**

நயந்த சொற்சொல லறிகிலா னழலிடை நண்ணு
மயந்த னைப்புரை சொற்கொளும் வசைகவி யாண்டான்,
வியந்த வேடமில் லானவன் றானொரூர் மேவிற்
பயந்து சிற்சில ரோடலுண் டென்னவும் பகர்வார்.

இனைய வாஞ்சிறு கதைகளைத் தனைகளோ வசைப்பா
ரனைய மட்டுநா னறிகிலே னறிந்தமட் டுரைத்தேன்
பனையை நேர்சில பெருங்கதை யுள்ளன பகர்வேன்
றினையை யொத்துநா வலரைபெண்ணார்திடுக்குறவே.

## வேறு

கேரளத்து மன்னவனைக் கண்டுவரவேண்டு மெனக்
கிளர்சில் லோரோ
டேகன்று நாடகன்று நாஞ்சினா டதன்முகப்பி லுற்றானங்கு
சாரணர்சிற் சிலரறிந்தம் மன்னனெதிர் போய்ப்பணிந்து தழலு மஞ்சுங்
கோரமுறும் வாக்குடனின் னான்வருகின் றானெனுஞ்சொற்
கூறினாரே.

அக்கணமாங் கவனடுங்கி முதலமைச்சன் றனையேவி யையநீயிங்
கெக்கடமை விதித்தாலுஞ் செய்கின்றே மெம்மிறைவற் கெதிர்வா
ராமன்
மெய்க்கவியொன் றும்பகரா தேகுகெனப் பணிந்துமிக
வேணடச்செய்தான்
சக்கரையோர் பாரமதி தோறுமனுப் புதிரெனுஞ்சொற்
சாற்றிப்போனான்.

வில்லுடையார் பலர்சூடி வேழமுத லியகொடுபோர் விளம்பினாலுங்
கல்லுடைய மனத்தினனாக் களிகூரு மன்னர்பிரான் கனலே போலுஞ்
சொல்லுடைய வாண்டான்றன் வரவுரைத்த போதுதுடி
துடித்தானானா
லல்லுடைய குழற்றிருமின் கலைமினெனு மிருவரின் மே லாரோர்வீரே.

ஒருமாத முற்றிமற்றொன் றுதித்திடுநா டொறுமோட்டப் பிடாரஞ்சோ
வருமாந்த சருக்கரையாண் டாப்புலவற் கவ்வரச னனுப்பா நின்றான்
வருமாந்தர் பலர்க்களித்தான் வைகுந்தநாதனெனும் வண்போர்த்
தந்தை
தருமாறொர்தினத்திப்வெகு தரங்கேட்டான் மிகக் கொடுக்கிற்றான்
கொள்ளாதே.

நக்கவரிசித்தவிடோ டுடுப்பதற்குத் துணியு மின்றி நாட்டிலுள்ளோ
ரொக்கவருந் திடும்பஞ்ச காலத்திற்சிறிதேனு முணர்விலாமற்
சக்கரை சக்கரையென்றேசினுங்குதற்குத் தலைப்பட்டா
யெனும்பாச்சொன்னா
னக்கணத்தி லவன்றலைபடீரெனவே வெடித்துயிர்
போயகன்றதம்மா.

தந்தைதலைதன்கலியால் வொடித்த தெண்ணித்தானுமிகத்
தளர்ந்துநொந்தான்
சிந்தையறியாதவினை விளைக்குமிந்த வாக்குமொரு செல்வமாமோ
நிந்தையெனும் பெருங்கடற்கோ ராதார மெயாகி நிகழ்ந்த தந்தோ
விந்தைபெறு மெய்யுணர்வே யரியபய னெனப்பலரும்
விளம்பினாரே.

இளம்பருவத் துறவாளர் பலர்கூடி மலையாழத் தியன்ற
மாதர்
வளம்பகர்தி யெனக்கேட்ப வவரையெலாம் **பேய்களெனவை**
தப்பாட்டிற்
களம்படுநஞ்சினர்காந்தீச் சுரத்துவடிவெனுங் **கணிகைகல**
வியின்பம்
விளம்பரிதுவெல்லத்து மிச்சந்தேனமுதினிலு மேலென்றானே.

அன்றுசிவன புரமூன்று மெரித்தபொழு தொரு
மூவர்க்கந்தவெந்தீ
நன்றுபயந்ததுபோல **வாற்றூரிற்** சோமியெனு நாரிமேனி
பொன்றுமழகான் முகுந்தன் மாலானான் பிரமன்மட
லூர்ந்தான்மாரன்
றன்றுகமருருவழிந்தா னென்றானங்ஙனஞ்சிறிதுஞ் சாற்றி
னானே.

எத்தகைய தீமையினு நன்மையுஞ் சற்றிருக்கு மெனற்கி
ஃதோர்சான்றா
மத்தகையநன்மையினுந் தீமைநுழைதலின் சாட்சியாரா
யுங்காற்
பத்தருக்கே யெளியனெனப் பலசமயநூல்வகுக்கும்
பரமாமுன்னோன்
செத்தபிணந் தின்பார்க்குஞ் சிறதருள்செய்கொடுமை **யினைச்**
செப்பலாமே.

அன்னவன்வாழக்கிரா கரத்திலொரு நூலிழந்த
வரிவைதானோர்
சின்னவுருவுடைப் **பசுவின் கன்றினுக்குப்பாலுணவு**
சிறிதுமின்றித்

தன்னதுகையாற்கறந்து கொன்றிட்டாளதுகுறித்தோர்
**தனிப்புராணம்**
பன்னரிய கற்பனையு மலங்காரங்களுந்தொகுத்துப்
பாடினானே.

ஆங்கொரு கோயிலிற்பணிசெய் **கணிகையர்செய்**
குற்றங்களவைபொறானாய்
வேங்கொடுங்கண்ணதிகாரி வெயிற்போதுமண்டபத்தின்
மீதேயுய்ப்பப்
பாங்கொருசிற்றருவியென வவர்பெய்சிறுநீர் விழுதற்
பார்த்ததாலே
தேங்கொலிச் **சொன்மடலொன்** றுபாடினான் வினவினர்
தாஞ்சிரிக்குமாறே.

ஆளியற்கை யுறுந்தனது நன்செயை யவ்வூர்க்**கணக்க**
**னளக**க்கவந்தா
னீளியகையினிற்பாம்பு கடித்திடச்சொன்னான்கடித்து
நெஞ்சஞ்சானாய்
வாளினால்விரற்குறைத்துவிடமேறாமையிற்பிழைத்துமனை
போய்ச்சேர்ந்துங்
**காளிமடலென்**றென்று பாடியவன்றனைக்கொன்றே
களித்தானம்மா.

**கண்ணரியபுகழ்ச்சிந்துக் களஞ்சிய**மென் றொரு புலவன்
கடல்சூழ்பாரி
லெண்ணரியபுலவர்களுக் கிடர்விளைத்துப் பொருள்வரி
கொண்டிலங்கலுற்றான்
பெண்ணரசாவுமையாண்ட பெருநாட்டுமத்தகவே பெரிது
செய்தான்
றிண்ணமுறுசிலபுலவ ராண்டானைத் தொழுதவன்பாற்
செலவுய்த்தாரே.

செல்லும்போதொருதேங்காய் கைக்கொடு போயுட னிருந்து
திண்டிற்சாய்ந்தா,
னொல்லுமிவனாரெனவன்னவன் சீறிப்பார்த்திடலு
மூலப்பிலாத,
நல்லுரைபோன் றாறிப்பா ரெனவெ டுத்துவேற்றொலியா
னாணச் சொன்னான்,
வெல்லுமென்போற் சிந்துகள்பாடி டுவாயோ வெனவவன்
றான்வினாவினானே.

கொண்டுவந்ததேங்காயை யவன்முன்வைத்துப் பார்த்தி
யெனக் கூறியப்பாற்,
றுண்டுதுண்டுடென் றடுக் கொலிச் சொற் சிலசொன்னானத்
தனை துண்டாயிற்றந்தோ,
கண்டு கொண்டாயோவினந் தலையுடைக்க வல்லாயோ
கழறுகென்றான்,
மண்டுபயமுற்றெழுந்து வணங்கியவன் முன் புவந்த
வழிச்சென்றானே.

பத்திவைராக்கியஞானங் கல்விமுதலாயநலம் படைத்திட்
டாலுஞ்,
சித்தியொன்றும்பெற்றிலனேற் செயமடையா னென்பதற்குஞ்
செகத் தோரெள்ளு,
மெத்திறத்தீங்கின னெனினு மேதேனுந்தெய்வசித்தியெய்
திச்செய்யுஞ்,
சத்தியடைந்தாலெதிர்த்தோர் தமைச்செயிப்பா னெனற்கு
மிதோர் சான்றாமம்மா.

**நீட்டாண்மைப்பெண்ணொருத்தி** யுனைக் கொடுப்பேனே
யெனமுன் னிகழ்த்தக்கேட்டுக், சொல்லியுடன்
கொன்றானந்தப்
பாட்டாளன்காளமே இப்புலவனெனச் சிலர்தாம்
பகர்வாரன்றே
காட்டானை போன்றமுலைக் காரிகைநீ பெற்றெடுத்துக
கண்போற் காக்குங்,

திசையறியுஞ்சிருட்டிசெயப் பிரமாவில்வலி யோனுஞ்
சீவகோடிக்
கிசையுநலஞ்செய்தளிப்ப நெடியோனிற்பெரியோனு மிய
வுமாய்ப்பத்
தசைகுலவுமூவிலைவே லுருத்திரனிற்சீரியனுஞ் சாற்
லாமேல்
வசைபகருந்தொழிற்றலைமை யாண்டானல்லா லொருவன
வகிகக்கலாமே.

தென்பாண்டி நாட்டிலுறு கைத்தாற்றுக்கடிகைநகர்த
திரு மால்கோயின்
முன்பாகச்செயுமேகா தசிவிழவில் வயிணவர்தம்
முறைமைதன்னா
லன்பாளனெனவிழுத்தாண் டானையுஞ்சீர்பாதந்தாங
கவரிற்சேர்த்தார்
வன்பாகச்சுமந்தலுத்து வருத்தமிகலாலொர்கவி வகுத்த
ட்டானே.

பாளைமணங்கமழ்ந்திருக்குங் கைத்தாற்றுப் பெருமாளே
பழிகாராவென்
றேளையறமுறித்தாயே நம்பியானையுங்கூடச் சுமக்கப்
போமோ
வேளையிதில்விழுந்தொழிவாய் நாளைவரோஞ்சுமக்கவென
விண்டானந்
தேளைநிகரவன்வாக்குப்படலுமதிலிருந்தகலை சிதைந்த
தம்மா.

அக்கணமச்சப்பரந்தான் முறிந்துவிழுந்தது பலரு
மகன்றுபோனார்
மைக்கடுக்குமிருளடைந்தக் கோயிலும்பாழாயதின்னு மாற
வில்லை
யெக்கவிஞனதை மாற்ற வல்லானோவறிகில்லே னியம்புமந்த
மெய்க்கவிச்சொற்படியவன்றோண்முறிந்துவிழாதேயிருந்த
மிதமென்னேயோ.

T5142



சாலவுபாசனைபுரிவார் தம்முடைத்திற்றங் கருளே
தலைமையாகு
மாலயத்துத்தேவர்களு மத்துனைவாய்த்தாற்பெரிது
மாடல்செய்வார்
மாலடியார்குலத்துதித்து மவன்கோயிலைக் கெடுத்தல்வம்
பேயன்றோ
நீலநிறப்பாவமிகச் செய்தவெலாநினைத்தொருநா ணெடிது
நேர்ந்தான்.

ஏதுக்கிவ்வுடலெடுத்தோமினியெவ்வாறுய் வமென வெண்ணி
யெண்ணில்
சோதுக்கட்களையனைய தயரதராமன்சொன்மொழி தன்னை
நம்பிச்
**சேதுக்குப் போய்முழுகச் சிந்தித்துத்தனைத்தினமுஞ்**
சேர்வாளாமோர்
மாதுக்குக்காவல்வயி ரவனுமாடனுமெனும்பா வழங்கிப்
போனான்.

அன்றுதொட்டம்மகளருகி லாடவர்சென்று சிரத்தங்
கான்றப்போதே
பொன்றுதலுற்றுரதுதான் புலியேகாதசிவிரதம் புரிதல்
போன்ற
தென்றுமெலரெதுசெய்ய வந்தனரோவதுதான்செய் திடுவ
ரென்கை
யொன்றுமெய்யாய்முடிந்ததவன்வந்ததுகேட்டளவறநொந்
துளஞ்சோர்ந்தானே.

அச்சேதுண்டாவதன்முன்னிகழாதிச்சேது செந்தூ ராமென்
றோமற்
றெச்சேதியாலோவங் கேகியிருதலத்துமுறு மெழில்வெற்பேறி
மைச்சேலுண்கண்ணொருத்தி மாதவிடாய்க்காரியவண்
மாட்டுச்சென்று
கைச்சேட்டை செய்தகந்தா வென்னவொரு பல்லவந்தான்
கழறினானே.

அந்தவொலியெழலுமெதி ரொலியெழுந்தாங் **கசரீரியடடா**
போது
மிந்தமட்டினிறுத்திலையேலின்றுனுயிர்க் கிறுதிவரு
மினியிப்பாரின்
மைந்தர்பலர்க்கெமனெனவாழ் கலைகடிதுவிண்பதிபோய்
வசிப்பாயென்ற
தெந்தவிதத்தலத்துமிது கண்டதின்றென்றஞ்சி வெள்
கியேகினானே.

போம்வழிமுற்றுறுமுனமே யவனாவிலொரு **கொடிய**
**புண்ணுண்**டாயிற்
றாம்வழிநோக்காமலழி வழிநோக்கிக்கெட்டேமென் றயர்ந்து
வீழந்து
சாம்வழிநோக்கிக்கிடந்தா னொருவருமாங்கவனருதிற் சார
வில்லை
வேம்வழிபாட்டேதேனும் விளம்புவானெனப்பெரிது வெரு
விமாதோ.

அவனாவிற்புழுத்திரளுண் டாயதென்றுஞ் சிலர் மகிழ்வுற்றறை
வாரந்தோ
தவளாங்கத்தவளிருந்த தலத்தவையுண்டாமெனநான்
சாற்றமாட்டே
னெவனோவங்கவனுயிர்போம் பொழுதுமறைந்திருந்துபார்த்
தனனாமெங்கே
குவனியானென்றுரைத்தொருபெண்குதித்தோடினாளெனங்
கூறுவாரே

அன்னவனாவினிலிருந்து விளையாடினாள் செயலென்
றறிவார்சில்லோ
ரின்னவனிக்கொடுமையெலா மியற்றினனென்றேதுணிவுற்
றிகழ்வார்பல்லா
ரென்னபயனிதனாலுண் டாயவெனிற்றமிழ்ப்புலவ ரேற்ற
ந்தானு
மன்னர் முதலோரவரிற தாழ்ந்தவரேயெனுநிசமும்
வயங்கறானே.

வல்லாண்மைக்கொடும்வாக்கின்வசை கவிதை யாண்டானுன்
மாய்ந்தமாந்த
ரெல்லாருமெனையரெனி லிராகவனாதியவீர ரேந்துந்
திண்கை
வில்லாலுந்துருவாச முனிமுதலாகியமேலோர் வெகுண்டு
சொன்ன
சொல்லாலுமாய்ந்தவரே யனையரென்கைமுக்காலுந்
துணிவுதானே.

வாக்குவலிவெகுவாகப் பெற்றரியவண்ண மெட்டும் வழங்கு
வார்க்கு
மாக்குவதுமழிப்பதுவும்பெறலரிதென் றுணர்ந்தோரேயாண்
டான்சொற் போய்த்
தாக்குமதிசயமறிவார்தவஞ்சிறிதுமுயலாராய்த்தருக்
கங்கற்றுப்
போக்குவரவுணராமற் புலம்புமிளங்கவிஞருளம்
புகுந்திடாதே.

திரிமூர்த்திகளின்பெயரும் வாகனமுந்தல முநுகர்
திற்றிதன்னோ
டரிதாயகறியுமணி களும்படையுமொருவெண்பா வதனு
ட்சொன்ன
பெரியோனாங்காளமே கப்புலவனிலுமாண்டான் பெரி
யோன்கண்டீ
ரெரிபோலுங்கவிபொழிந்திட் டீனர்குலமறக்கெடுக்கு
மியல்பிலம்மா.

இருநிலத்துற்றார்பலரு மெமனிலும் பொல்லானெனவே
யிதயமஞ்ச
வருள்வலியாற்கவிபாடி யம்மைபதம்புகுமாண்டா னாற்றல்
சொன்னேன்
மருவுமனையவளன்றி மற்றமடவார்கலரு மாதாவென்றோர்
பொருவில்பிரமாணநுவல் வீரபாண்டியப்புலவன் புகழ்
சொல்வேனே.

## இணைப்பு 2
## தனிச்செய்யுட் சிந்தாமணியுள் இடம்பெறுபவை

### *ஆவுடை என்னும் தாசிக்குப் பொட்டுக்கட்டியபோது பாடியது —*

*நீண்டபி ரான்கட்டி னான்றிரு மாதுக்கு நெட்டரவம்*
*பூண்டபி ரான் கட்டி னானுமை மாதுக்குப் புண்டரிகம்*
*மூண்டபி ரான்கட்டி னான்கலை வாணிக்கு முன்னற்சிக்கல்*
*ஆண்டபி ரான்கட்டி னான்றிரு நாணிந்த வாவுடைக்கே*

*பேசிக்கல் லாரமுந் திங்களும் போனட்புப் பேணியாரை*
*வாசிக்கல் லாலரைக் காசுங் கொடார்கடன் வாங்கினதை*
*யேசிக்க லாக வெடாதுவி டாரிவ ரென்ன சென்மம்*
*சீசிக்க லாருற வாகாது காணிச் செகத்தென்றுமே*

*உக்காரணப் பையனுமோ வொன்றுதந்தா லொன்று தரான்*
*அக்ராரச் சேஷியுமோ அப்படித்தான் — இக்கறியில்*
*உப்பா புளியா ஒருகறியு நீர்மோரும்*
*அப்பாவி தாராளே யாம்*

*வாயெரியக் கையெரிய வயிறெரியச்சட்டி வைத்து வறுத்துக் கொட்டிக்*
*காயெரியக் கடினமுடி னரைவயிற்றுக் கன்னமிட்ட கடினக் காரி*
*தாயெரிய மகளெரியச் சேஷியெனு மொட்டடை முண்டை தலைமேற்பற்றித்*
*தீயெரியக் கண்டக்கா லென்னுடைய வயிற்றெரிக்க நீருந்தானே*

*காணைநகர் கண்டேன் கன்மவினையைத் தொலைத்தேன்*
*ஆனைமடு விற்றீர்த்த மாடினேன் —ஞானம்*
*பொருந்தினேன் காளீசர் பொற்றாமரையில்*
*வருந்தினேன் பெற்றேன் வரம்.*

*(தனிச்செய்யுட் சிந்தாமணி பக். 375—75)*

## இணைப்பு 3

### டாக்டர் உ.வே. சாமிநாதையர் தொகுத்தவை

சேலடி பட்டு வராலுக ளும்குரு கூரிற் சென்று
மாலடி போற்றி வினியோகம் வாங்க வணங்கி நின்றேன்
வேலடி பட்டது போலே கதவடை யானைவிட்டுத்
தோலடி சாதிப்பர் வேண்டாமென் றாலுந் துரத்தி வந்தே

ஆறுமுக மங்கலத்துக் காரொருவர் போனாலுஞ்
சோறுகொண்டு போங் கோள் சொன்னேன் சென்னேன்

ஆற்றோடே போனாலு மாத்தூரோடு போகாதே

என்னைச் சுமக்க வறியாய் சுமக்கு மியல்பறியாய்
பொன்னைப் பறித்துக் கொடுத்தா யொருகட்டுப் புல்லுந் தின்பாய்
பின்னைச் சவுக்கடிக் கஞ்சா யடிக்கடி பேண்டுகொள்வாய்
உன்னைக் குதிரையென் றேபடைத்தான் மலருள்ளவனே

நக்கத் தவிடற் றுடுக்கச்சி லையுமற்றிந் நாட்டிலுள்ளே
எக்கப்ப டும்பஞ்ச காலத்தி லேயுள் ளறிவுகெட்டுச்
சிக்கையில் வைகுந்த நாதாசவலைச் சிறுபிள்ளைபோற்
சர்க்கரை சர்க்கரை யென்றே சிணுங்கத் தலைப்பட்டையே

காருக்குத் தீய்ந்துவிடுங் கார்போய்ப் பிசானம்வரி
லூருக்குள் வெள்ளமெடுத் தோடுமே பாருக்குள்
ஆற்றுக் கடுத்தவூர்க் கரையி னின்றவூர்
சோற்றுக் கலந்தவூர் சொக்கப்பழுங் கரையே.

கானை நகர்கண்டேன் கனமவினை யைத் தொலைத்தேன்
ஆனைமடு விற்றீர்த்த மாடினேன் – ஞானம்
பொருந்தினேன் காளீசர் பொற்றா மரையில்
விருந்தினேன் பெற்றேன் வரம்

## இணைப்பு 4

### இரட்டையர் பாடிய வசைப்பாட்டு

ஒருகாலித் தண்டலம்வாழ் ஓமலிநா தன்வீடு
இருகாலும் பற்றி எரிக — அருகாரும்
கம்பத்தான் வீடும் கலந்தெரிக மற்றிவர்கள்
சம்பத்தெல் லாமொழியத் தான்

### காளமேகப் புலவர் பாடிய வசைப்பாடல்கள்

என்னைக் கொடுத்தா விரக்கமுனக் குண்டாமோ
வன்னக் கமலமுக வல்லியே — துன்னுமதக்
காட்டானைக் கோட்டுமுலைக் காரிகையே நீபயந்த
கோட்டானைத் தானே கொடு.

தண்டங்கூர் மாசனங்காள் சற்குண " ரென்றிருந்தேன்
பண்டங் குறையவிற்ற பாவிகாள் — பண்டுகளைத்
தேடியுண்ண விட்டீர் தெருக்கள் தெருக்கடொறும்
ஆடிமுத லானிவரைக் கும்.

அன்னவயல் சூழ்ந்திருக்கு மாரூரா னெஞ்சத்தில்
இன்னம் வயிர மிருக்குமோ — முன்னமொரு
தொண்டன்மக னைக்கொன்றுஞ் சோழன்மகனைக்
கொன்றும்
சண்டன்மக னைக்கொன்றுந் தான்.

கோள ரிருக்குமூர் கோள்கரவு கற்றவூர்
காளைகளாய் நின்று கதறுமூர் — நாளையே
விண்மாரி யற்று வெளுத்து மிகக்கறுத்து
மண்மாரி பெய்கவிந்த வான்.

செய்யாத செய்த திருமலைரா யன்வரையில்
அய்யா வரனே யரைநொடியில் — வெய்யதழல்
கண்மாரி யான்மதனைக் கட்டழித்தாற் போற்றீயோர்
மண்மாரி யாலழிய வாட்டு.

கலங்கற் றுறையதனிற் காராளர் போதத்
தெலுங்கப்ப நாரணன் தெண்டிக்கச் — சலம்பெருகி
நட்டாறு கொண்டுகரை நன்றா யுடைந்துநீர்
கட்டா தெழிதல் கடன்.

## இணைப்பு 5

### ஆண்டான் கவிராயன் பாடல்கள்

### வாய்மொழியாக வழங்குபவை

குளிர்ந்தபதி நட்டாத்தி ....
குடிக்கத் தண்ணீர் இல்லே.

மங்கலக் குறிச்சி மடை பாழ் பாழ்.

வண்டாளம் பூக்கும் வாளவல்லான் நல்லூரில்
கொண்டாடிக் கொண்டாடிப் புகழும் — திண்டாடி
..............................
குடிப்பது கூழ்வரகு.

ஆழ்வார் திருநகரி மேலமாடவீதி மண்.

மதம்பெருத்த மயிலோடைச் சாணான்
அடிமெத்தப் படுவான்
மனை இருக்க மறு இடம் போவான்.

நந்தி குரும்பூர் நாடாக்கள் தம் வழக்கு
வந்து பிடித்தால் வழக்கொருநாள் தீராது
நந்திகுரும்பூர் நாடாக்கள் தேடும் பொருள்
பிஞ்சிக்கும் பிற்கிளைக்கும் எட்டாது.

மாறிமாறிப் பேசும் மாரிமுத்துப் பலவேசம்
கீரை தழைக்காமல் கிருபைசெய்வாய் ஆறுமுகனே.

ஊரைச்சுத்தி நல்ல தண்ணீர்
ஊருக்குள் உப்புத் தண்ணி
போடா துலுக்கா

காத்தடிக்க கந்தனை முக்க .....

கந்தனைக் காக்க காற்றமர ......

மூவர் பல்லக்கு மூலையில் சாத்த
முருகன் பூசை முக்காலமும் எக்காலமும் நடக்க
பூசைவையடா.

சாமியோ தகப்பன் சாமி தண்ணியோ உப்புத்தண்ணி
காடோ கத்தாளங்காடு ....
உனக்கு பிறக்கும் பிள்ளையெல்லாம் தேவரடியாள் பிள்ளை.

குட்டத்துநாட்டாரும் காயங்குளத்தாரும்
இட்டது சட்டம் ...

குட்டம் கொடு கொடுஎன்க
கொம்மடிக் கோட்டைநடு நடு என்க
அச்சம்பாடு பணம் விளைய
அரசூர் பூச்சிக்காடு அழிய அதிகநாள் செல்லுமோடா?

மேலக்குத்துக்கல் விளையான் விளங்குங்குடிக்கு ஆத்தா ரான்
பூலாங்கண்ணி முழுலோபி புலவன் முக்கால் லோபி
வாத்தியான் அரைலோபி கடலோடி காலோபி
மற்றவர்கள் அரைக்கால் லோபி மனை இருக்கக் குடி
போகும்.

அண்டம் திறந்தது கண்டங் குடியிருப்பு
அநியாயஞ் செய்தது அம்மன் புரம்
கோள் சொன்ன, கீழ்ப்புதுக்குடி
குட்டி அழித்தது கூரந்தான் விளை
இருந்து சாப்பிடும் மேலப் புதுக்குடி.

சேதுக்குச் சென்று திரும்பி வரும் வரை
மாதுக்கு மாறும் இருளனும் துணை.

## இணைப்பு 6
## காணியாளன் புதூர் ஓலைச் சுவடியில் உள்ளவை
## ஆண்டான் கவிராயன் சொன்னது

பாளைமணம் கமழ்கின்ற கயற்றாற்றுப் பெருமாளே
பாவி பழிகாரா கேள்
வேளையென்றால் இவ்வேளை பதினாறு னாழிகைக்கு
மேலாயிற்றின்று நான் உன்னைச் சுமந்து
தோள் முரிந்ததுமன்றியுமுன் நம்பியானைக் கூட
சுமக்கச் செய்தாய் இனி
நாளை சுமப்பது யார் யென்னாளும் உன்கோவில்
னாசம் தானே.

நீ(ர்)ரெல்லாம் சேற்று நாற்றம் நிலமெல்லாம் கல்லும்
முள்ளும்
ஊ(ர்)ரெல்லாம் பட்டி தொட்டி உண்பதோர் கம்ப(ன்)ஞ்
சோறு
பே(ர்)ரெல்லாம் பொம்மன் திம்மன் பெண்களோ நாய்யும்
பேய்யும்
காருலாங் கெ(ர)ங்கை நாட்டை யினிக் கனவிலும் நினைக்க
வொண்ணாது.

குட்டம் குடு குடுங்க
கொடுமுடிகோட்டை நடுநடுங்க
தட்டான் மடம் தட்டழிய
உவரி திணை விளைய
அரசூர் பாழடைய.

சீதேவி செங்கொடியிடந்தனிலே ஒரு குத்து முருங்கைக்குழை
கேட்டேன் அவன்
மூதேவி முத்தன்கிட்ட சொன்னான் – அவன்
காலன் குடியிருப்புக்குப் போரேன் யென்றான் – அவன்
காலன் குடியிருப்புக்குதான் போனானா – அவன்
காலம் குறித்தானிடம் போனானாம்.

கானல் பறக்குதடா கல்லான் மொழி – அது
வேனல் பறக்குதடா வெட்டா வெளி

*பாதகரை தோட்டம் பலவேசம் ஆறுமுகம்*
*மாறி மாறி பேசுகிறான் மாரிமுத்து ஆறுமுகம்*
*கீரை தழையாமல் கிருபை செய்வாய் வேலவனே*
*(சோனகன் விளை சேர்நத திருமலையப்ப புரம்)*

## அண்மையில் கிடைத்த பாடல்கள்

1. *ஆதித்த நாடன் அன்று வைத்த தென்னம்பிள்ளை*
*பாதித்து வளர பாதியில் பட்டு விள.*

2. *மஞ்சக் கயிறு தெத்தி மாநாட்டான் தேடு முதல்*
*பிஞ்சுக்கும் பின்கிளைக்கும் எட்டாது.*

3. *பாத்திருக்க உண்டான் பாவிதான்*
*சங்கக்கோன் சாமிக்கோன்*
*மூத்திரக்குழியாய் அவன்வீடு முங்கிப்போக.*

4. *கா யலூர் இடக்குடி கட்ட மண்ணு*
*சூரங்கோட்டை சுத்தப்பாழ்.*

# ஆண்டான் கவிராயன் சென்ற ஊர்ப்பெயரகராதி

1. அக்கிரகாரம்
2. அச்சம்பாடு
3. அம்மன்புரம்
4. அரசூர்
5. ஆத்தூர் (ஆற்றூர்)
6. ஆறுமுக மங்கலம்
7. ஆழ்வார் திருநகரி
8. ஓட்டப் பிடாரம்
9. கந்தன் குடியிருப்பு (கண்டங் குடியிருப்பு)
10. கயத்தாறு
11. கல்லான்மொழி
12. காயல் பட்டினம்
13. காயா மொழி (காயங் குளம்)
14. கானைநகர்
15. கீழப்புதுக்குடி
16. குருகையூர் (குருகூர்)
17. குரும்பூர்
18. கூரந்தான்விளை
19. கொம்மடிக் கோட்டை
20. சிக்கல்
21. சீவலப்பேரி
22. செட்டிக்குளம்

23. சேது

24. பட்டாக்குறிச்சி

25. திருச்செந்தூர்

26. திருமலைபுரம்

27. தென்திருப்பேரை (பேரையூர்)

28. நட்டாத்தி

29. பனஞ்சாடி

30. பூச்சிக்காடு

31. பெருங்கருணையூர்

32. மங்கலக் குறிச்சி

33. மதுரை

34. மயிலோடை

35. மருதூர்

36. மலையாளம்

37. மேலக்குத்துக்கல்விளை

38. மேலப்புதுக்குடி

39. வள்ளியூர்

40. வாழவல்லான் நல்லூர்

# தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம்

3-342, குப்பம் சாலை, கொட்டிவாக்கம், சென்னை-600 041.

**அரிய தமிழ் ஓலைச்சுவடிகளிலிருந்து பதிப்பிக்கப் பெற்று ஆராய்ச்சி முன்னுரையுடன் வெளியிடப்பட்டுள்ள சில நூல்கள்**

| | | |
|---|---|---|
| 1. | மார்க்கண்டேயன் கதைப்பாடல் | ரூ. 47 |
| 2. | திருக்குற்றாலப் புராணம | ரூ. 47 |
| 3. | முப்புராதி அம்மன் கதைப்பாடல் | ரூ. 49 |
| 4. | அய்யனார் கதைப்பாடல் | ரூ. 40 |
| 5. | ஓட்டக்காரசுவாமிக் கதைப்பாடல் | ரூ. 30 |
| 6. | கம்சன் கதைப்பாடல் | ரூ. 35 |
| 7. | தமிழில் வசைப்பாடல்கள் | ரூ. 35 |
| 8. | மாரியம்மன் கதைப்பாடல் | ரூ. 45 |
| 9. | அருஞ்சுனை காத்த அய்யனார் கையேடு | ரூ. 45 |
| 10. | ஸ்ரீ பத்மநாப சுவாமி கதைப்பாடல் | ரூ. 49 |

தங்களிடம் ஓலைச்சுவடிகள் எது இருந்தாலும் இந்த மையத்திற்கு வழங்கவும்

T 5142
Acc. 24853